Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 20

JAFFNA COLLEGE ★ UNDERGRADUATE LIBRARY ★
11 MAY 1970

# ஈழநாடு

## வார மலர்

மில்க் வைற் சோப் விற்பனையாளர்களுக்கு!

ஓர் அன்பான

வேண்டுகோள்!

மில்க்வைற் சோப் 72 கட்டிகள் பார்சல் செய்யும் 25 ரூப்பர் தாள் சேர்த்துக் கொடுத்து ஓர் அழகான பத்திரப்பையை, (Documents Bag) அல்லது ஓர் அழகான துவாயை, எமது விற்பனை வான்களில் பெற்றுக் கொள்ளுங்கள். அல்லது 50 ரூப்பர் தாள் கொடுத்து ஓர் அழகான பிறேம் போட்ட சுவாமி படம் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற்சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்,

மலர் 12 சௌமிய சித்திரை 22 ஸார் 28 (5-5-70) செவ்வாய்க்கிழமை இதழ் — 83

### அழிவுப் பாதையிலிருந்து

# இணைப்பாட்சியே தமிழ் இனத்தைக் காப்பாற்றும்

## தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

(நமது சிறப்பு நிருபர்)

"இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் தம்மைத்தாம் ஆளக்கூடிய ஓர் இணைப்பாட்சி அமைப்பே நம்மை அழிவிலிருந்து பாதுகாக்கும். அந்த அமைப்பின் கீழேயே இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்கள் சிங்களமக்களோடு சமத்துவமாக, சுதந்திரத்தைப் பெற்று தன்மானத்தோடு வாழமுடியும்" என்று அகில இலங்கைத் தமிழரசுக்கட்சி வெளியிட்டுள்ள தனது பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் தமிழரசுக்கட்சி பொதுமக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை எவ்வளவு தூரம் காப்பாற்றியிருக்கிறதென்பதையும், அவ்வப்போது ஏற்பட்ட அரசியல் தாக்கங்களையும், பிரச்னைகளையும், இன்றைய அரசியல் நிலையையும், எதிர்காலத்தில் ஈழம் வாழ் தமிழ்பேசும் இனத்துக்கு எந்த முறையில் விமோசனம் ஏற்படும் என்பதையும், தமிழ்மொழியின் நிலை, குடியுரிமை, கல்வி, தோட்டப்பாடசாலைகள், அரசாங்கசேவை, இன ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு ஆகியன போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்தும் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவானவிளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

"தமிழ்பேசும் மக்களை இரண்டாந்தரப்பிரஜைகளாக்கி அவர்களின் தனித்தன்மை அழியக் கூடிய நிலையை ஏற்படுத்தியது இன்று இந்நாட்டில் நிலவுகின்ற அரசியலமைப்பேயாகும். பல்வேறு இனமக்கள் வாழும் நாட்டில் ஒற்றையாட்சி அமைப்பு இந்நிலையைத்தான் ஏற்படுத்துமென்பது அதே நிலையிலிருந்த ராடுகளின் வரலாறு நமக்குக் கற்பித்த பாடம். செக்கோஸ்லவாக்கியாவில் சமஷ்டிமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது இரண்டாண்டுக்குட்பட்டவரலாறு ஆகும்" என்று தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது.

தமிழரசுக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள்:

*1965-ம் ஆண்டுத்தேர்தல் முடிந்தவுடன் ஐக்கிய தேசியக்கட்சியும், கூட்டாட்சிக் கட்சிகளும் எமது உதவியை நாடின. எமது ஆதரவின்றி ஒரு நிலையான ஆட்சியை நிறுவ முடியாத நிலையில் இருந்தன. 1960-ம் ஆண்டு எமக்குக்கொடுத்த வாக்கை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி காப்பாற்றத் தவறிவிட்ட காரணத்தினால் ஐக்கியதேசியக் கட்சிக்கு ஒருசந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்ற கருத்து தமிழ்பேசும் மக்கள் மத்தியில் பரவலாக இருந்தது. எனவே முதலில் ஐ. தே. கட்சியோடுபேச்சுவார்த்தை நடத்தினோம். அக்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்காவுக்கும் எமது தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களுக்கும் இடையில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதன் அடிப்படையில் ஐ. தே. கட்சியோடுசேர்ந்து ஒரு தேசிய அரசாங்கத்தை அமைத்தோம். திரு. டட்லி சேனநாயகா எமக்கு உறுதியளித்த விடயங்களைத்தனை*

[2ம் பக்கம் பார்க்க]

## சுவீப் முடிவுகள்

நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

**முதல் பரிசு**

13 V 0259 ரூ.60,810-00

**இரண்டாம் பரிசு**

25 G 0693 ரூ 24,324-00

**மூன்றும் பரிசு**

10 F 0196 ரூ 6081-00

தலா 304 ரூபா 05 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 07 A 0116 | 23 A 0501 |
| 20 A 0898 | 03 B 0315 |
| 17 B 0806 | 09 B 0652 |
| 19 B 0694 | 02 B 0972 |
| 23 C 0309 | 20 C 0229 |
| 30 C 0344 | 04 D 0205 |
| 12 E 0920 | 08 E 0863 |
| 06 F 0241 | 11 F 0518 |
| 01 F 0495 | 27 F 0147 |
| 18 F 0899 | 22 F 0844 |
| 12 G 0966 | 10 G 0631 |
| 14 G 0330 | |
| 26 H 0482 | 07 H 0357 |
| 05 H 0769 | 07 H 0928 |
| 2[illegible] J 0919 | 30 J 0145 |
| 10 J 0371 | 28 J 0008 |
| 27 J 0320 | |
| 01 K 0568 | 02 K 0979 |
| 23 K 0855 | 29 K 0484 |

[14-ம் பக்கம் பார்க்க]

## பொலிசில் உள்ள ஆடு யாருடையது?

யாழ்ப்பாணம், செவ்
கறுப்பு நிறமுடைய ஆடு ஒன்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதைக்களவாடிச்சென்றதாகக் கருதப்படும் ஒருவரும் பொலிஸ் பாதுகாப்பில் உள்ளார்.

முன்னங்கால்களுக்கிடையிலும், உடம்பின் கீழ்ப் பகுதியிலும், வாலிலும் வெள்ளை நிறமுள்ள இந்த ஆட்டுச் சொந்தக்காரரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்,

# கொலைக்குப் பாவிக்கப்பட்ட இயந்திரத் துப்பாக்கி அரசாங்கத்துக்கு சொந்தமானதா?

## பொலிஸ்இன்ஸ்பெக்டர்ஜெனரல்சந்தேகம்

கொழும்பு. செவ்

செனட்டர் கே. எம். பி. ராஜரத்தினவுடன்சென்று கொண்டிருந்தஇருவரைச் சுட்டுக் கொலைசெய்வதற்குப் பாவிக்கப்பட்ட இயந்திரத் துப்பாக்கி அரசாங்கத்துக்குச் சொந்தமானதாக இருக்கவேண்டுமெனக் கருதப்படுகிறது.

பொலிசாரிடமிருந்தோ அல்லது இராணுவத்திடமிருந்தோ இது களவாடப்பட்டிருக்கலாமென பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக அபயகுணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கையில் இயந்திரத் துப்பாக்கி தனிப்பட்டவர்களிடம் இருக்கவில்லையென்றும், அரசாங்கத்திடம் மாத்திரமே இயந்திரத்துப்பாக்கி இருப்பதாகவும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கூறினர்.

கொலைசெய்வதற்கு இயந்திரத் துப்பாக்கி பாவிக்கப்பட்டது இங்கு இதுவேமுதல் தடவையென்றும், ஒரு வருடத்துக்கு முன்னர் கொச்சிக்கடை பொலிஸ் நிலையத்திலிருந்து களவுபோன இயந்திரத்துப்பாக்கியாக இதுஇருக்கலாம் என்றும் திரு. அலரிக அபயகுணவர்த்தன தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடியாவினுள் அமெரிக்கப் படைகள்

## உலக மேடை

**எஸ். எம். ஜி.**

கம்போடியாவுக்குள் அமெரிக்கப்படைகள் தென் வியட்நாம் படைகளுடன் சேர்ந்து புகுந்து அங்குள்ள வியட்காங்கியின் தலைமைத் தளத்தை நிர்மூலமாக்குவதில் ஈடுபட்டுள்ளன. இந்த முகாமிலிருந்துதான் வியட்காங்கியர் இதுவரை தென் வியட்நாம் மீது தாக்குதல் நடத்திவந்ததாகவும் இந்த முகாமை நிர்மூலமாகி விட்டால் தென்வியட்நாமிலிருந்தே அமெரிக்கப்படைகளை சுலபமாகத் திருப்பி அழைத்து விடலாமென்றும் அமெரிக்கா கருதுகிறது.

கம்போடியாவுக்குள் அமெரிக்கப்படைகளை அனுப்புவதற்கு அமெரிக்க அதிபர் நிக்ஸன் தனது முழுஅதிகாரங்களையும் பாவித்திருக்கிறார்சாதாரணமாகவேஒரு நாட்டுக்குப் படைகளை அனுப்புவதற்குமுன் செனட்டின் அங்கீகாரத்தை அதிபர் பெறவேண்டும். ஆனாலும் பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கப்பட்ட பணத்துக்கு அதிகமாகச் செலவு ஏற்படாதவரை. படைகளின் பிரதம தளபதி என்றவகையில் அந்த அதிகாரங்களைக்கொண்டு செனட்டின் அங்கீகாரம் பெறாமலே படைகளை எங்கேயும் அனுப்புவதற்கு அமெரிக்க சட்டம் அனுமதியளிக்கிறது.

என்றாலும் கம்போடியாவுக்குள் அமெரிக்கப் படைகளை அனுப்பியது செனட்டின் எதிர்ப்பையே திரு. நிகஸனுக்குத் தேடிக்கொடுத்திருக்கிறது. வியட்நாம் விவகாரத்தில் ஆழம் தெரியாமல் காலைவிட்டு அமெரிக்கா அவதிப்படுகிறதென்ற அபிப்பிராயம் அமெரிக்காவிலேயே வலுப்பெற்று ஜோன்சன் நிர்வாகத்திற்கு பெருந் தலையிடியைக் கொடுத்ததும் ஜோன்சனுக்கு நிம்மதியை இழக்கச் செய்து அதிபர் பதவிக்கு மீண்டும் போட்டியிடாமல் செய்ததும் மறந்துவிடக் கூடிய விஷயமல்ல.

கம்போடியாவிலுள்ள வியட்காங்கியரின் தலைமைத் தளத்தை நிர்மூலமாக்கிவிட்டால் வியட்நாம் பிரச்னைக்கே ஓரளவு முடிவு கிடைத்து விடலாமென்று அதிபர் நிக்ஸன் கருதலாம். ஆனாலும்அது அவ்வளவுசுலபமானதாக இருக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

கம்போடியாவில் திடீர்ப் புரட்சிநடந்து அதன் தலைவர் இளவரசர் நொரடம் சிகானுக் பதவியிலிருந்து அகற்றப்பட்டபோது அந்தப் புரட்சியில் அமெரிக்காவுக்குப் பங்கிருக்கிறதெனக் கூறப்பட்டபோது அதை அமெரிக்கர் மறுத்தனர். புரட்சிப்பற்றித் தங்களுக்கு எதுவுமே தெரியாதென்று அவர்கள் கூறினர் ஆனல் இப்போது கம்போடியாவில் நடைபெறும் சம்பவங்களுக்கும் தாய்லாந்துக்குச் சென்றுகொண்டிருந்ததாகக் கூறப்பட்டு கம்போடிய கடலுக்குள் திசை திருப்பப்பட்ட கொலம்பியா ஈகிள் என்ற ஆயுதக்கப்பலிலிருந்த ஆயுதங்களை கம்போடிய புரட்சி அரசு எடுத்துக் கொண்ட நிகழ்ச்சிக்கும் அமெரிக்காவுக்கும் தொடர்பில்லையென்று கருத முடியுமா?

இதேசமயம் பதவியிழந்து இப்போது சீனவில்தஞ்சம் புகுந்துள்ள கம்போடிய முன்னாள்தலைவர் இளவரசர் நொடரம் சிகானுக், கம்போடியா நடுநிலைமை வகித்து வருகிறதென்றும் அங்கு வியட்காங்கியரின் நிலையம்எதுவும் இல்லையென்றும் கூறிவந்தது சரிதானா என்றகேள்வியையும் எழுப்புகிறது.

கம்போடியாவுக்குள் அமெரிக்கப்படைகள் நுழைந்துள்ளன. இதை சோவியத் யூனியனும், சீனவும் கண்டித்துள்ளன. அடுத்து என்ன நடக்கும். சோவியத் யூனியன் காகிதப்புலிதானா? சீனசீறிப் பாயுமா?

# தமிழர் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்தினோம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் நிறைவேற்றப்பட்டிருந்தால் தமிழ்பேசும் இனத்தின் நிலையில் கணிக்கக்கூடிய முன்னேற்றம்ஏற்பட்டிருக்கும். உறுதியளித்த அத்தனையையும் அரசாங்கம் நிறைவேற்றத்தவறிவிட்டாலும், நாம் இழந்த உரிமைகள் சிலவற்றைப்பெறுவதில் வெற்றிபெற்றோம். எமது அரசியல்விரோதிகள் கூறுவதுபோல் ஐ. தே. கட்சியோடு நாம் செய்த உடன்பாடு எவ்வித பலனையும் தராதுவிடவில்லை.

### மொழியுரிமை

1956-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சிங்களம்மட்டும் சட்டமே 1958வரை நடைமுறையில் இருந்துவந்தது. சட்டவிதிகளை ஆக்குவதன்மூலம் தமிழ்மொழிக்கு ஒரு குறிப்பிட்ட அந்தஸ்தை அளிக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கும் தமிழ் மொழி (நியாயமான உபயோகம்) சட்டம் 1958-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டிருந்தாலும் நடைமுறைக்கு கொண்டுவரப்படாமல் உயிரற்றதாகவே இருந்துவந்தது. எம் மகாநாடு செய்த உடன்படிக்கைப் பிரகாரம் 1966 ஜனவரி 8ம் திகதி தமிழ்மொழி உபயோகம் பற்றிய சட்டவிதிகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றை ஒவ்வொரு அமைச்சும் அரசாங்கத்திணைக்களமும், கூட்டுத்தாபனமும், ஏனைய அரசாங்க நிறுவனங்களும் செயல்படுத்த வேண்டுமென்ற திறைசேரிச் சுற்றறிக்கை 1969-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்டது.

### சமஅந்தஸ்து

இன்று சட்டபூர்வமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் எந்த அரசாங்க அலுவலையும் ஆற்றுவதற்கோ, அவற்றைப் பாவிப்பதற்கோ தமிழும் உபயோகிக்கப்பட வேண்டும். இவ்விரண்டு மாகாணங்களிலும் தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்து சட்டபூர்வமாக ஏற்றுககொள்ளப்பட்டிருக்கின்றது. நடைமுறையில் இம் மாகாணங்களில் ஆங்கிலம் பெரும் இடத்தை வகித்தாலும் நாளடைவில் இச் சட்டவிதிகள் அமுலுக்கு வரும்பொழுது தமிழும் சிங்களமும் ஆங்கிலத்தினிடத்தைப்பெற்றேதீரவேண்டும். தனிச்சிங்களம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் ஆங்கிலத்தினிடத்தை பெறமுடியாது.'' எனவே நாடு முழுவதும் சிங்களம் மாத்திரம் ஆட்சிமொழிபெற்ற நிலை இன்று நிறைவேற்றப்பட்டிருக்கும் மொழிச்சட்டங்களினல் வடக்கு கிழக்கு மாகாணங்களைப்பொறுத்தவரை மாற்றமடைந்திருக்கின்றனவென்பதில் ஐயமில்லை

இச்சட்ட விதிகளின்படி இலங்கையின் எப்பாகத்திலும் அரசாங்க நிறுவனம் திணைக்களம் எதுவும் தமிழ்பேசும் மக்களோடுகொள்ளும் கடிதத்தொடர்பு தமிழிலும் இருக்கவேண்டும் என்றும் அரசாங்கப் பிரசுரங்கள், விளம்பரங்கள், வர்த்தமானிகள், பத்திரங்கள் எல்லாம் இலங்கையின் எப்பாகத்திலும் தமிழிலும் இருக்கவேண்டுமென்றும் நிலைநாட்டப் பட்டிருக்கிறது படிப்படியாகபலதுறைகளில் இது நடைமுறைக்கு வருவதை நாம் காண்கின்றோம்.

### பிரதேசம்

1957-ம் ஆண்டு பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் வகயெழுத்தான நாள்முதல் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் திட்டமிட்டு வெளிமாகாணங்களிலிருந்து சிங்கள மக்களைக்கொண்டுவந்து குடியேற்றுவது நிறுத்தப்பட்டது. கல்லோயா 'கந்தளாய், அல்லை பொதுத்திட்டங்கள் 1957-ம் ஆண்டின் பின்பு நடாத்தப்படவில்லை. ஆனல் திருக்கோணமலை போன்ற பகுதிகளில் சட்டவிரோத சிங்களக் குடியேற்றம் நடைபெறறுவந்தது. சட்டநடவடிக்கைகள் மூலமும் சட்டவிரோதக்குடியேற்றப் பிரதேசங்களில் காவலர்களை நியமிககச் செய்வதன் மூலம் இத்தகைய சிங்களக்குடியேற்றத்தை ஓரளவிற்கு கட்டுப்படுத்த நாம் நடவடிககை எடுத்தோம். மூதூர் பூநகர் போன்ற இடங்களிலும், திருககோணமலையின் சிலபகுதிகளிலும் அப்பிரதேச தமிழ் மககள் குடியேறிய நிலங்களை அவர்களுககே சட்டபூர்வமாகக கொடுககப்பட வழிசெய்தோம்.

### அரசாங்க ஊழியர்

எமது 1965-ம் ஆண்டுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏற்கனவே சேவையிலிருப்போர் தமது நியமனத்தையோ, சம்பள உயர்வையோ, பதவி உயர்வையோ, சலுகைச் சம்பளம் போன்றவற்றையோ, மொழிச் சட்டம் காரணமாக இழககச்செய்யககூடாது என்று குறிப்பிட்டிருந்தோம். 1956-ம் ஆண்டுககு முன் சேவையிற் சேர்ந்த பழைய ஊழியர்களைப் பொறுத்தவரையில் திறைசேரிச் சுற்றறிகை 700 இன் மூலம் நமது தேர்தல் விஞ்ஞானபனத்தில் நாம்கொடுத்த வாககுறுதியைப் பூரணமாக நிறைவேற்றியிருக்கிறோம். முந்திய அரசாங்கத்தின் செயலினல் பதவிஉயர்வுமறுககப்பட்டு, சம்பள உயர்வு நிறுத்தப்பட்டு, கட்டாய ஓய்வு உத்தரவைஎதிர்நோககியிருந்த பழைய ஊழியர்கள் பதவி உயர்வு, சம்பள உயர்வைப்பெற்று சேவையில் தொடர்ந்திருகக நாம் வழிவகுத்தோம்.

1956-ல் சேர்ந்த புதிய ஊழியர்கள் விடயத்தில் எமதுகோரிக்கை பூரண வெற்றி பெறவில்லை. அவர்களுக்கு உத்தியோக மொழித்தேர்ச்சி பெற மேலும் 3 வருடஅவகாசம் அளிக்கப்பட்டது. அக்காலக் கெடுவில் தேர்ச்சி பெற்றால் நிறுத்தப்பட்டிருந்த சம்பள உயர்வுகள் எல்லாம் முழுச் சேவைக்காலத்திற்குரிய நிலுவைகளோடு அளிக்கப்படும் என்று திறைசேரிச் சுற்றறிக்கை 701 கூறியது சித்தியடையவேண்டியபரீட்சையும் சிரேஷ்ட தராதரப் பத்திரத்திலிருந்து, கனிஷ்ட தராதரப் பத்திரத்திற்குக் குறைக்கப்பட்டது. புதிய ஊழியர்கள் பதவிஉயர்வுப் பரீட்சைகளை சிங்களத்திலேயே எடுக்கவேண்டுமென்பது முந்திய அரசாங்கம் ஏற்படுத்தியவிதி. அதை மாற்றி தமிழ்மொழி மூலம் சேவையிற் சேர்ந்தோர் தமிழிலேயே பதவிஉயர்வுப் பரீட்சைகளை எடுக்கும் உரிமையை ஏற்றுக்கொள்ளச் செய்திருக்கிறோம். எழுதுவினைஞர்சேவையில் சேர்ந்த புதிய தமிழ் ஊழியர்கள் சிங்களத் தட்டெழுத்துப் பரீட்சையில் சித்தியடையவேண்டுமென்பதைமாற்றித் தமிழ்தட்டெழுத்தில் சித்தியடைந்தால் சம்பளஉயர்வு கிடைக்கும் என்ற நிலையை ஏற்படுத்தி யிருக்கின்றோம். தமிழ்ஆசிரியர்கள், தமிழ் தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர், வானொலி அறிவிப்பாளர், தமது அன்றட சேவைக்கு சிங்களம் தேவைப்படாத சிற்றூழியர்கள், கல்வித்தகைமையின்றிச் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் சிற்றூழியர்கள் போன்ற பல பிரிவினருக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்து பூரணவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

### ஏனைய சட்டங்கள்

தேசிய அரசாங்கத்தில் நாம் அங்கம் வகித்த காலத்தில் அரசாங்கம் நிறைவேற்றிய முக்கியமான சட்டங்கள் சிலவற்றில் தமிழினத்துக்குப் பாதகமான அம்சங்களை நீக்குவதிலும் வெற்றி கண்டோம். உதாரணமாக இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல்சட்டம், ஆட்களைப் பதிவுசெய்யும்சட்டம், கல்வி வெள்ளையறிக்கை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### மாவட்டசபை

தமிழ்பேசும் மக்கள் தம்மைத்தாம் ஆளக்கூடிய ஓர் அமைப்பு வேண்டுமென்ற எமது கொள்கைப்படி நாடு முழுவதற்கும் மாவட்ட சபைகளை நிறுவி அதிகாரத்தை பரவலாக்கும்கொள்கையை திரு. டட்லி சேனநாயகா எம்மோடு செய்த உடன்படிக்கையில் ஏற்றுக் கொண்டார் மாவட்ட சபைகளை நிறுவுவதற்கான சட்டமூலம் பல மாதங்களாக, பல கட்சிகளாலும் ஆராயப்பட்டபின் தயாரிக்கப்பட்டது. இச்சட்ட மூலத்தை உள்ளடக்கிய ஒரு வெள்ளையறிக்கையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. இச்சட்டத்தினல் தமிழ்பிரதேசங்கள் ஓரளவாவது உரிமைபெறுவதை விரும்பாத சிங்கள வகுப்புவெறியர்கள் இச்சட்டத்திற்கு விரோதமாக தீவிரமானபிரசாரத்தை மேற்கொண்டார்கள். துரதிருஷ்டவசமாக தமிழ்மக்களுக்குக் கிடைக்க இருந்த இச்சிறு உரிமையைதானும் நாம் பெறவிடாது தடுப்பதில் அகில இலங்கைத்தமிழ் காங்கிரசும் தீவிரமாக ஈடுபட்டது. அரசாங்கக் கட்சியைச்சேர்

(14-ம் பக்கம் பார்க்க

'ஞாபகப்படுத்துகிறோம்!'
உங்கள் தேவைக்கு வேண்டிய
★ சேட்டுகள் ★ கால்சட்டைகள்
★ கவுண்கள் ★ பிளவுஸ்கள்
★ மணிப்புரிசாறிகள் ★ வொயில்சாறிகள்
இன்னும் அநேக தினுசுகள்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.
ரொலரும்ஸ்
தொலைபேசி: 7099
46, மெயின்வீதி - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவியலில் அறிவியலின் பங்கு

## வூண்ட் உளவியலின் தன்மை

பௌதீகவியலார் உடலியலார் உபயோகித்துவந்த கருவிகளோடுதொடர்புள்ள கருவிகளையே இவரும் உளவியலுக்குப் பயன்படுத்திவந்தார். மிகவிரைவில்உளவியலார் தங்கள் ஆய்வுச்சாலையில் செய்த ஆய்வில் புதிய பிரச்னைகள் தோன்றுவதைக்கண்டு தங்களுக்கெனப் பயன்படுத்தக்கூடிய கருவிகளை உருவாக்கினர். சட்டத்தை அதன் மூலகங்களாகப் பகுத்துப் பார்க்கும் இரசாயன வியலாளிகள் அனுபவங்களை (Concsious Experience) பகுத்தாய்வதே வூண்ட் அவர்களால் உருவாக்கப்பட்ட விஞ்ஞானத்தின் குறிக்கோளாகும். இக்கருவிகள் இத்துறையில் முக்கிய இடம்பெற்றது. ஏனெனில் அனுபவங்களை எழுப்பும் தூண்டல்களை இயக்கவும் அளக்கவும் இக்கருவிகள் மிகவும் தேவையாக இருந்தன. (Experimental Introspeetion) பரிசோதனை உள்ளோக்குகள் என்று சொல்லப்படுகின்ற தன் பயனை அறிவதே உண்மையில் குறிப்பிடக்கூடிய வூண்டின் அம்சமாக இருந்தது. Introspection (அசப்பார்ஸ்) புதிய ஒன்றல்ல. யாராயிருப்பினும் தங்களுடைய எண்ணங்களை உள்முகமாகத் திருப்பி ஆய்ந்தாலோ அல்லது தங்கள் அனுபவங்களைப் பிரதிபலித்தாலோ அது (Introspection என்று சொல்லப்படும். ஆனால் வூண்ட் அவர்களின் பரிசோதனைச்சாலையில் ஆராய்வு செய்துகொண்டிருப்பவர்கள், சிறப்பாகப் பயிற்றப்பட்டவர்கள். இவர்கள் அனுபவ முறையை Experience in Process) பகுத்தாய்ந்தனர். இவைநிகழ்ந்தபின்பு ஏற்படக்கூடிய பிரதிபலிப்பை ஆராயவில்லை. இவர்கள் திடீர் அனுபவங்களைப்

**—இலங்காதீபன்—**

பற்றியும், வேறுள்ள பொருள்களைப்பற்றியும் ஆய்ந்து அதிலிருந்து சில உண்மைகளை அமைத்தனர். முதலில் இவ்விஞ்ஞானத்தையே வூண்ட் உடலியலுளவியல் Physiological Psyclology) என்றும் பின்னல் பரிசோதனை உளவியலில் (ExPeyimenal Psychology) எனவும் அமைத்தார்.

வில்லியம் வூண்ட் அவர்களின்ஆய்வு கூடத்தில் உணர்ச்சிகளும் புலனுணர்ச்சி அனுபவங்களும் பற்றிய கிரகிப்புக்களுக்குமே முக்கிய இடமளிக்கப்பட்டது. இதனையே காட்சி (Perception) என்பர். எப்படி இருந்த பொழுதிலும் மனவெழுச்சி உணர்ச்சிகளையும் (Emotional Feelings) விம்பங்களும் கருத்துக்களும் உட்பட) அளந்தறிய முயன்றனர். பின்பு அனுபவம் இயக்க எதிர்த்தாக்கத்திலிருந்து (Motor Reaction) தூண்டல்வரையும் செயற்படும் விதத்தைக் கூர்ந்து நோக்கும் வகையில் அவர்கள் ஆய்வு விரிவுபடுத்தப்பட்டது. உணர்வு பற்றிய சிந்தனைகளையும் அங்கு ஆராயத் தொடங்கினர். ஆனல் வூண்ட்புலனுணர்ச்சி அனுபவங்களைப் பகுப்பதிலோ அல்லது விபரிப்பதிலோ மட்டும் அவர் கருத்து உள்ளடங்கியிருக்கவில்லை. அதற்கும் மேலாக, இவற்றின் அடிப்படையில் மறைந்திருக்கக்கூடிய உயிரியல்அமைப்பையும் தொழிற்பாட்டையும் அறிந்து கொள்ள விரும்பினர்.

இக்காலத்தில் இவற்றின் முன் தொழிலில் (Pre OccuPation) பாற்பட்ட உணர்வுப்பார்வையும்மனித வாழ்க்கையின் அம்சமாக இருந்தமையால் உளவியல் என்பதற்கு புலனுணர்ச்சி அனுபவங்கள் பற்றிய விஞ்ஞானம், என வரைவிலக்கணம் செய்யப்பட்டது.

மேலும் அவர் பொதுவாக சில அம்சங்களில் விஞ்ஞான ரீதியான நுண்ணுணர்வை விரிவுபடுத்தினர். இவற்றின் பார்வை படிப்படியாக புலனுணர்ச்சி அனுபவங்களை விபரிப்பதிலிருந்து, நடத்தைகளைக் கட்டுப்படுத்தக்கூடியதும் தொடக்கக்கூடியதுமான புலனுணர்வுப் புலன்காட்சி முறைகளை நுணுகி ஆராயத் தொடங்கினர். இவ்வழியில் மேலும் ஆய்வுகள்நடந்துகொண்டே இருக்கின்றன. விஞ்ஞானிகள் இன்னும் பலவழிகளில் சிறப்பாக உடலியலாரும், நரம்பியல் அறிஞருக்கும்இப்படிப்பட்ட முறைகளில் உளவியலாரோடு தாமும் பங்கு கொள்கின்றனர். மேலும் இதிலும் இதோடு தொடர்புள்ள உளவியலோடும் உள்ள கண்டுபிடிப்புக்கள், தொழில் துறைகளிலும், இராணுவ விடயங்களிலும், பெரும் நடைமுறை உண்மைகளை விளக்குகின்றனர்.

## புதிய துறைகளின் கண்டுபிடிப்புக்கள்

இவ்விதம் வூண்டும் அவரைச் சார்ந்தவர்களும் உணர்பனுபவங்களைப் பற்றி ஆய்ந்து கொண்டிருக்கும் பொழுது மற்றவர்கள்வேறு நுண்ணய்வுகளைச் செய்யத் தொடங்கினர். ஜெர்மனிய தத்துவஞானியான ஹெர்மன் எப்பின்ஹர் (Herman Ebbinghaus)என்பவர் நினைவு (Memory) பற்றிய் பரிசோதனை உளவியலைத் தொடங்கினர். நாம்எவ்வாறு நினைவுபடுத்துகிறோம்? நம்மை எது மறக்கச்செய்கிறது? நினைவுபடுத்துவதற்கு வழிசெய்யும் முக்கிய காரணம் என்ன? என்பன போன்ற கேள்விகளை இவர் எழிப்பினர். இவ்வித கேள்விகள் எப்பொழுதுமே உளத்தைப் பற்றிய தத்துவஞானிகளின்(Mentdal Philosopher) கவனத்தை ஈர்த்துகொண்டேஇருந்தன. அரிஸ்ரோட்டில் போன்றவர்கள் கேட்டுவந்த கேள்விகளுக்கு எப்பின்கஸ் பரிசோதனை மூலம் பதிலிறுக்க முயன்றர். இவர் கவிதைகளில் சில செய்யுட்பகுதிகளையும் கருத்தற்ற ஒரு கூட்ட வெற்றுரை அசைகள் (Nonsense syllablas) யும் நினைவுபடுத்தினர். இச்சூழலில் இதற்குரிய பதிலை அளிக்கமுயன்றர். அதுமட்டுமல்ல, உள அனுபவங்களை விளக்குவதிலும் (வூண்ட் செய்ததுபோல) எப்பிஸ்கஸ் எவ்வாறு கற்ற ஒருவர் நினைவுபடுத்தியதை மீட்டறிய முடிகிறதென்பதைக் கவனித்தார். இது நடைமுறையில் சிறப்பாக மொழி நடத்தையில் ஒருஉறுதியை ஏற்படுத்தியது.

இந்த நினைவுகள் பற்றிய நுண்ணய்வின் முடிவுகள் 1888-ல் வெளியிடப்பட்டன. எப்பிங்கஸ் அவர்களால் எழுதப்பட்ட சில கேள்விகள் மேலும் சில கேள்விகளை எழுப்பி இத்துறையை மேலும் பலவித விரிவுகளையும் மாற்றங்களையும் எப்பிங்கஸ் அவர்கள் கொண்ட ஆய்வுமுறைகளில் ஏற்படுத்தி அக்கேள்விகளுக்கு விடைகாண முயன்றது. உண்மையில்வளர்ந்துவரும் ஆய்வில் இது இன்னெரு உளவியற்றுறையாகும். இவை செயல்முறை மட்டுமன்றி அறிவியல் விசேஷமுமாகும். இவ்வாறு உள்ள ''நினைவு'' பற்றிய கொள்கைகள் உண்மைகள் கல்வி உளவியலுக்கு Educational psychology) மிகவும் துணைபுரிவன.

## கற்றல்

ஞாபகசக்தி பற்றிய ஆய்வுகள் யாவும், கற்றல் பற்றிய முழுச்சோதனை நுண்ணய்வுக்கு மிகவும் முக்கியமானதாகும் சொற்கள், இலக்கங்கள் மற்றும் அவை போன்றவையும் நாங்கள் நினைவுபடுத்தும்பொழுது சாதாரணமாகவே கற்றுக்கொள்கிறோம். இது போன்ற நினைவுறுத்தல் நடைபெறும் பொழுது சொல்சார்ந்த கற்றல் என்று சொல்லப்படுவதையேகற்கிறோம். மேலும் எப்பிங்கஸ் (Ebbinghaus)சின் சிறப்பான இதுபற்றிய ஆய்வு, கற்றல் பற்றிய ஆய்வில் மேலும் ஒருபடி சென்றது. இதனை இயக்கப் பயிற்சி) (Motor learning) என்று சொல்வர். இச்சோதனையில் சொல்சார்ந்ததாக இருந்தாலும் மேலும்குழப்பமான குறிகளும் ரைப்பிங்கும், இசைக் கருவிகள் வாசித்தல் போன்றவையும் இருந்தன. இவ்வித நினைவு பற்றிய ஆராய்ச்சியில் எவ்வாறு கற்றல்நடைபெறுகின்றது. எவ்வாறு ஒருவர் இவ்வித திறனைப் பெருக்கமுடிகிறது என்ற வினுக்களுக்கு விடைகாண வேண்டியது திறமை மிகுந்த இவ்வாய்வாளர்கள் கடமை. இவ்விதமான ஆய்வுகள் முன்னைவிட இப்பொழுது வலிமைபெற்றவினுவாக, கல்வித்துறையிலும், அன்றுட வாழ்க்கை நிகழ்ச்சிகளின் வேறுதுறைகளிலும் விளங்குகிறது. கைத்தொழில் உளவியலை (Industrial Psychology) உதாரணமாக எடுத்துக்கொண்டால் பல நேரங்களில், இவ்வித பரீட்சை Traiping)யின் மிக முக்கியமானதாக இத்துறையிலுள்ள தொழிலாளர்களுக்கு மிகவும் தேவையான ஒன்றுஎன்பதை புதிய கைத்தொழில் தேவை என உணர்த்துகிறது.

---

## நாகஸ்வர உலகில்

# இளம் கலைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள்

ஈழத்து நாகஸ்வர உலகில் சில வருடங்களுக்கு முன்பு வலங்கைமான் அண்ணுசாமி, நவாலி கோவிந்தசாமி, மாவிட்டபுரம் ராஜா, கல்வியங்காடு முருகையா, சாவகச்சேரி அப்புலிங்கம், இணுவில் கோதண்டபாணி முதலிய சிரேஷ்ட நாகஸ்வர வித்துவான்களும் காமாட்சிசுந்தரம். பெரியபழனி, சின்னத்தம்பி குமுக்கா கணபதி முதலிய தவில் வித்துவான்களும் வெற்றிக்கொடி நாட்டி இசை பரப்பி வந்தார்கள். இவர்களில் சிலரை காலதேவன் பறித்துக்கொண்டு போக, சிலர் வயதின் நிமித்தம் தொழில் ஓய்ந்துபோனர்கள்.

இவர்களுடைய இடத்துக்கு இப்பொழுது ஒரு புதிய இளைய சமுதாயம் வந்து கொண்டிருக்கிறது. ஆர்வமும் ஊக்கமும் மிக்க இவ்விளைஞர்கள் கலையுலகில் தாமும் முன்னேறி பெயரும் புகழும் சம்பாதிக்க வேண்டுமென்று விரும்புவது இயற்கையே. இவர்களுடைய ஆவலுக்கு முட்டுக்கட்டை போடுவதுபோல சிலகாரியங்கள் நிகழ்வது மிகவும் வேதனைதரும் விஷயம்.

ஆலய உற்சவங்கள் இப்பொழுது பல இடங்களில் நடைபெறுகின்றன. திருவிழாக்காலத்தில்தான் முன்னுக்கு வரத்துடிக்கும் நாகஸ்வரக் கலைஞர்கள் தங்கள் திறமையை வெளிக்காட்டி பொதுஜனங்களின் நன்மதிப்பைப்பெற முயலுவார்கள், இந்த முயற்சியில் அவர்களுக்கு இடையூருகச் சில காரியங்கள் நடப்பதாகத் தெரிகிறது.

நல்ல சங்கீதம் கேட்கலாம் என்ற ஆவலுடன் பல ரஸிகர்கள் இரவிரவாகக் கண்விழித்து திருவிழா பார்க்கிறர்கள். கலைஞர்களின் முழு சாமர்த்தியமும் வெளிவராதபடி தடை செய்பவர்கள் அந்தக் கலைஞர்களுக்கு மட்டுமன்றி நல்ல சங்கீதம் கேட்கப்போகும் ரஸிகப் பொதுமக்களுக்கும் சங்கீதத்துக்குமே துரோகம் செய்தவர்களாகின்றர்கள்.

ஒரு கலைஞன் வாசித்துக்கொண்டிருக்கும்போது அவனுடைய கற்பனைப்போக்கை அறுத்துப் பாதியில் நிறுத்தும்படி நிர்ப்பந்தப்படுத்துவது அழகல்ல. இச்குற்றத்திற்கு வேறு கலைஞர்களும் திருவிழா உபயகாரரும் பாத்திரவாளிகளாய் இருக்கிறர்கள். திருவிழாக்காரருக்கு தாம் விரும்பியவாறு செய்யும் உரிமை இருக்கிறதுதான். ஆனல் அவரை அவ்விதம் செய்யும்படி வேறு கலைஞர்கள் தூண்டிவற்புறுத்துவது முறையற்ற செயல்.

**— லாவண்யம் —**

திமிரி வாத்தியம்என்றஒரு பிரச்னையும் இதில் குறுக்கிடுகிறது. பார்க்கப்போனல் இதில் பிரச்னைக்கே இடமில்லை. சென்றவாரம் நான் எழுதியதுபோல, நாலரை அல்லது ஐந்துகட்டை சுருதியில் வாசிக்கப்பட்ட உண்மையான திமிரி நாகஸ்வரத்தை இங்கே எவரும் புகுத்த முயலவில்லை. பாரி நாகஸ்வரத்தின் சுருதி இரண்டு கட்டையென்றல் இங்குள்ள சில கலைஞர்கள் ஒரே கட்டை கூட்டி மூன்று சுருதியில் வாசிக்கிறர்கள். இதையே திமிரி வாத்தியமென்றும் அது இழவு வீட்டுக்கே உரியதென்றும் ஒரு சிலர் எள்ளிநகையாடுகிறார்களாம். இது மிகத் தவறு. மூன்றுகட்டை பார் வாத்தியத்தை உண்மையான திமிரி என்று சொல்ல முடியாது.

கோண்டாவில் பாலகிருஷ்ணன், கானமூர்த்தி, சுந்தரமூர்த்தி, அளவெட்டி பத்மநாதன், சிதம்பரநாதன், இணுவில் சிவபாதசுந்தரம், காரைநகர் கணேசன், கைதடி கோபாலசாமி, நல்லூர் சந்தானகிருஷ்ணன், யாழ்ப்பாணம் குமாரதாஸ் சிவசுப்பிரமணியம், மானிப்பாய் மீனுட்சிசுந்தரம் இப்படி இன்னும் பலர் மூன்று கட்டை வாத்தியத்தையே கையாளுகிறர்கள் என்று தெரியவருகிறது.

இந்தியாவிலே குழிக்கரை பிச்சையப்பா, திருமருகல் நடராஜசுந்தரம் போன்ற பலவித்வான்கள் இந்த வாத்தியத்தையே கையாளுகிறர்கள் என்றும், இங்கிருப்பதுபோல அங்கே இதுஒரு பிரச்னையல்லவென்றும் யாரும் எந்த சுருதியிலாவது வாசிப்பது அவரவர் விருப்பத்தைப் பொறுத்ததென்றும், இங்குள்ள சில கலைஞர்களே வேண்டுமென்று இதை ஒரு பிரச்னையாக்கி இசைக் கலைஞர்களிடையே ஒற்றுமையைக் குழப்புகிறர்களென்றும் இரண்டு கட்டையில் பாரி நாகஸ்வரத்தை கையாண்டு வரும் எம். எஸ். சண்முகநாதன் கூறுகிறர்.

இந்தவிதமான அற்பக் கோளாறுகள் காரணமாகவோ என்னவோ யாழ்ப்பாணத்திலுள்ள திறமையான நாகஸ்வரக் கலைஞர்களுக்கு பொருத்தமான தவில் பக்கவாத்தியக்காரர் அமைவதில்லை. நல்ல சங்கீதத்தைக் கேட்க விரும்பும் [illegible] வேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

---

# பகவான் ஒருத்தன் இருக்கிறனே!

கனகதாசர் என்பவர் மிகச் சிறந்தபக்திமான். அவர் ஞானேபதேசம் பெறும் பொருட்டு ஒரு குருவை அடைந்து வழிபட்டார். தாஸருடைய பக்குவத்தை ஆராய எண்ணிய குருநாதர் அவருடைய கையில் ஒரு பழத்தைக் கொடுத்து 'யாருமில்லாத இடத்தில் இந்தப் பழத்தைச் சாப்பிடு' என்று சொன்ஞர். இரண்டு நாள் கழித்துப் 'பழத்தைச் சாப்பிட்டாயா?' என்று கேட்டார் குருதேவர். 'இல்லையே' என்றர் சீடர். 'ஏன்?' ஒருவரும் இல்லாத இடத்தில் சாப்பிடும்படி பணித்தீர்கள். ஒருவரும் இல்லாத இடம் கிடைக்கவில்லையே.'

'தனியே காட்டுக்குள் போய்ச் சாப்பிடுவது தானே!'

'எங்கே சென்றலும் பகவான் ஒருத்தன் இருக்கிறனே; அவன் இல்லாத இடம் ஏது?' என்று பதில் சொன்ஞர் கனகதாசர்.

குருதேவர் அந்தப் பதிலைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டார். 'நீ நல்ல பக்குவமுடையவன்; உனக்கு உபதேசம் செய்கிறேன் என்று சொல்லி மந்திரோபதேசம் செய்தார்.

## சில யோசனைகள்

காய்கறிகள் புழுத்தோ, முதிர்ந்தோ போகாமல் இருக்க அவற்றின் காம்பைத் துண்டித்து வையுங்கள்.

ஃ

வார்ணிஷ் கறைபடிந்துள்ள இடங்களில் 'சேப்பன்டைன்' அல்லது மண்ணெண்ணெய் பூசினல் கறை அகன்றுவிடும்.

ஃ

வடித்தசாதம் மிகுந்து போய்விட்டதா? அதை ஒருபாத்திரத்தில்போடுங்கள்; அப்படியே கொதிக்கும் நீரில் வைத்து எடுங்கள். அப்போது வடித்தது போல் ஆகிவிடும்.

ஃ

ஊசி அல்லது பேனு கூர்கள் துருப்பிடித்தது காரணமாக வேலைசெய்யாவிட்டால், நெருப்பில்ஒரு விநாடி காய்ச்சிஎடுத்தால் திரும்பவும் வேலைசெய்யத்தொடங்கும்.

ஃ

எலுமிச்சம் பழத்தை நறுக்குவதற்கு முன்னல் சிறிது நேரம் வெந்நீரில் போட்டுவையுங்கள். அதிகச் சாறு கிடைக்கும்.

கே. உமா

# நாகரிகத்தின் உண்மையான அகப்பொருட்கள்

— செல்வி ஜே. றுவைதா —

தற்காலம் நாகரிகம் என்று சொல்லிக்கொள்ளும் சகோதரிகளின் போக்கே அலாதியானது. காலையில் பொழுது நன்ருகப் புலர்ந்தபின் எழும்பியதும் தலைமாட்டில் காப்பியிருக்க வேண்டும். அதனைக் குடித்ததும் தொட்டியில் ஜலம் நிரப்பவேண்டும். பற்பசை கொண்டு பல்லை விளக்கிக் கொண்டே சுற்றுமுற்றும் உலாவுவார்கள். முகம் கழுவ உயர்ந்த வாசனைச் சோப்பு வேண்டும். துப்பட்டியினுல் முகத்தைத் துடைத்தபின் நிலைக்கண்ணுடி முன்னின்று கிறீம் என்று சொல்லப்பட்ட ஒருவித பசையை முகத்தில் தடவி, அதன்மேல் நாற்றம் வீசும் பவுடர் என்று சொல்லப்படும் மாவையும் பூசிக்கொள்வார்கள். நெற்றிக்குக் குங்குமத்திலகம்வேறே, பின்னி முடித்துக் கொள்வதா இரண்டு மூன்ருகக் கட்டிக்கொள்வதா என்ற ஆலோசனையில் மூழ்கியொரு முடிவுக்கு வர மூன்றேமுக்கால் நாழிகைகடந்துவிடும். எந்தவித சேலையைக் கட்டிக்கொள்வது என்றஆலோசனையில் ஈடுபட்டு முடிவுக்குவர ஓரிரு நாழிகை வேண்டும். சிலர் முழங்காலிலிருந்து ஒருசாண் உயரத்தில் நிற்கக் கூடிய 'மினி' உடைகளைப் போட்டுக் கூந்தலையும் தோள்வரை நறுக்கி விட்டுக் கொள்வார்கள். இதற்கேற்ற காலணி பட்டுக்குடை, கைக்குட்டையை வைத்துக்கொள்ள ஒரு தோல்பை, கைக்குக்கடிகாரம், கண்ணுக்குக் கண்ணுடி அப்பப்பா! அதை விரிக்கிற் பெருகும். இவைதாம் கலியுக நாகரிகம் என்று நம் சகோதரிகள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர் போலும். இந்தவிதமான அற்ப ஆடையலங்காரங்களை விரும்புவதா நாகரிகம்?

நாகரீகத்தின் பொருள்

நாகரீகம் என்னும் பொருளைக் கூர்ந்து ஆராயின் நம் சகோதரிகள் தாம் செய்யும் தவறைக் கெதியில் உணர்வர். நாகரீகம் என்ற பதத்திற்கு தமிழ்ப் பாஷையில் ஊராண்மை என்பது அர்த்தம். ஊராண்மையே வடமொழியில் நாகரீகமென்றும், ஆங்கிலத்தில் 'சிவிலிசேஷன்' என்றும் அழைக்கப்படும். கலையிலும், அறிவிலும், ஒழுக்கத்திலும், அரசியலிலும் ஒருதேசம் சிறந்து விளங்கின. அதுவே நாகரீக பூமியாகும். அத்துறையில் தலைசிறந்த ஆடவர் அல்லது பெண்டிர் எவரோ அவரே நாகரீகம்-ஊராண்மையுடையர்.

தற்கால மக்கள் புதுவிதமான ஆடை ஆபரணங்களையணிவதும், வீடுகள் கட்டுவதும், உணவைப் பாகம் பண்ணுவதுமே நாகரீகமென்றெண்ணுகின்றனர் இல்லை, இல்லை, இவையெல்லாம் போலி நாகரீகம். முற்கூறிய நான்குமே நாகரீகத்தின் உண்மையான அகப் பொருட்கள்: மற்றவையெல்லாம் புறப் பொருட்களே. இதனையுணராமற்போலும், நம்பெண்மணிகள் இக்கோலங்களையெல்லாம் நாகரீகச் செயலாகக்கொள்கின்றனர். அதுமட்டுமா! மணம் முடித்த மங்கையர்களின் அநாகரீகச் செயல்களோ சொல்லுந்தரமன்று. அவர்களிற் பலரும் மேற்குறிப்பிட்ட செயல்களையுடையவர்களாய் தம் குடும்பப் பொறுப்பை மறந்து நடந்துகொள்கிருர்கள். பெண்களுக்குரிய குணநலன்களைக்கூட இந் நாகரீகப்போக்கு புறக்கணித்துவிடுகின்றது. இப்போக்கைக்கண்டுதான் கற்பின் தெய்வமாம் கண்ணகியும் கோபம் கொண்டாளோ, என்னவோ. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நற்குணங்களும் நாகரீகம் என்று சொல்லும் நம் நாரீமணிகள் பலரிடமிருந்து கம்பிநீட்டிவிட்டன.

அநாகரிகத்தை ஒழியுங்கள்

சகோதரிகளே! இக்கொடிய அநாகரிகத்தை விட்டொழியுங்கள். நம்மவருக்குரிய நான்கு லட்சியங்களையும் காப்பாற்றிக் கற்பு, பெற்ருேரைப்பேணல், இல்லறவாழ்க்கை மகவுக்காப்பு, சகோதரஅன்பு ஆகிய ஐந்து கடமைகளையும் மறந்துவிடாதீர்கள். நம் பண்டைக்கால மாதர்சிரோமணிகளாகிய சீதை, தமயந்தி, சாவித்திரி, கண்ணகி, திரௌபதி ஆகியோரின் சரித்திரங்களைப் படித்து அவர்களைப் பின்பற்றி நடவுங்கள்.

'பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையுண்டானுல் எத்தாலும்கூடிவாழலாம்' என்ற ஒளவைவாக்கை ஆராய்ந்து பாருங்கள். தன் உடலும், உயிரும் சகலதும் தன்தலைவனுக்குரிய தேயன்றி வேறெவனுக்கும் உரித்தானதன்று. தற்கொண்டான் எத்தகைய குணமுடையவனுயினும் இன்பத்திலும் துன்பத்திலும், வாழ்விலும் தாழ்விலும் அவனுடன் ஈருயிர் ஒருடல்போல் ஒத்து வாழ்

[13ம் பக்கம் பாா்க்க)

# அழகாக இருப்பதன் இரகசியம்



வியாபாரிகள் பவுடர், கிறீம், அத்தர், லிப்ஸ்டிக், க்யூடெக்ஸ் சோப் போன்ற இன்னேரன்ன பல நங்கையரின் ஆடம்பரப் பொருள்களுக்கு ஒரு நட்சத்திரத்தின் படத்தைப்போட்டு இவர் இதைப் பயன்படுத்துவதால்தான் அழகாகவும் இளமையுடனும் திகழ்கிருர் என விளம்பரப்படுத்திவிடுகிருர்கள். அவர்கள் விற்பனையின் பொருட்டு விளம்பரம் செய்ததை உண்மையென நினைத்து நம் நங்கையரிற் பலரும் புதிது புதிதாகவரும் ஆடம்பரப் பொருட்களை எந்த விலையானுலும் கொடுத்து வாங்கிப் பாவிக்கிருர்கள். ஆனுல் நட்சத்திரங்களைக் கேட்டாலோ அவர்கள் இவைகளைத் தாங்கள் பாவிப்பது மிக அரிதென்றே கூறுகிருர்கள்.

சமீபத்தில் பாரதத்தின் புகழ்பெற்ற நாட்டிய நடிகையான பத்மினி இலங்கைக்கு வந்திருந்தாரல்லவா?

அவரது உண்மையான வயதின் தோற்றமின்றி மிக இளமையாகவும், நல்ல உடற்கட்டோடும் காணப்பட்ட அவரை அவர் அவ்வாறு இருப்பதற்கு என்னென்ன அழகு சாதனங்களைப் பயன்படுத்துகிருர், எந்தவித உடற்பயிற்சிகள் செய்கிருர் என்பதையெல்லாம் அறிய ஆவல் கொண்ட அரிவையர் சிலர் அவர்பால் சென்று அந்த இரகசியத்தை விஞவினுர்களாம். அவர் கூறிய பதில் இவர்களைத் திகைக்கவைத்தது.

'நான் குளிப்பதற்குச் சோப்பை' இதுவரை பயன்படுத்தியது கிடையாது. பாசிப்பயற்றை மாவாக்கி அதையே தினமும் குளிப்பதற்குமுன் உடலுக்குப் பூசி குளிக்கின்றேன். இதைவிட மஞ்சளையும் தவருது பயன்படுத்திக்கொண்டுவருகிறேன். இயற்கையாகக் கிடைக்கும் இவைகளைத் தவிர செயற்கையாகக் கிடைக்கும் அழகு சாதனங்கள் எனக்குப் பிடிப்பதுமில்லை அவற்றை நான் பாவிப்பதுமில்லை. எனது உடற்கட்டு நன்ருக இருக்க வேண்டுமென்பதற்காகநான் எவ்வித உடற்பயிற்சியும் எடுத்துக்கொள்வதில்லை. வீட்டு வேலைகளே எனக்குச் சிறந்த உடற்பயிற்சியாகின்றன. 'ஷூட்டிங்குக்குப் போகும் நேரத்தைவிட மற்றும் நேரங்களில் எனது வீட்டு வேலைகளைக் கவனித்துக்கொள்கிறேன் எனக் குறிப்பிட்டாராம். அவரின் அழகின் ரகசியத்தையறிய ஆவலுற்ற அணங்குகளிடம்.

## குடும்பச் சுடர்

தயாரிப்பு: குணம்

நடிகை பத்மினி கூறியது போன்று இயற்கையாகவும் மலிவாகவும் கிடைக்கும் மஞ்சளும், பாசிப்பயறும் நாம் பயன்படுத்தும் சோப்புகள் யாவற்றிலும் சிறந்தவை. மஞ்சள் கிருமிகளைக் கொல்லும் சக்திவாய்ந்தது. பயறு உடலுக்குக் குளிர்ச்சியையும் அதேவேளையில் சருமத்தை மென்மையாகவும் வைத்திருக்கும் தன்மையது. ஆதலால் பலவித. பலவர்ண சோப்புகளை நாடித் திரியும் நாரீமணிகள் இவைகளைப் பயன்படுத்திஞல்சிக்கனமாகவும் வாழலாம். சௌக்கியமாகவும் வாழலாம்.


அடுத்து உடல் பருக்கிறதே எனவும், உடல்பெருக்கிறதே எனவும் கவலைகொண்டு பலவித உடற்பயிற்சிகளைச் செய்யும் நங்கையருக்கும் நடிகை பத்மினியின்கூற்று அதிர்ச்சியளித்திருக்கலாம். உண்மையில் ஒரு பெண்ணுக்கு அவள் வீட்டில் கவனிக்கவேண்டிய வீடு பெருக்குதல், கழுவுதல், மெழுகுதல், அரைத்தல், சமைத்தல், சிறு காய்கறித்தோட்டம் அமைத்தல் போன்ற சகல வேலைகளும் ஒவ்வொரு விதமான உடற்பயிற்சிகளேயாகும், இவை யாவற்றையும் தினமும் செய்துவந்தால் வீட்டுவேலைகளும் வேலைக்காரரின்றி சுலபமாக முடிந்துவிடும். உடற்கட்டும் நன்ருக அமையும். நோய்கள் பலவற்றையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

எனவே நங்கையர் அழகு சாதனங்களாலும், உடற்பயிற்சிகளாலும்தான் அழகாகவும் இளமையுடனும் திகழ்கிருர்கள் என்ற தவருன எண்ணத்திஞல்தான் இன்று நம்சகோதரிகள் பலர் வீண்செலவுகளுக்கு ஆளாவ[illegible] தம்மை உட்படுத்திக்கொள்கிறார்கள்.



கைதடி மத்தியைச் சேர்ந்த செல்வி நாகேஸ்வரி செல்வன் தனது எட்டாவது பிறந்த தினத்தை சமீபத்தில் சிறப்பாகக் கொண்டாடினுர்.

## பெண்ணைப் பற்றி



குணமுள்ள பெண் ஒருவனின் கருத்தில் ஒளிவீசுகிருள். புத்திசாலியான பெண் ஒருவனின் கவனத்தைக் கவருகிருள். ஆனுல் பரிவும் பாசமுமுள்ள பெண்ணே அவனை சுவீகரித்துக் கொள்கிருள்.

-அரிஸ்டாட்டில்.

0 0

பெண்களின்இரண்டு சொட்டுக் கண்ணீர் நூறு சொற்களைவிட வலிமைவாய்ந்தவை.

-வி. ச. காண்டேகர்.

0 0

ஒருபெண்ணைக் கட்டியாளும் மனிதனுல் ஒரு தேசத்தைக்கட்டியாளமுடியும்.

-பால்சாக்.

0 0

ஒரு பெண்ணைக் கட்டி மணந்துகொள்வது பேரரசைக்கட்டியாள்வதைவிட கடினமானது. அதனுல்தான் பதினுன்கு வயதில் நாடு ஆண்டவர்கள் இருந்தும் பதினெட்டு வயதிற்குமேல்தான் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று விதி செய்திருக்கிருர்கள்.

-ஜே. ஏ. பென்ட்.

0 0

கற்புநெறியில் தன்னையும் காத்துக் கொண்டு தன் கணவனையும் காப்பாற்றி தகுதியுடைய புகழையும் காத்து உறுதி தளராமல் வாழ்கின்றவளே பெண்.


-திருவள்ளுவர்.

0 0

காதல் படகை கல்யாணம் என்ற கடலில் கணவன்என்னும் படகோட்டி எவ்வளவு சாமர்த்தியமாக ஓட்டினுலும் மனைவி என்ற சூருவழி அலைக்கழித்துக்கொண்டே இருக்கும்.

- 'சுதே'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணல் வீடு

— மு. திருநாவுக்கரசு —

அவள் அந்த அழகான கடற்கரையின் மணற்பரப்பிலே அமர்ந்திருக்கிறாள். இதமாக வீசிக்கொண்டிருந்த கடற்காற்றின் மென்மையான ஸ்பரிச உணர்வுகள்... அவளை அடிக்கடி... மயக்கமான ஒரு சூழ்நிலைக்கு இழுத்துக்கொண்டிருக்கின்றன.

அவளுடைய குழந்தையின் சிரிப்பொலி கேட்டுத் திரும்புகிறாள்.

மணல்வீடு ஒன்று கட்டி முடிந்தும் முடியாமலும்... இடிந்தும் இடியாமலும் இருக்கும் ஓர் உருவ அமைப்பின் சிதைவைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கிறது குழந்தை.

குழந்தை மட்டும் தானா மணல்வீடு கட்டுகிறது? வாழத்துடிக்கும் ஜீவன்களின் நிறைவேறாத ஆசைகளுக்கு மறுபெயர் மணல் வீடுதானே!

சிறுவயதிலே... இதேகடற்கரையிலே எண்ணற்ற மணல்வீடுகளைக்கட்டி இன்று ஓய்ந்திருக்கும் தன்னுடைய கைகளை ஒருமுறை பார்க்கிறாள். கொஞ்சம் வளர்ந்த பிறகு தூங்காத இரவுகளிலே உறங்காத விழிகளுடன் போராடிக்கொண்டு ஆசை உணர்வுகளுக்கு ஆதாரமாக இருந்த கற்பனை எண்ணங்களைச் சுமந்துகொண்டு தன்னுடைய இதயத்திலே ஒரு மணல்வீடு கட்டினாள்.

இறந்தகாலம் அவளுடைய ஆசை உணர்ச்சிகளுக்கும் கற்பனை எண்ணங்களுக்கும் ஒரு சமாதியாக அமைந்துவிட்டது. எஞ்சியிருப்பது அவளுடைய பெருமூச்சுக்கள்தான்—! மிகவும் பெலவீனமான இந்தப்பெருமூச்சுக்களின்மூலம் நைந்து இற்றுப்போன தின்னுடைய இல்லற வாழ்க்கையை மீண்டும் சரிசெய்யும் ஓர் ஆசை அவள் இதயத்தில் மெல்ல அரும்பலாயிற்று. அவளை விட்டு நழுவிப்போன குடும்பவாழ்வு அவளுக்கு எல்லையில்லா ஏக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

அவளைக் கடந்துபோய்க் கொண்டிருக்கும் ஓர் இளம் ஜோடி அவள் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. குழந்தை ஒன்று, கணவனின் கைகளிலிருந்து மனைவியின் தோளுக்கு தாவும் ஒரு காட்சி, அவளுடைய நெஞ்சிலிருந்து ஆழமான பெருமூச்சுக்கு வழிவகுக்கிறது.

தனக்கென்று ஒரு குடும்பம்... அந்தக் குடும்பத்திலே பல பிரச்னைகள் தோன்றி அந்தப்பிரச்னைகள் அவளுக்கு வாழ்வின் சுவையைக் கொடுக்க வேண்டுமென்பது அவளுடைய இதய ஒலியாக இருந்தது. கோவில் சந்நிதியில் கர்ப்பூரம் அடையும் பெருமையும் புனிதமும் குடும்ப வாழ்விலே ஈடுபடும் பெண்ணுக்குக் கிடைக்குமென்பது வெறும் தத்துவமல்ல. அவளுடைய வாழ்க்கையின் உண்மை என்பதை அவள் உணரத் தொடங்கி விட்டாள்.

ஓர் ஒழுங்கான குடும்பப் பெண்ணாக, அன்பான மனைவியாக— கருணையுள்ள தாயாக விளங்க வேண்டுமென்று இறந்த காலங்களிலே அவளுக்கு ஏற்பட்ட இதயத்துடிப்பு, இன்னும் ஓயவில்லை.

பொங்கிப் பெருகிய கற்பனை எண்ணங்களுடன் தோளிலே குழந்தையைச் சுமந்துகொண்டு அவள் பெருந்தெருவில் ஏறிவிட்டாள். சாலையின் திருப்பத்தை அவள் கடந்தபோது மதகிலே இருந்துகொண்டு இரு இளவட்டங்கள் அவளை வெறிக்க வெறிக்கப் பார்த்தபார்வை பெண்மையின் பாதுகாப்பு ஒழுங்காகச் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு குடும்ப அமைப்பிலேதான் கிடைக்கமுடியும் என்பதை உறுதிப்படுத்துவதாக இருந்தது.

கணவனின் கட்டளைகளுக்கும் குடும்பவாழ்வின் சட்ட திட்டங்களுக்கும் நடுவே வாழும் ஒரு வாழ்க்கையில் இளவட்டங்களின் ஆக்கிரமிப்புகள் அதிகம் இருப்பதில்லை என்ற உண்மை அவளுக்குப் புலப்படுகிறது. குழந்தையின் சுமையுடன் அவள் 'எண்ணங்களின் சுமையும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்க அவள் அந்த அரசமரத்தடிக்கு வந்துவிட்டாள். அவளுடைய உடலுக்கு அந்த மரத்தின் நிழல் கொஞ்சம் ஆறுதலைக் கொடுத்தது.

புழுங்கிப்போன அவளுடைய உள்ளத்துக்கு ஆறுதல் அவளைவிட்டு ஓடிப்போன அவனைத்தான். அவனுடைய நிழலைத் தேடித்தான் அவள் அலைகிறாள். அந்த நிழலிலே மீண்டும் ஒரு கூடுகட்டி குடும்ப வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்பது அவளுடைய பெரிய ஆசை!

அரசமரத்தடியில் ஒரு சோதிடர் அமர்ந்திருந்தார் தன்னுடைய எதிர்காலம் மட்டுமல்ல உலகத்தின் உணர்ச்சிகளை புரிந்துகொள்ளும் தகுதியின்றி தோளிலே உறங்கிக்கொண்டிருந்த தன் குழந்தையின் எதிர்காலமும் எப்படி எப்படி அமையப் போகிறது என்பதை அறிய அந்தத் ஏழைத் தாயுள்ளம் துடித்தது.

சோதிடர்அவள் கையைப் பார்த்தார்.

கவலைகளின்பிறப்பிடமாக அமைந்து கண்ணீர் தேங்கி நிற்கும் இடமாக மாறிஇருக்கும் தெளிவற்ற அவள் முகத்தைத் தெளிவாகப் பார்த்தார்.

அவளுடைய தோற்றத்தைப் பார்த்த எந்த ஒரு சாதாரண மனிதனும் அவளுக்குச் சரியாக சோதிடம் பார்த்துவிடுவான்.

தன்னுடைய எதிர்காலம் தான் எதிர்பார்த்தபடியே இருக்கும் என்றுஅந்தசோதிடரின் வார்த்தைகளினால் அவள் திடமாக நம்பினாள்.

'குழந்தை வளர்ந்து... படித்து...பட்டம் பெற்று... பெரிய அதிகாரியாக வருவான்...' சோதிடர்இவ்வாறு அடுக்கிக்கொண்டே போனபோது ஏதோ தெய்வம் ஒன்று நேரேவந்துஅவளுக்கு வரம் கொடுப்பது போல இருந்தது அந்தசோதிடரின் வார்த்தைகள். அவள் இதயத்தில் பொங்கும் மகிழ்ச்சிக்கு அளவில்லை. சேலைத் தலைப்பில் இருந்த முடிச்சை அவிழ்த்து... அவளிடமிருந்த கடைசிக் காசான அந்த ஐம்பது சதக்குத்தியைக் கொடுத்தபோதுகூட அவள் மகிழ்ச்சி குறையவில்லை.

என் ராஜா ...பட்டம் பெறுவான்...பெரிய அதிகாரியாக வருவான்... அந்த வார்த்தைகளை அவள் உச்சரிக்கும் போது ஏற்பட்ட மனநிறைவு விபரிக்கமுடியாமல் இருந்தது. அவளின் இடைக்கால சந்தோஷம்... விழித்துக்கொண்ட குழந்தைக்கு விளங்கிக் கொள்ள நியாயம் இல்லை. தாயின் முறுவலித்த முகத்தை அந்தக் குழந்தையின் முகம் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

அவனுடைய நிழல் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை அவள் நெஞ்செல்லாம் வியாபித்திருந்தது.

அவனுடைய நிழல் தனக்குக்கிடைக்கும் பட்சத்தில்...எப்படி வாழ்க்கையை அமைக்கவேண்டும் என்ற ஒரு அசட்டுக் கற்பனையில் அகப்பட்டு அவதிப்படுகிறாள்.

அந்த அவதி அவளுக்கு கொஞ்சம் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. அந்த அவதியை அவள் விரும்புகிறாள்.

அது அவளுக்கு இப்போது தேவைப்படுகிறது.

சாலையிலே அவள் இப்போது கொஞ்சம் வேகத்தைக்கூட்டுகிறாள். அவளுக்குப் பின்னால் வேகமாகவந்த கார் ஒன்று அவளை விலகிக்கொண்டு அவளுக்கு முன் [illegible]. அவள் கொஞ்சம் பயந்து போய்விட்டாள். இவ்வளவுக்குப் பயந்தது அவளுக்கே வெட்கமாக இருந்தது.

நெஞ்சு படபடக்க ஓரக் கண்ணால் அந்தக் காரைப் பார்த்தாள். அந்தக் காருக்குள் அவளுடையஅவன் இருந்தான்.

அவளுடைய வாழ்க்கையின் மாற்றத்துக்குபொறுப்பான மனிதன் அவன்தான்.

தென்றலாக வந்து புயலாகமாறி.. பூகம்பத்தையே உருவாக்கியவன் அவன் தான்....

முன்னையவிட அவன் கொஞ்சம் மெலிந்திருந்தான். அது அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. நீடித்த மௌனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க இருவரும் முயன்று கொண்டிருந்தனர்.

மௌனம் அவர்களுக்கு மரணவேதனையைக் கொடுத்தது. பெண்மையின் இயல்பான பொறுமையும்... குடும்பவாழ்வும் மீண்டும் சந்திக்க வேண்டும் என்று அவளை விநாடிக்கு விநாடி அரித்தெடுக்கும் ஆசையும் ...மகனைநல்லமனிதனாக வளர்க்க வேண்டும் என்ற கடமை உணர்ச்சியும் ஒன்றுகலந்து... அவளுடைய அவனுக்கு மன்னிப்பைக் கொடுக்கின்றன.

"காருக்குள் ஏறிக்கொள்..."

அவன் அவளைப்பார்த்து... பல வருடங்களின் பின் முதல் தடவையாகப்பேசினான். அவள் ஒன்றும்பேசாமல் காருக்குள் ஏறினாள்.

கார் கடற்கரையை ஒட்டிய அந்த ஹோட்டலுக்கு வந்துவிட்டது. அவன் இறங்கி அவளுக்கு முன்னால் நடந்தான்.

இறந்தகால இன்ப நினைவுகள் அவளுடைய மனவானிலே ஒருமுறை மின்னி மறைந்தன.

ராஜா... இதோ அப்பா...

குழந்தையை அவனிடம் கொடுக்கப்போனாள்.

அவனோ விரைவாக நடந்தான். அது அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

அவனும் அவளும் வயிறார உண்டபின் ரூமுக்குள் நுழைகிறார்கள். மாலை மங்க... அலங்கார மின்விளக்குகள் அங்கே ஏற்றப்பட்டன.

அவனில்லாத காலங்களிலே அவள் பட்ட அவதிகளை... அவனுடைய நினைவுகளைச் சுமக்க மாட்டாமல் மயங்கிய இரவுகள்...குடும்பம் என்றொரு கூட்டுவாழ்க்கையில் ஏற்படும் இன்பதுன்பங்கள் அளிக்கும்சுவையான வாழ்க்கை ... இவைகள் எல்லாவற்றையும்தொகுத்து...வடித்து...

விடியும்வரைபேசத் துடித்தாள் அவள்.

விடிந்த பிறகு பேசுவோமென்றான் அவன்.

குடும்ப வாழ்வின் புனிதத் தன்மைகளை விளக்கிக் கொண்டிருந்தாள் அவள்

அவனுக்கு அது எரிச்சலாக இருந்தது.

அவன் தன்பாட்டுக்குப் படுக்கையிலே புரண்டு கொண்டிருந்தான்.

அவனைப் பொறுத்தவரை அவன் அவளுக்கு நிழலாக இருக்க விரும்பவில்லை.

நினைவாக இருக்கவே அவன் விரும்புகிறான்.

அவளுக்கு அது புரியவில்லை......இப்போது புரியாது...... புரியாமல் இருப்பது நல்லது......!

அவள் பேச்சு ஓயவில்லை.

நெஞ்சிலிருந்து நெளிந்து கொண்டிருந்த ஆசைகளெல்லாம் அவனுக்கு முன்னாலே வெளியேறிக்கொண்டிருந்தன அவனால் பொறுக்க முடியவில்லை

விடிந்த பிறகு...... பொல்லாத இந்தப் பொழுது மறைந்த பிறகு...... நல்லதொரு வீடு பார்த்துப் புது வாழ்வு வாழவேண்டும் என்று அவள் திரும்பத் திரும்ப அவனுக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவன் பொறுமையின் எல்லையைக் கடந்துவிட்டான். விளக்கைக் குப்பென்று அணைத்தான்.

இரண்டு இதயங்கள்...... சங்கமமாகும் நேரம் அது...!

அவளுடைய வாழ்க்கைப் பாதைக்கும் அவனுடைய வாழ்க்கைப்பாதைக்கும் முரண்பாடு இருந்தது.

குழந்தை கொடுக்கும் இன்பம்... கணவனின் மகிழ்ச்சி, மனைவியின் ஒழுங்கான நடத்தை......இவைகள்தாம் வாழ்க்கைச் சிறப்பை வழி வகுக்கும்...... அந்த வாழ்க்கைதான் வாழத்துடிக்கும் நெஞ்சங்களுக்குச் சாந்தி அளிக்கும் என்று நம்பினாள்... அந்த வாழ்க்கையில் கால் வைக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்தாள்.

அவன்..., மனைவி கொடுக்கும் இன்பத்தில்தான் வாழ்க்கையின் முழுச் சிறப்பும் தங்கி இருக்கின்றது என்று நம்பினான். கூட்டு வாழ்க்கையில் அவனுக்கு இஷ்டமில்லை

குடும்ப வாழ்வுக்கும் அவனுக்கும் வெகுதூரம்......... அவளுக்கு ஒத்துவராத...... தன்னுடைய சொந்தப் பாதையிலே அவன் நடக்க முற்பட்டான்.

பொழுது புலர்ந்தது.

விடிந்த பிறகு புதிய வாழ்க்கையை வரவேற்க ஆவலுடன் எழுந்தவள்...படுக்கையில் அவனைக் காணாமல் அங்கும் இங்கும் தேடிப்பார்த்தாள், அவனைக் காணவில்லை.

அவன் போய்விட்டான்.

இரண்டாவது முறையாக அவள் ஏமாற்றப்பட்டுவிட்டாள். குடும்ப வாழ்க்கையிலே ஈடுபட வேண்டும் என்ற அவள் ஆசை அவளுடைய நெஞ்சிலே கருகிவிட்டது

அவனுடைய இடத்துக்குப் பதிலாக அவன் படுத்த இடத்திலே கிடந்த ஒரு பச்சை நோட்டை வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டே கலங்கிய கண்களுடனும் கசங்கிய உள்ளத்துடனும் வெளியே வருகிறாள். சமூகத்திலே நடமாட முடியாத அளவிற்கு அவளுடைய வாழ்க்கை திரும்பி நிற்கிறது

இனி அவளை வளர்த்தெடுக்கப்போவது சமூகம்தான், அவளுக்கு அது பொருந்தாது.

கடற்கரையிலே ஒரு சிறுவன் மணல் வீடு ஒன்று கட்டுவது அவளுடைய கண்ணீருக்கிடையில் மங்கலாகத் தெரிகிறது. அவள் மனதுக்குள் சிதைந்துபோன மணல் வீடு......சிறுவன் கட்டி சரியப்போகும் மணல் வீட்டைப் பரிதாபத்துடன் பார்த்துக்கொண்டிருக்க, அவள் கடற்கரையை நோக்கி நடக்கிறாள்.

(யாவும் கற்பனை)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காஸ்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனின் தோற்றம் பற்றி அறிஞர்களின் ஆராய்ச்சி

சந்திரப் பிரயாணம் இன்று சாதாரணமாகி விட்டது. சகலரும்பேசக் கூடியதாக சகஜமாகி விட்ட இப்பிரயாணம் மதக்கோட்பாடுகளுக்கு ஒரு சவாலாகவும், விஞ்ஞான விந்தைக்கு எடுத்துக்காட்டாகவும் அமைகின்றது.

சந்திரப் பிரயாணத்திற்கான செலவைக்கண்டு மலைத்துப் பின்நிற்காமல் அள்ளிக்கொட்டி குறித்த நாடுகள் ஆராய்ச்சியை நடாத்தும் அதேநேரம் உலகின் இன்னோர் பகுதியில் சிலநாடுகள் சந்திரப் பயணத்திற்கு செலவாகும் பணத்திலிருந்து உணவின்றி உயிர்மடியும் எத்தனை மக்களுக்கு உணவளிக்கலாம் என மதிப்பிடுவதில் முனைந்திருக்கின்றார்கள்,

ஆனால் சந்திரனின் தோற்றம்பற்றி அறிய சகலருக்கும் ஆவலுண்டு என்பதை யாரும் மறுக்கமுடியாது. சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைத்துவிட்டு திரும்பிஉள்ளபோது அந்த சந்திரனின் தோற்றம்தான் என்னஎன்று அடுத்தவரை வினவுவது சகஜமாகிவிட்டது.

சந்திரப் பிரயாணத்தில் அப்பலோ 11, 12 ஏற்படுத்தியசாதனை மகத்தானது, மகோன்னதமானது. அப்பலோ 13 சந்திரப் பிரயாணத்தை வெற்றிகரமாக முடிக்க சாத்தியமற்றதாக அமைந்துவிட்டாலும் சந்திரப் பிரயாணத்தில் தேக்கத்தை உண்டுபண்ணும் என்று எதிர்பார்க்க முடியாது. சந்திரப் பிரயாணத்தில் கலந்துகொள்ள இன்றைய சாதாரண மக்களுக்கும் ஆவல் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்து சந்திரப் பிரயாணத்திற்கு 'ரிக்கட்பதிவு' செய்ய மனிதன் துடித்துக் கொண்டு இருக்கிறான்.

இக்கட்டுரை சந்திரனின் தோற்றம்பற்றி அறிஞர்கள் வெளியிட்ட கருத்துக்களின் தொகுப்பே அன்றி ஆராய்ச்சி முடிவல்ல.

சந்திரனின் தோற்றம்பற்றிய உண்மையைப் பேரண்டத்தின் தோற்றத்தை விளக்குவதிலிருந்தே நாம் அறியவேண்டும். இயற்கைச் சூழ்நிலையைக் கட்டுப்படுத்தும் அடிப்படையான ஒழுங்குமுறைகளைக் கண்டறிந்ததும், பேரண்டத்தின் தோற்றம்பற்றி விஞ்ஞானரீதியில் விளக்கக்கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இந்தவகையில் ஞாயிற்றுத் தொகுதியின் தோற்றம் பற்றி எழுந்த கோட்பாடுகள் சந்திரனின் தோற்றத்தையும் விளக்குகின்றன. ஆகவே சந்திரனின் தோற்றம்பற்றி அறியமுன் ஞாயிற்றுத்தொகுதியின் தோற்றம் பற்றிய கருத்துக்களையும், அண்டத்தின் அமைப்புமுறை நியதிகளையும் மேலெழுந்தவாரியாக அறிந்து கொள்ளுதல் அவசியம்,

**மு. சின்னத்துரை**

## ஞாயிற்றுத்

## தொகுதியின்தோற்றம்

ஞாயிற்றை மையமாகக் கொண்டு புளுட்டோ, நெப்டியூன், யுரேனஸ், சனி, வியாழன், செவ்வாய், பூமி, வெள்ளி, புதன் ஆகிய கோள்கள் சுற்றிவருகின்றன.

கோள்கள் யாவும் ஒரே தளத்தில் சுற்றுவதுடன் தன்னைத்தானே சுற்றுகின்றன. புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகியவை சிறிய கிரகங்கள் ஆகும். பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன் என்பன உபகோளங்களைக் கொண்டுள்ளன. இவ்வுபகோள்களுடன் வால்மீன்களையும் (Comets) எரிமீன்களையும் (Metors) உள்ளடக்கியதே ஞாயிற்றுத் தொகுதியாகும். இக்கோள்கள் அடர்த்தியிலும், சுழற்சி வேகத்திலும் வேறுபடுகின்றன. கோணத் திணிவு வேகம் 2 வீதம் ஞாயிற்றிலும் 98 வீதம் கோள்களிடத்தும் காணப்படுகின்றது. பெரும்பாலும் இரசாயன மூலங்களின் தொடர்பு நிலையும் ஞாயிற்றுத்தொகுதியில் ஒத்ததாக உள்ளது.

ஞாயிற்றுத்தோற்றம் பற்றி எழுந்த கொள்கைகள் வருமாறு:

I வான்புகையுருக் கருதுகோள்.

II அலைக்கொள்கை.

III கோள் நுணுக்கக் கொள்கை.

IV இரட்டை நட்சத்திரக் கொள்கை.

V வான்புகைமுகிற் கருதுகோள்.

VI நோவாக் கருதுகோள்.

இக்கருதுகோள்கள் எல்லாம் கோள்களின் தோற்றத்தைப்பற்றி விளக்க எழுந்த கொள்கைகளேயன்றி முடிபல்ல. நீண்டகால இடைவெளியில் மைல்கற்கள்போல வெளியிடப்பட்ட இக்கொள்கைகளின் விளக்கங்களை இரண்டுஅடிப்படையில் நோக்கலாம்.

I படிமுறை வளர்ச்சியால் ஏற்பட்டமை,

II திடீர்மாற்றத்தால் ஏற்பட்டவை,

'பொது இயற்கை வரலாறும் வானத்தைப்பற்றிய கொள்கைகளும்'' என்ற நூலில் கான்ற்' என்பவர் (1756-ம் ஆண்டு) பரந்த அண்டவெளியில் உள்ள கடுப்பொருள் அசைவற்ற குளிர்ந்த பொருளாகக் காணப்பட்டது எனவும் பின்னர் ஈர்ப்பு சக்தி மோதலினால் வெப்பம் ஏற்பட்டு சுழலத்தொடங்கியது எனவும் விளக்கினார். இவ்வாறு சுழற்சியின்போது வான் புகையுரு ஏற்பட்டது எனவும் பின்னர் ஏற்பட்ட மையநீக்குவிசையால் விளிம்புப்பகுதியில் உள்ள விசை கூடி வளையங்களாக வீசப்பட்டன. இவ்வாறு வளையங்களாக வீசப்பட்டவையே குளிர்ந்து கடினமாகிக் கோள்களாயின. எஞ்சிய பகுதியே சூரியன், இவ்வாறான இவரது கொள்கை கோணத்திணிவு வேகக்காப்புக் கொள்கைக்கு மாறானதாய் நிராகரிக்கப்பட்டது. 1796-ம் ஆண்டுலாப்பிளாஸ் என்பவர் கான்ற் விட்ட பிழைகளை நீக்கிப் புதிய கொள்கைகளை வெளியிடமுற்பட்டார்.

இயற்பொருளானது ஆரம்பத்திலிருந்து சுழற்சியையும் வெப்பத்தையும் கொண்டிருந்தது. அத்துடன் மையத்தின் அடர்த்தி அதிகமாக இருந்ததாகவும் விளக்கினார்.

இயற்பொருளானது சூழன்று கொண்டிருக்கும்போது படிப்படியாக வெப்பம் குறைந்து விட்டம் குறைந்தபோது சுழற்சி வேகம் கூட மைய நீக்கு விசை அதிகரிப்பால் விளம்புகள் வளையங்களாகப் பிரிந்து மின்கோள்களா மாறின. இவை குளிர்ச்சி அடைந்தபோது கோள்கள் தோன்றின என்பது இவர் கருத்து.

சேம்பலின்-மோல்டன் என்பவர் கோள் நுணுக்க கொள்கையை வெளியிட்டார்கள். தனிப் பொருட்களிலிருந்து கோள்கள் தோன்றவில்லை, இரு பொருட்களின் அதிர்ச்சியிலிருந்தே கோள்கள் தோன்றின என்றார். சூரியனை ஒரு நட்சத்திரம் அணுகும்போது ஏற்பட்ட அதிர்ச்சியைத் தொடர்ந்து ஆவிகளும், தூசிகளும் நட்சத்திரத்தின் ஈர்ப்பு விசைவழியே சென்று அணுக்களாகி அணுக்கள் ஒன்று சேர்ந்து குளிர்ந்தபோது கோள்களாயின என்று தமது கொள்கையில் விளக்கினார்கள்,

பெருக்கக் கோட்பாட்டை முன் வைத்த ஜீன்ஸ்-ஜெபரீஸ் என்போர் சேம்பர்லின் மோல்ட்டன் ஆகியோரின் கருத்துக்கு இணங்க கருத்து கோள் வெளிபிட்டார்கள். சூரியனுக்கு அருகே நட்சத்திரம் வந்தபோது சூரியனில் பெருக்கம் ஏற்படுகின்றது. பின் நட்சத்திரம் திரும்பிச் செல்லும்போது அதன் ஈர்ப்பால் ஞாயிற்று தொகுதியின் ஒரு பகுதி பிரிந்து சென்று கோள்கள் ஆயின என்றார். நட்சத்திரம் அதிக தூரம் சென்றமையால் அதன் கவர்ச்சி குறைந்தபோது சூரியன் இக்கோள்களைத் திரும்பவும் ஈர்த்தமையால் சூரியனைச் சுற்ற ஆரம்பித்தன என்றார்கள்.

லொக்கியலிண் ஆகாயக்கற் கோட்பாட்டின்படி ஆகாயக்கற்றூசு ஆன வான் புகையுரு ஒன்றுடன் ஒன்று மோதும்போது சூடேறி கோள்கள் உருவாகின என்பது இவர்தம் வாதம்

சூரியனைச் சுற்றிக்கொண் [illegible] இன்னோர் நட்சத்திரம் ஈர்த்தபோது சிதறுண்ட பகுதிகள் சில ஈர்த்த நட்சத்திரத்துடன் செல்ல ஏனையவை சூரியனைச் சுற்றிக்கொண்டு இருந்தன. இவையே கோள்களாயின என்று றூசெல் விளக்கினார்.

அண்மையில் பேராசிரியர் கொயிலி இரு ஞாயிற்றுக் கொள்கையை வெளியிட்டார். இரு ஞாயிறு இருந்தது என்றும் ஒரு ஞாயிறு தனது பிரகாசத்தைக்காட்டு முகமாக மறு ஞாயிற்றிலி ஜலவாயுவை உட்கொள்ள முனைந்தபோது ஞாயிற்றில் வெடிப்பு ஏற்பட்டு ஞாயிற்று அணுக்கள் பல மைல்களுக்கு அப்பால் வீசப்பட்டன என்றும், இந்நிலையில் பிரதான ஞாயிற்றை மையமாகக் கொண்டு வாயுமண்டலம் ஏற்பட கலங்கள் ஏற்பட்டதின்மூலம் கோள்கள் தோன்றின என்றும் இவர்தம் கருதுகோளில் விளக்கினார்.

வென் வெறிகிர் என்பவர் நட்சத்திரக் குடும்பத்திடையே ஞாயிறு சென்றபோது ஈர்ப்பு சக்தி காரணமாக இயற்பொருட்கள் இணைக்கப்பட்டு கோள்கள் தோன்றின என்றார். ஒட்டோசிமித் வாயுககளும், தூசிகளும் சூரியனது கவர்ச்சியால் சேர்ந்து சூரியனது கவர்ச்சியால் சேர்ந்து நாளடைவில் கோள்களாயின என விளககினார்.

## கொள்கையில் குறைபாடுகள்

இவ்வாறு ஞாயிற்றுத் தொகுதி தோற்றத்திற்குப் பல கொள்கைகள் தோன்றின. ஆனால் கண்டனம் எதுவுமின்றி விஞ்ஞானரீதியில் யாவரும் ஏற்கக் கூடிய கொள்கைகள் இதுவரை வெளியிடப்படவில்லை.

ஒவ்வொருவர் கொள்கையும் சில பகுதியைச் சரியாக வினக்கம் கொடுத்தபோதும் சில விஷயங்களில் ஏற்படும் சிக்கலுக்கு விடை கூறுது விட்டுவிட்டது. சில தவறான கொள்கைகளும் வெளியிடப்பட்டன. நல்ல விளக்கம்எனக்கருதும் கருதுகோள்களும் பரிசோதனைக்கு உள்ளாகும்போது அவற்றில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன.

கேம்பிரிஜ் சர்வகலாசாலை பேராசிரியர் ஜெபர்ஸ் என்பவர் ''கோள்கள் எவ்வாறு தோன்றியிருக்கலாம் என்பதற்கு தெளிவானதும் நம்பத்தகுந்ததுமான வழியைக் கண்டுபிடிப்பது எம்மை எதிர்நோக்கிய பிரச்சனை அன்று. எம்மை எதிர்நோக்கியுள்ள புதிர் ஞாயிற்றுத்தொகுதிஎவ்வாறு ஒன்றி இருக்கின்றது என்பதை விளக்குவதே'' என்றார்.

## சந்திரனின் தோற்றம்

ஞாயிற்றுக் குடும்பத்திலிருக்கும் கோள்களின் தொடர்பு நிலையை விளக்கும்போது சந்திரனின்தோற்றம்பற்றிய நம்பிக்கையான விளக்கத்தைப் பெறலாம். ஞாயிற்றுத் தொகுதியின் தோற்றம்பற்றிய கருத்துக்களைக்கொண்டே சந்திரனின் தோற்றத்தையும் விளக்க வேண்டியுள்ளது. முன்பு விளக்கியதுபோல பூமி, சந்திரன் தோற்றம் பற்றிய கொள்கைகள் திடீர்மாற்றம் பரிணாம வளர்ச்சி என்ற இருஅடிப்படையினுள் அடங்குகின்றன.

சந்திரனின் தோற்றம் பூமியுடன் தொடர்புபடுத்தி விளக்கப்பட்டுள்ளன இந்த வகையில் எச். டார்வின், லாப்பிளாஸ் ஆகியோர்கள் முன்னிற்கின்றார்கள்.

பூமியும் சந்திரலும் ஒன்றாக இருந்து பின் பிரிந்து சென்று இரு கோள்கள் உண்டாயின என்றார்கள். டார்வின் சந்திரனின் பூமியின் தொடர்பு நிலையை விளக்குகையில் ''அடர்த்தியான திரவ உருவத்தில் இருந்து மெல்லிய புறப்பரப்பைக்கொள்ளும் அளவுக்கு குளிர்ந்தது அப்போது உறுதியற்ற நிலையில் மிக வேகமாகச் சூரியனைச் சுற்றிவந்தது. இவ்வாறு சுற்றிவர்த போது ஈர்ப்பு விசையால் திரவப்பெருக்கமும், பூமியின் ஊசலாட்டமும் ஒரு பக்கத்தில்சேர்ந்து இழுக்கத் தொடங்கியபோது டம்-(Dumb-bell) உருவப்போன்று அமைந்தது. காலப்போக்கில் இவ்விணைப்பு விடுபட்டு பூமியும், சந்திரனும் தனித்தனியாகின என விளக்குகிறார். இக் கொள்கையை அமெரிக்க பேராசிரியர் W. H. பிக்கரிங் என்பவர் மறுத்தபோதிலும்தற்போதுகிடைக்கும் ஆதாரங்கள் பூமியிலிருந்து சந்திரன் பிரிந்து சென்றன என்பதற்கே அதிகம் காணப்படுகின்றன.

## ஆதாரங்கள்

ஞாயிற்றுத் தொகுதியிலிருந்து பிரிந்து சென்றதாகக் கருதப்படும் கோள்கள் சூரியனைச்சுற்றுவதைப் போல பூமியிலிருந்து பிரிந்து சென்றதாகக் கருதப்படும் சந்திரன் பூமியைச் சுற்றுவதுடன் சூரியனையும் சுற்றுகின்றன. இக்கருத்தை ஈர்ப்புச் சக்தியைக்கொண்டு விளக்கமுடிகின்றது.

பூமியிலிருந்து சந்திரன் பிரிந்து சென்றதாயின் எப்பகுதியிலிருந்து பிரிந்து சென்றது என்ற கேள்வி நியாயமானதாகும். பூமியிலிருந்து பிரிந்து சந்திரன் சென்றது என்ற கொள்கையை முன் வைத்தவர்கள். தற்போதைய பசுபிக் சமுத்திரப் பகுதியிலிருந்தே பிரிந்துசென்றனஎன்று கூறுகின்றார்கள். பசுபிக் சமுத்திரப்பகுதியில் இக்கருத்தை வலியுறுத்தக்கூடிய ஆதாரமும் கிடைக்கின்றன, பூமியின் மேற்பகுதியில் சியால் படையும் பூமியின் அடியில் சீமாப்படையும் காணப்பட இதற்கு புறநடையாக பசுபிக் சமுத்திரத்தில் சீமாப் படைகள்(சிலிக்காவும், மங்கனீஸ்) மேற்பரப்பில் காணப்படுகின்றது.

அடுத்து பசுபிக் சமுத்திரத்தின் மேற்பரப்பின் அளவாகிய 6,45,00,000 ச. மைலை ஒத்த பரப்பைச் சந்திரனின் பக்கப் பரப்புக் கொண்டுள்ளமை இன்னோர் எடுத்துக்காட்டபிகும்.

அல்லாமலும் ஏனைய சமுத்திரத்தைப் போலல்லாமல் பசுபிக்சமுத்திரம்வட்டவடிவான அமைப்பைக் கொண்டு விளங்குகின்றது.

பசுபிக் சமுத்திரத்தில் உலகின் ஆழமான அகழிகள் எடுத்துக்காட்டாக மிண்டானோவா, மரியானா ஆகிய அகழிகள் காணப்படுகின்றன இவைகள் 6 மைலுக்கு மேல் ஆழங்கொண்டவை. ஏனைய சமுத்திரத்திலும் பார்க்க பசுபிக் சமுத்திரம் சராசரி ஆளம் கூடியவை.

பசுபிக் சமுத்திரத்தின் மேற்பரப்பை 60 கில்லோ மீற்றரால் பெருக்கினால் உண்டாகும் திணிவின் அளவே சந்திரனின் அளவு எனக் கணிக்கப்பட்டுள்ளது.

பசுபிகசமுத்திரப் பகுதியில் அதிக எரிமலை காணப்படுகின்றது. அல்பையின் காலத்து மலைத்தொடர்

[10ம் பக்கம் பார்க்க]

ரூபா 300 தொடக்கம் ரூபா 3000 வரை
தினசரி சேமிப்புக்கு
வருடம் 6 சதவீத வட்டி
கொடுக்கப்படும்
முழுவிபரங்களுக்கு:-
தம்பி அன் கோ
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி தேவஞானி குருநாதர்



செல்வி வசந்தா பரமநாதன்



செல்வி சரோஜினி துரைராசா

# ஆடற்கலைக்கு ஒரு கலைக்கோவில்

குனித்த புருவமும் கொவ
வைச் செவ்வாயிற்குமிண்
சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்
போல் மேனியிற் பால்
வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த
பொற் பாதமும் காணப்
பெற்ருல்
மனித்தப் பிறவியும்
வேண்டுவதே இந்த
மானிலத்தே.

இறைவனை நோக்கி நிறைந்த அன்புடன் வேண்டுகின்ற அப்பர் வாயிலிருந்து அமுதாக ஊறியது இத்தேவாரம். ஆடுகின்ற அம்பலவாணனின் மேலான அழகையும், அவன் அருளானது அவனது எழிலானதும், ஒப்பற்றதுமான இனிய பொற்பாதம் காணப்பெறுதல் என்பதையும் விளக்குவதுதான் இத்தேவாரம்.

இத்தகைய சிறந்த ஆடற்கலையை ஈழத்தில் பேணிப் பாதுகாத்துவருகின்றவர்களின் பட்டியலில் கலைஞர் வேல் ஆனந்தனுக்குத் தனியிடம் உண்டு. அவர் மேடையேற்றிய மாணவிகளின் நர்த்தனம் புதுமையானதாகவும், ஏனையவர் பாணியில் வேறுபட்டுப் பாராட்டுதலைப் பெறக்கூடியதாகவும் இருந்திருக்கின்றது. கலைஞர் வேல் ஆனந்தன் மேடையிற் காட்டும் நவரச அபிநயமும், மேனகை விஸ்வாமித்திரர் நாட்டிய நாடகமும் இரசிகப் பெருமக்களின் பாராட்டுதல்களுக்கு இலக்காகியுள்ளதை எவரும் அறிவர்.

இந்திய நடனப் பேரொளியாய் விளங்கும் நடன கலாநிதி, பத்மபூஷண், குரு கோபிநாத் அவர்களிடம் டில்லியிலுள்ள கலாகேந்திராவில் நடனம் கற்று, அவரின் அபிமானத்துக்குரிய மாணவராய் விளங்கிக் ''கலாநிகேதன்'' என்ற பட்டத்தினையும் பெற்றவர் வேல் ஆனந்தன். ஈழத்தில் மாத்திரமல்ல, வட இந்திய நகரங்களான டில்லி, ஆக்ரா, காஷ்மீர், டார்ஜீலிங், சிம்லா போன்ற இடங்களில் தனது குருநாதர் கோபிநாத்துடன் நடனமாடியுள்ளார். அத்தகைய அறிமுகத்தின் பயனுகக் கடந்த 1966-ம் ஆண்டு நவம்பரில் டில்லியில் நடந்த சர்வதேச நாட்டியக் கலைஞர் பெருவிழாவுக்கு ஈழத்துப் பிரதிநிதியாக வேல் ஆனந்தன் அழைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. நாட்டியத்தில் மாத்திரமல்ல, நடிப்புத் துறையிலும் பாராட்டுப் பல பெற்றவர்.

பாரதநாட்டில் திரு. வேல் ஆனந்தன் நாட்டியப் பயிற்சி பெற்றுத் திரும்பிய பின்னர் ஈழத்திலும் சிறந்த நாட்டிய நிறுவனத்தை நடாத்தி நல்ல ஆடற் கலைஞர்களை உருவாக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் 'கலைக்கோவில்' என்ற நிறுவனத்தை யாழ்ப்பாணம் கன்னுதிட்டியில் ஆரம்பித்தார். இந்த நிறுவனத்தின்மூலம் பல செல்விகளுக்கு ஆடற் கலையில் தன்னுலான பயிற்சி கொடுத்து உருவாக்கிவருகின்ருர். இவருக்குக்கீழ் பயிற்சி பெறுவதற்காக மாணவிகளின் வசதி நோக்கி 1968-ம் ஆண்டு அமைக்கப் பட்டதே 'திருநெல்வேலி கலைக்கோவில் நாட்டிய நிறுவன' மாகும்.

சாஸ்திரிக வழியில் மாணவிகளைப் பயிற்றி நல்ல நடன வித்தகிகளாக்கவேண்டுமென்பதே கலைக்கோவில் நிறுவன ஆசிரியரின் குறிக்கோளாகும். ஆசிரியரின் வித்துவத்தன்மையும், மாணவிகளின்மேல் வைத்துள்ள அபிமானமும் மாணவிகளின் திறமையின்மூலமே வெளிவந்திருக்கின்றன. மேலும் ஆசிரியர் நல்ல நாட்டிய பரம்பரையை உருவாக்கி ஈழத்தில் எதிர்காலத்தில் நாட்டியக் கலையினைத் தன்னுலானவரை செம்மைப் படுத்த முன்நிற்கின்ருர்.

-இ. நா.



செல்வி காந்திமலர் அரியரத்தினம்



செல்வி தேவமனேகரி இரத்தினசிங்கம்



செல்வி நகுலமாலா நவரத்தினம்

நாடக விமர்சனம்

## கந்தன் கருணை

நாடகத்தின் பெயரைப் பார்த்தவுடன் ஏதோ பக்தியான நாடகம் என்று ஏமாந்துவிடாதீர்கள். பெயர்தான் அப்படி 'கந்தன் கருணை'யே தவிர நாடகத்தில் சொல்லப்பட்ட கருத்துக்கள் அத்தனையும் இருபதாம் நூற்ருண்டில் சாதி அடக்குமுறைக்கு எதிரான கருத்துக்கள்தான்.

பழைய 'காத்தவராயன்' கூத்து மெட்டில் முற்றிலும் புதியமுறையில் கவிதைகளை அமைத்து முருகன், தெய்வானை, நாரதர் ஆகிய தேவலோகப் பாத்திரங்களும் பூலோகத்தில் யாழ்ப்பாணத்துமாவிட்டபுரம் கோவிலும் அங்கு ஆலயப்பிரவேசம் செய்கின்ற மக்களும் அவர்களுக்கு எதிரான சாதி வெறியர்களையும் பாத்திரங்களாக்கி மிகமிக அருமையானமுறையில்புதியகவிதை நாடகமாக இதுஅமைந்தது. பழைய காத்தவராயன் மெட்டுக்குப் புதிய உருவம் கொடுத்து இவ்வளவு சிறப்பாக ஒரு சமுதாய உணர்வைத் தட்டி எழுப்புவார்கள் என்று நான் கனவிலும் கருதவில்லை. கதை என்னவென்று தெரியுமா?

முருகனும் நாரதரும் பூலோகத்தில்அதுவும்யாழ்ப்பாணத்திற்கு வருகிருர்கள். அங்கே சாதி அடக்குமுறைகளையும் ஆலயப்பிரவேசத்தைத் தடுத்து நிறுத்தும் பிரமுகர்களையும் காண்கிருர்கள். சிறுபான்மைத் தமிழர்கள் படுகின்ற இன்னல்களை நேரடியாகவே உணர்கிருர்கள். இறுதியில் முருகன் தனது வேலாயுதத்தை மக்கள் கைகளில் கொடுத்து 'போராட்டம்' ஒன்றுதான் இப்பிரச்னையைவெல்வதற்கு வழி என்றுசொல்லிவாழ்த்தி அனுப்புகிருர்.

முருகனுகத் தோன்றிய திரு. மா. சிவஞானசுந்தரம் தமது எடுப்பான தோற்றத்தினுலும் அழகான நடிப்பினுலும் சபையோரைக் கவர்ந்துவிடுகிருர். தெய்வானைக்கு வந்த செல்வன் ஆழ்வாப்பிள்ளையும் அசல் தேவலோகப் பெண்ணுகவே காட்சியளித்தார். நாரதராக நடித்த திரு. கு. சிவராசா ஆரம்பத்திலேயே,

''வீட்டிலே கஞ்சியடா
மேலிலே டெர்லினடா
வாயிலே சீக்கிரெட்டை
ஊதிக்காட்டி வாழுதடா''

என்ற நகைச்சுவைப் பாடலுடன் ஆரவாரமாக மேடையில் தோன்றினுர். இவரது பாடல்கள் அபாரம். இவரைப்போலவே 'கீழ்சாதிமகனுக' நடித்த தி.சோதிசிங், பிரமுகராக நடித்த நா.சிவராசா இருவரும் தமது பாத்திரங்களை மிகச் சிறப்பாகச் செய்தார்கள்.

மிகவும் மெச்சக்கூடிய விஷயம் என்னவென்ருல் நடிகர்கள்அனைவரும்பழைய கூத்துப்பாணியில் மிகவும் நன்ருகப் பாடினுர்கள். பக்கப் பாட்டுக்காரர்களும் ஒத்துழைத்தார்கள் ஐந்துக்கும் மேற்பட்ட உடுக்கு வாத்தியங்கள் அடிக்கப்பட்டன. சமுதாய ஈடேற்றத்திற்கான ஒரு தரமான நாடகத்தை அரங்கேற்றிய பெருமையை நெல்லை சண்முகானந்த நாடகசபை தட்டிக்கொள்கிறது.

—க. பேரன்—




## தேவரின் படம் 4 மொழிகளில்

சிங்கமும் சிறுவனும்' என்ற படத்தை நான்கு மொழிகளில் தயாரிப்பதற்கு சின்னப்பதேவர் திட்டமிட்டுள்ளார்.

'சிங்கமும் சிறுவனும்' தமிழ்ப்படம் தயாராகிக் கொண்டிருக்கிறது. குழந்தை நட்சத்திரம் பிரபாகர் சிங்கத்தில் சவாரி செய்யும் காட்சிகள் படமாக்கப் பட்டன. கரடி, புலி, மலைப் பாம்பு ஆகிய காட்டுமிருகங்களும் இந்தப்படத்தில் இடம்பெறுகின்றன.

இந்தி, கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் தயாரிக்கப்படவிருக்கும் 'சிங்கமும் சிறுவனும்' ஆங்கிலத்திலும் டப் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## ராஜசுலோசன மீண்டும் நடனம்

சமீபத்தில் நடனமாடுகையில் கால்முறிந்து நடனமாடுவதையே நிறுத்தியிருந்த நடிகை ராஜசுலோசன இப்போது குணமடைந்து மீண்டும் நடனமபடத் தொடங்கியிருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாசத்தில் உற்பத்தியானது திராவிட இனம்

"திராவிடரில் இடையிடையே அதிகமாகப் பெண்களிடம் காணப்படும் பொன்நிறம் நாக கன்னியரிலிருந்தே வந்தது. திராவிட இனம் ஒரு கலப்பு இனம், அதாவது திராவிட நாக இனம்."

— செ. நாகலிங்கம் —

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்த விஷயத்தை இத்துடன் முடித்து யான் முதலில் குறிப்பிட்ட இரண்டாவது விஷயத்தைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுவேன். தொடக்கத்தில் குறிப்பிட்ட கட்டுரையில் நாயர்களைப் பற்றிய பின்வரும் வசனங்கள் காணப்படுகின்றன. 'நாயர்களின் இஷ்டதேவதைகள் முருகன் பகவதி. ஐயப்பன் ஆகியோர். அத்துடன் நாகவழிபாடும் செய்தனர்' இதில்வரும் நாக வழிபாட்டைப் பற்றித்தான் எனது ஆராய்ச்சிகளில் சிலவற்றைக் கூறவிரும்புகிறேன். என்னுடைய அபிப்பிராயத்தைப்பற்றிக் கூறுமுன் கில்பர் சிலேட்டர் (Gilbert Slater) என்ற ஆங்கில அறிஞரால்எழுதப்பட்டு அறிஞர் கா. அப்பாத்துரை அவர்களால் தமிழில்மொழி பெயர்க்கப்பட்ட 'இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு' என்ற நூலிலிருந்து ஒரு சுவையான பகுதியைக் கொடுக்க விரும்புகிறேன்.

'மேற்குக்கரையிலுள்ள நாயர்கள் தென்னிந்தியாவின் மிகமிக முன்னேறிய, கல்விகற்ற வகுப்பினுள் ஒன்றைச் சார்ந்தவர்கள். அவர்கள் வகையில் என்வாழ்க்கையின் சுவைமிக்க நிகழ்ச்சி ஒன்றுஉண்டு.

கொச்சி அரசியல் சார்ந்த மனிதஇன ஆராய்ச்சியாளரும் அரசியல் கண்காட்சிச் சாலே, விலங்குக் காட்சிச் சாலை ஆகியவற்றின் காவலருமான தி. ஆனந்தகிருஷ்ண ஐயருடன் நான் திருச்சூரிலுள்ள ஒரு நாயர் குடும்ப இல்லத்துக்குச் சென்றிருந்தேன். ஆங்கில மொழியிலும் பிரஞ்சு மொழியிலும் ஒருங்கே பேசும் ஆற்றலுடைய ஒரு நவநாகரிக மிக்க அணங்கு எங்களை வரவேற்றார். அவர் இசைத்துறையில்கூட வல்லுனராயிருந்தார் அவர் தம்பியாகிய பன்னிரண்டு வயசுடைய ஒரு சிறுவன் வீட்டாசிரியர் ஒருவருடன் உருக்கணக்கியல் பயின்றுகொண்டிருந்தான்.

ஆனல் நாங்கள் வீட்டிற்குப் பின்புறமுள்ள தோட்டத்துக்குச் சென்றபோது, அங்கே மரஞ்செடி கொடிகளுக்கிடையே நாகரின் சிறுகோயில் ஒன்று இருந்தது. அதில் கருங்கல நாகர் வடிவங்கள் இருந்தன, பாம்புகள் நிமிர்ந்து படம்விரித்து நின்றதுபோல் அவைசெதுக்கப்பட்டிருந்தன. இவற்றைச்சுற்றிலும் கம்பிவேலிகள் இருந்தன. அவற்றுக்கப்பால் உயிருள்ள பாம்புகளும் உலவக்கூடுமென்று எண்ண இடமிருந்தது. ஆனல் அவற்றை நாங்கள் காணவில்லை. இக்கோவிலுக்குக் காலாகாலத்தில் வந்து பூசைசெய்யும்படி ஒரு நம்பூதிரி பிராமணன் அமர்த்தப்பட்டிருந்தான். அங்ஙனம் பூசைசெய்யாவிட்டால் பாம்புகள் நாயர் குடிமக்களைக் கடிக்கக்கூடுமென்று நம்பப்பட்டது' - பக்கம் 77.

## நாகவணக்கமும் நாயர்களும்

நாகவணக்கம் நாயர்களுக்கு மாத்திரம் உரியதல்ல. திராவிட இனம் முழுவதற்குமே உரியது. தொன்மை மிக்க நயினை நாகம்மாள் (நாகபூஷணி) கோவிலுக்கு யாழ்ப்பாணத்து மக்கள் யாவருமே கொடுக்கும் முக்கியத்துவம் இதற்கு ஒரு சான்றாகும். நாகமக்கள் இலங்கையின் பலபாகங்களிலும் தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்ததாக வரலாறு காட்டுகிறது.

'பதினெட்டு நூற்றாண்டு கட்குமுன் வாழ்ந்த தமிழர்' என்ற கனகசபை அவர்களின் நூலிலிருந்து மொழி பெயர்த்த ஒரு பகுதியைக் கொடுக்கிறேன், கரிகால் சோழனல் வெல்லப்பட்ட இன்னொரு நாகஇனத்தவர் ஓவியர் என்றழைக்கப்பட்டார்கள். மாமல்ல புரத்தில் காணப்படும் ஒருகல் வெட்டிலிருந்து இந்தநாகர் கி. பி. பதினேராம் நூற்றாண்டிலும் அதிகாரத்திலிருந்ததாகக் காணப்படுகிறார்கள். இந்தக் கல்வெட்டு சோழஅரசன் கோப்பரகேசரிவர்மன் உடையார்ஸ்ரீ இராசேந்திரதேவனின் ஒன்பதாம் ஆண்டில் பொறிக்கப்பட்டது. இவன் மேற்கு சாளுக்கியமன்னன் அகவமல்லனை கோப்பம் என்ற இடத்தில் வென்றவன் கி பி. (1040-1609) மாமல்லபுரத்திலுள்ள வராகசுவாமி கோவிலுக்குத் தர்மசாதனம் செய்யப்பட்ட உறுதியே இந்தக் கல்வெட்டு. இதில் கையொப்பமிட்ட பல உயர்தர அதிகாரிகளில் பின்வரும் நாகர்களும் காணப்படுகிறார்கள்.

ஒலிநாகன் மாதையன்
அழகியசோழன்
அமுர்நாட்டு
மூவேந்தவேலன்
ஒலிநாகன்சந்திரசேகரன்
ஒலிநாகன்நாராயணன்
இந்தப்புரவன் சங்கநாகன்
உச்சன்கிளவன்
முகுல்லிநாகன்

## நாகர்கள் தமிழர்களா?

இந்தநாகர்கள் தமிழர்களா அல்லது தமிழரிலிருந்து வேறுபட்டவர்களா? சென்னையிலிருந்து வெளிவந்து இப்போ நின்றுவிட்ட 'தமிழ்பண்பாடு' (Tamil Culture என்ற ஆங்கிலச் சஞ்சிகைக்கு இரண்டாவது உலகத் தமிழ் மகாநாட்டுடன் பிரசுரிக்கும்படியாக ஒரு நீண்ட ஆராய்ச்சிக் கட்டுரையை யான் எழுதிஅனுப்பினேன். தமிழ் பண்பாடு' நின்றுவிட்டமையால் என்னுடைய கட்டுரையும்வெளிவரவில்லை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 'தமிழ் ஆய்வுகள் என்ற புதுசஞ்சிகையை Journal of Tamil-Studies) இப்போ வெளியிட்டிருக்கிறது. என்னுடைய கட்டுரையை இதில் வெளியிடுவதற்கு முயற்சிசெய்து வருகிறேன். என்னுடைய கட்டுரையில் திராவிடஇனத்தின் உற்பத்தி மிகவும் விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது சிந்துவெளி சுமேரிய, எகிப்திய நாகரிகங்களைப்பற்றிய ஆதாரங்களைக்கொண்டு என்னுடைய ஆராய்ச்சியின்படி திராவிட இனம் கைலாசத்திலே பிறந்தது. அதன் மூதாதையர் யாரென்றல் குமரிகண்டம் கடலுள் மறைந்தபோது எழுந்த பிரளயத்தில்இறைவனருளாலே தப்பிய மனுவும் அவருடன் சென்ற ஏழுபேரும்தான். இவர்கள் சென்ற கப்பல் மீனல் வடமலைகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டதென்று வாயு அக்கினி முரதிய புராணங்கள் கூறுகின்றன. ஆனல் வடமலையில் எந்த இடத்தை மனுவின் கப்பல் ஈற்றில் அடைந்ததென்பதை புராணங்கள் கூறவில்லை. மலே போன்ற கடல்அலைகள் கைலாசத்தை அடைந்த பின்னர், மனுவுடைய கப்பலும் கைலாசத்தின் அடிவாரத்திலிருக்கும் மனசரவாவியை அடைந்தபின்னர் கடல்பின்வாங்கி கடலால் மூடப்பட்டிருந்த உலகத்தில் நிலப்பரப்பும் வெளியாகி யாவும் அமைதி அடைந்தன என்பது எனது முடிவு. இதுவே கைலாசநாதன் ஆலகால விஷத்தை விழுங்கினர் என்பதின்அர்த்தம் என்பது எனது கருத்து. வடமலையை அடைந்த மனு ஒரு யாகம்செய்து அதிலே கடலின்மகள் என்ற ஒரு பெண்உதித்தாள் என்றும்அந்தப்பெண்ணையேமனு விவாகம்செய்து சந்ததியைப் பெருக்கியதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

## நாககன்னியரே திரவிடரின் தாய்

யாகத்தில் பெண் பிறந்த கதையைத் தள்ளிவிட்டு மனுவுடன் சென்றவர்கள் கைலாசமலைப் பகுதிகளில் அப்போ வாழ்ந்த நாகர்களின் அரச குடும்பத்திலே தான் தங்கள் பெண்களை எடுத்தார்களென்பது எனது முடிவு, முதல் பெண்ணை இறைவனே வலைவீசு புராணத்தில் சொல்லப்படும் அற்புதத் திருவிளையாடலைச் செய்து மனுவுடன் தப்பிய எழுவரில் ஒருவரான மனுவின் மகனுக்கு விவாகம் செய்வித்தனரென்பது என்னுடைய முடிவு. இந்தக் கல்யாணம் கைலாசத்தில் நடந்தது. அதுவே அன்று தொடங்கி இன்றுவரை மலைமகள் அல்லது பார்வதி திருக்கல்யாணம் என்று கொண்டாடப்பட்டு வருகிறது. கைலாசத்தைச் சுற்றிவர ஏறக்குறைய இருபத்தைந்துகட்டைதூரம் கைலாசத்துக்குப் போகிறவர்கள் இறைவனை வலம்வருவதாக இந்தப்பாதை வழியாகவே வலம்வருவார்கள். இந்தப் பாதையில் ஓரிடத்தில் கவுரிக்குண்டு எனப்படும் ஒரு சிறுகுண்டு இருக்கிறது. அது [illegible]

அமைதியாகவே இருக்கிறது. கைலாசத்துக்குப் போகிறவர்கள் மேலிருக்கும் பனியை உடைத்து சிலதுளி நீர்எடுத்து தங்கள்மேலில் எறிவதுதான் கைலாசத்தில் நீராடியபலன். கவுரி என்பதன்பொருள் மஞ்சள் நிறப் பிரகாசி (Yellow Brilliant one). இந்த நூற்றாண்டில்தான் நாகராசகுமாரியை மனுவின் மகனுக்கு விவாகஞ் செய்யுமுன் நீராட்டினர்களென்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த விவாகங்களால்தோன்றியஇனமே திராவிட இனம். இதுஆதியிலிருந்தே ஒரு கலப்புஇனம்-திராவிட நாகஇனம் திராவிடரில் இடையிடையே அதிகமாகப் பெண்களிடம் காணப்படும் பொன்நிறம் நாககன்னியரிலிருந்தே வந்தது. இதுவரையில் சுருக்கமாகச் சொல்லியதிலிருந்து திராவிட இனத்தின் முதல் அன்னையர்கள் நாககன்னியர்களே என்பது தெளிவாகும். நாகசாபம் என்று சாதகத்திலும் சாஸ்திரங்களிலும் சொல்வதைத் தமிழர்கள் யாவருமறிவர். இது உள்ளவருக்குப் புத்திரபாககியம் கிடைப்பது அரிது அல்லது கிடையாது என்பதும் யாவருககும் தெரியும். நாகசாபம் பெற்றவர்களென்றல் முற்பிறப்பில் அன்னையரை வருத்தியவர்கள். அன்னைககுப் பெரும் குற்றம் செய்தவர்களென்பதுதான் பொருள் என்பது என் கருத்து.

"குமரிக்கண்டம் கடலுள் மறைந்தபோது உயிர் தப்பிய மனுவும் மற்றும் ஏழு பேரும் தான் திராவிட இனத்தின் மூதாதையர்."

## நாகவணக்கம் எப்படி வந்தது

நாகவணககத்தின் பின்னணியிலிருககும் உண்மையைத் தெளிவாககுவதற்கே திராவிட இனத்தின் உற்பத்தியைப்பற்றிய விபரங்கள் கொடுககப்பட்டன. திராவிட இன மககளே நாகவணககத்தைப்பற்றிய உண்மையைப் பல்லாயிரமாண்டுகளுககு முன்னரே இழந்துவிட்டார்கள். இந்த விஷயத்தை ஆராய்ந்த ஐரோப்பியரும் இன்று நிலவும் தவருன கருத்தைப் பரப்பிவிட்டார்கள். அதாவது திராவிட இனத்தவர் நாகரிகத்தின் தாழ்ந்த நிலையிலிருந்த காலத்தில் நாகங்களால் ஏற்படும் மரணத்துககுப் பயந்து நாகத்தை வணங்கத் தொடங்கினர்களென்பது தான் அவர்களின் எண்ணம்.

மனுவும் அவருடன் காப்பாற்றப்பட்டவர்களும் குமரிகண்டத்திலிருந்துவந்த போதே நாகரிகத்தில் அதுவும் இறைவனைப்பற்றிய அறிவில் மிகவும் உயர்ந்தவர்களாகவேயிருந்தார்கள். அவர்களின் வழிவந்தோர் நாகத்துககுப் பயந்து வணங்கினர்களென்பது ஏற்றுககொள்ளககூடியதல்ல. உண்மையில் இது நாகத்தை வணங்குவதல்ல, இறைவனையும் இறைவியையும் நாகதம்பிரான், நாகம்மாள், நாகபூஷணி என்ற பெயர்களில் வணங்குவதேயாகும். வரலாற்று அடிப்படையில் நாகம் கைலாசநாதனுடனும் அம்மனுடனும்தான் தொடர்புடையது. தொண்டைமானாற்றிலே பரம்பரையாய்வரும் தாலாட்டிலே

"நாகத்தின் கன்றே, நீ
நல்ல குலப்பாம்போ
நாகங்குடை பிடிகக
நற்பாம்புதாலாட்ட"

என்று தாய்மார்கள் சொல்லுவார்கள். நாகலிங்கம், நாகதம்பிரான் உருவம் லிங்கத்துககு நாகம் குடைபிடிப்பதுபோல் அமைந்துள்ளது. செல்வச்சந்நிதி கோவிலுககுச் சென்று வணங்குபவர்கள் வள்ளியம்மன் கோவிலுககு முன்னல் நிற்கும் பூவரசமரத்தின்கீழ் இரும்புக் கிருதிகளுக்குள்ளே இருக்கும் சிவலிங்கத்தைக் கவனித்திருப்பார்களென்று நம்புகிறேன். இது நாகதம்பிரான் என்று சொல்லப்படுகிறது. வள்ளி பூசைக்கு முன் வள்ளிகோவிலில் வைத்திருக்கும் சுருண்டு தலையை உயர்த்தி படமெடுத்து ஆடுவதுபோலச் செய்யப்பட்டிருக்கும் ஒரு ஐந்து தலை நாகத்தை பூசகர் கொண்டுவந்து நாகத்தின் சுருள் லிங்கத்தைச் சுற்றியிருக்கும்படி வைத்தபின் முறைப்படி பூசை நடத்துவதை யாவரும் கவனித்திருப்பார்கள். இந்தப் பூவரசு நிற்குமிடத்திலேதான் முன்னொரு காலத்திலே ஒரு தபோதனர் அடங்கியதாகவும் இங்கேதான் செல்வச்சந்நிதியின் அற்புதசக்தி இருப்பதாகவும் பரம்பரையாய் சொல்லப்பட்டுவருகிறது. தபோதனர் அடங்கிய இடத்தில் ஏன் நாகலிங்கத்தை நிறுவினர்களென்பது தெரியவில்லை, தொண்டைமானின் முன்னேரரகிய பல்லவ மன்னர்கள் தாங்கள் ஒரு நாக இராசகுமாரியின் சந்ததியினரென்று பல பட்டையங்களில் கூறியிருப்பது பல்லவர் வரலாற்றைப் படித்தவர்கள் யாவருக்கும் தெரியும. பல்லவர் தோன்றலாகிய தொண்டைமானுடன் வந்தவர்களின் சந்ததியினரே இன்று தொண்டைமானாற்றிலிருக்கும் பழங்குடிககள். இவர்கள் இறைவனை நாகலிங்க உருவத்தில் பூசித்துவந்ததாகத் தோன்றுகிறது. வேறேரிடத்திலுமில்லாத கோணேசர் கோவிலும் தொண்டைமானாற்றிலிருப்பது பலருக்குத் தெரியுமென்று நம்புகிறேன். தென்கைலாசம் என்று புராணங்களில் கூறப்படும் திருக்கோணமலையிலுள்ள கோணேசர் கோவிலின் உற்பத்தியைப்பற்றியும் கோணேசர் அல்லது கோணப்பர் என்ற பெயரின் கருத்தும் என்னுடைய ஆங்கிலக் கட்டுரையில் மிகவும் விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றன. என்னுடைய ஆராய்ச்சியின்படி கோணேசர் கோவிலின் காலம் குறைந்தபட்சம் கி. மு. மூவாயிரம் ஆண்டுகள் என்று அறுதியிட்டுச் சொல்லலாம். சுமேரிய நாகரிகத்தைப்பற்றுக் கிடைத்துள்ள சில ஆதாரங்களைக் கொண்டே யான் இந்த முடிவுக்குவந்தேன்.

தொண்டைமானாற்றின் பரம்பரைக் குடும்பங்கள் சிலவற்றில் பாடப்படும் தாலாட்டின் தொடக்க வரிகளைக் குறிப்பிட்டு இந்த விஷயத்தை முடிக்கிறேன்.

### தாலாட்டு

"ஆராரோ ஆரிவரோ
ஆரிவரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ
ஆர்பெற்ற பாலகரே
எங்கிருந்து எங்குவந்தீர்
எங்கள் குலங் விளங்க
வைக்க
கோணை அப்பர் சந்நிதியில்
கொடு முடியில்
தானிருந்து
வந்தீரோ பாலகரே
எங்கள் குலம் விளங்க
வைக்க"

கோணை அப்பர் சந்நிதி என்பது கைலாசத்தையே குறிக்கும்.

# மண்

—

கன்னலும் தேனும் கனியும் இன் பாலும் கதலியும் செந்நெலும் நல்கும் உன்னத நாடெங்கள் நாடே!' என்று நாட்டின் மண்வளத்தைப் போற்றி புகழ்கிறர் அமரகவி பாரதியார். மண்ணின் வளம் கொண்டே மற்றவளங்கள் சிறக்கின்றன. எனவே மண்ணின் சிறப்பைச் சற்றே ஆராய்வோம்.

## மண்ணின் சிறப்பு

நிலத்தைத் தோண்டினல் முறையே மேல்மண், கீழ் மண், ஆதிப்பாறை என இம் மூவகை இனத்தை நாம் காண இயலும். இவற்றில் மேல்மண் மிகவும் வளம் பொருந்தியது தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் மேல்மண்ணில் நிரம்பியுள்ளன. மக்கிப்போன தாவர இனங்கள், இறந்தொழிந்த உயிரினங்களின் உடல்கள், ஏனைய பிறவும், உலோகச் சத்துக்களாகவும், பிற சத்துக்களாகவும் மேல்மண்ணில் உருத்தெரியாவண்ணம் ஒன்றிப் பரிணமிக்கின்றன. வளரும் பயிரின் சக்தி இம்மேல் மண்ணைச் சார்ந்ததே. விளையும் பயிருக்குத் தேவையான உணவுச் சத்துக்களையளிக்கும் களஞ்சியமாக, மேல் மண் விளங்குகிறது. இன்று நாட்டின் சகலவளங்களின் வளர்ச்சிக்கும், செழிப்பிற்கும் மூலக்கருவாயிருப்பது இம் மேல்மண்ணேயாகும். ஓர் அங்குலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைமா
பலருக்குத்
நம்புகிறேன்.
என்று புரா
ப்படும் திருக்
யிலுள்ள
காவிலின் உற்
பற்றியும்
ல்லது கோண
பயரின் கருத்
டைய ஆங்கிலக்
மிகவும் விரி
பட்டிருக்கின்
டைய ஆராய்ச்
காணே சர்
லம் குறைந்த
. மூவாயிரம்
று அறுதியிட்
ரம். சுமேரிய
பற்றுக் கிடை
ஆதாரங்களைக்
ன் இந்த முடி

ஞற்றின்
குடும்பங்கள்
ாடப்படும்
தொடக்க வரி
பிட்டு இந்த
டிக்கிறேன்.

## தேமதுரத் தமிழோசை — 3

# "தேன் சிந்தும் மொழி தமிழ்"

# ஜெர்மானிய அறிஞரின் புகழுரை

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டு அதன் இலக்கியங்களைக்கற்றதோடு நில்லாது அம் மொழியின் பலதுறை நூல்கள்தம்மைத் தமிழ்மொழியில் பெயர்த்து தம் நாட்டுமக்களுக்கு அளித்தது மட்டுமன்றி இன்று தமது பல்கலைக் கழகங்களில் அவற்றிற்கு இடங்கொடுத்துப் போதித்துதரும் மேலை நாடுகள் பலவற்றில் ஜேர்மனியும் ஒரு சிறப்பிடத்தைப் பெறுகிறது.

பிரான்சியரைப் போன்றே ஜேர்மனியரும் 18-ம் நூற்ருண்டிலேயே தமிழைக் கற்பதில் ஈடுபடலாயினர். 18ம் நூற்ருண்டில் மற்றைய ஐரோப்பிய நாடுகள் செய்ததுபோன்றே ஜேர்மனியும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பத் தனது பாதிரிமார்களை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது.

### சீகன்பாகுவின் தமிழார்வம்

இவ்வாறு இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பாதிரிமார்களில் முதலாவதாக வந்துசேர்ந்தவர் பதலமியு சீகன்பாகு என்பவராவார். (Batholomaeus Ziegenbalg, இவருடன் இவரது நண்பர்கள் சிலரும் அனுப்பி வைக்கப்பட்டனர். 1682-ம் ஆண்டு ஜூலைமாதம் 10-ந் திகதி சகஸோனியா என்னுமிடத்தில் பிறந்த இவர் ஹலே (Halle) பல்கலைக்கழகத்தில் சமய சித்தாந்தம் நன்கு கற்றவர். இந்தியாவில் கிறிஸ்துமத தேவாலயத்தை நிறுவ வேண்டும் என நோக்கம் கொண்ட இவ்வறிஞர் அதற்காகப் பெரு முயற்சி செய்தார் இதற்கு அங்குள்ள மக்களின்அன்பைப் பெறவேண்டும். அதைபெற வழி அவர்களோடு கலந்து வாழ்ந்து அவர்தம் மொழியைக் கற்று அது வாயிலாகத் தம் மதத்தைப் பரப்பத் தீர்மானித்தார். இதனுல் தமிழ்மொழியையும் தமிழ் இலக்கியத்தையும், இந்து மதத்தையும் நன்கு கற்க ஆரம்பித்தார். முதலில் தமிழைக்கற்க ஆரம்பித்தபொழுது சிறுவர்கள் மத்தியில் அவர்களோடு சேர்ந்து தமிழ்ப் பெயர்களையும் எழுத்துக்களையும் மணலில் எழுதிக் கற்ருர். இவ்வாறு சிறு பிள்ளைகள்போன்று கற்க ஆரம்பித்த சீகன்பாகு தனது புத்திக் கூர்மை

— குணம் —

யாலும் கடும் உழைப்பாலும் குறுகியகாலப்பகுதியில் தமிழை நன்கு கற்றுத் தேறினுர். தமிழ்மொழியைத் தம் தாய்மொழியைப் பேசுவதைப் போலவே ஒருவித கஷ்டமுமின்றிப் பேசினுர். தமிழாற்றல் நன்கு வரப்பெற்ற இந்த அறிஞர் தமிழில் கிறிஸ்தவ நூல்களை எழுத ஆரம்பித்தார்.

இவ்வாறு தமிழில் தம் சமய நூல்களையெழுதவாரம்பித்த இவர் முதலில் விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்த்தார். தமிழ் இலக்கணம், அகராதி, இலக்கியம், மதம் ஆகியவற்றில் இவர் செய்த ஆக்கவேலைகள் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியவை. தமிழ் மக்களோடு நெருங்கி உறவாடினுர். இந்தியாவின்பல பகுதிகளோடும் தொடர்பு கொண்டார். எண்ணற்ற தமிழ் நூல்கள் விசேஷமாகச் சமயச்சார்பு தத்துவச்சார்பு நூல்களைக் கற்ருர். மதபோதனைக்காகப் பல பகுதிகளுக்குப் பிரயாணம் செய்தார். இவை யாவும் அவரது ஆக்கவேலைகளுக்கு நல்ல தகவல்களைத் தேடிக்கொடுத்தன. இவற்றைத் துணையாகக் கொண்டு அவர் எழுதிய எண்ணற்ற கடிதங்கள் இன்றும் பயன்

### நீதி நூல்களை மொழிபெயர்த்தார்

இவ்வாறு இந்தியா பற்றிய தகவல்களைக் கடித மூலம் எழுதி ஜேர்மனிக்கு அளித்த சீகன்பாகு 1708ம் ஆண்டில் தமிழ்நீதி நூல்கள் சிலவற்றை ஜேர்மனிய மொழியில் பெயர்த்துத் தன் பாட்டுக்குத் தமிழ்நாட்டின் தத்துவங்களை அளித்தார், நீதிவெண்பா, கொன்றை வேந்தன், உலகநீதி ஆகிய தமிழ்நீதி நூல்களே இவரால் முதலில் மொழிபெயர்க்கப்பட்டன. இந்த நூல்களில் ஒன்ருன நீதிவெண்பாவர் சீகன்பாகு. இதனுல் எண்ணற்ற தமிழ் நூல்களை விரும்பிச்சேகரித்தார். தான் சேகரித்த தமிழ் நூல்கள் பற்றிய விபரங்களை விளக்கி 1708-ம் ஆண்டு 'பிபிளியோதிகா மலபாரிக்கா' (Bibliotheca Malabarica) என்னும் நூலை வெளியிட்டார்.

அடுத்து அகராதி ஆக்கம் இவர் செய்த ஆக்கவேலையில் முக்கியத்துவம் வாய்ந்தது, இத்தாலிய அறிஞரான பெஸ்சி (வீரமாமுனிவர்) சதுரகராதி உருவாக்கியது போன்றே இவரும் உரைநடை வழக்கிலுள்ள 20,000

## மணலில் எழுதி தமிழைக் கற்ற அறிஞர் சீகன்பாகுவின் தமிழ்த்தொண்டு

படத்தக்கவகையில் ஹலே அறிக்கைகள் (Halle Report) என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுப் பாதுகாக்கப் பட்டுள்ளன. இந்தக் கடிதங்களை வரலாற்றுத் தஸ்தாவேஜுகளாகவே கொள்ளலாம். இந்தியமொழி, கலை, கலாச்சாரம், மக்கள் வரலாறு போன்ற இன்னோரன்ன பல பயன்தரக்கூடிய அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் இக் கடிதத் தொகுப்பை இந்தியா பற்றியறிய விரும்பும் ஐரோப்பியர் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### ஆக்கவேலைகள்

தமிழ் நூல்களைக் கற்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவின் தனது மொழிபெயர்ப்பு நூலுக்கு எழுதிய முகவுரையில் ......மலபார் மக்கள் காட்டுமிராண்டிகள். நீதியோ தத்துவமோ பற்றித் தெரியாதவர்கள் என்ற கருத்து ஐரோப்பியரிடையே நிலவுகிறது. இது மொழிதெரியாததால் ஏற்பட்ட தவறேயாகும். மலபார் மக்களுக்கு ஐரோப்பிய தத்துவங்கள் அத்தனையும் போதிக்கப்பட்டுள்ளன. எனக் குறிப்பிட்டுள்ளார்.

சொற்களுக்கும்மரபுச்சொற்களுக்குப் பொருள்கூறும் தமிழ் ஜேர்மன் அகராதியொன்றைத் தொகுத்தார். இது 4 வருடங்களில் இருமடங்காகியது. இதனோடு மேலும் செய்யுள் வழக்கிலுள்ள 1700 சொற்களுக்கும் இவ்வகராதி பொருள் கூறுகிறது. இந்தத் தமிழ் ஜேர்மன் அகராதிபிற்காலத்திய தமிழ் கற்கும் ஜேர்மானிய மாணவர்களுக்குப் பெரும் துணையாகவுள்ளதோடு 1779-ம் ஆண்டு முதன் முதல் வெளியிடப்பட்ட தமிழ்-ஆங்கில அகராதிக்கும் அடிப்படையாகவிருந்தது.

மலபார் பகுதியிலுள்ள மக்களது எழுத்துவடிங்கள் அவர்களது தெய்வங்கள் கோவில்கள் விழாக்கள் அவர்களது காலம், அவர்கள் மத்தியில் நிலவிய பல்வேறு சாதிப்பாகுபாடுகள் விவசாயம், கைத்தொழில், கலை, கலாச்சாரம், விஞ்ஞானம், இலக்கியம், புராணம் போன்ற இன்னோரன்ன பல அம்சங்களை ஆராய்ந்து கலைக் களஞ்சியம் போன்றதொரு நூலை மலபார் ஹெதென்டம் (Malabar Heathendom) என்ற பெயருடன் எழுதி வெளியிட்டார்.

(12-ம் பக்கம் பார்க்க)

# ...ண் வளம் காத்திடுவோம்!

ம் தேனும்
ன் பாலும்
ந்நெலும் நல்
நாடெங்கள்
நாட்டின்
ப் போற்றி
ரகவி பாரதி
ணின் வளம்
ற்றவளங்கள்
எனவே மண்
பைச் சற்றே

...சிறப்பு

தோண்டினுல்
மல்மண், கீழ்
றை என இம்
த்தை நாம்
ம். இவற்றில்
கவும் வளம்
தாவரங்க
க்குத் தேவை
ள் மேல்மண்
புள்ளன. மக்
வர இனங்
ாழிந்த உயிரி
ல்கள், ஏனைய
ாகச் சத்துக்
சத்துக்களா
ண்ணில் உருத்
ம் ஒன்றிப்
ன. வளரும்
இம்மேல்
ர்ந்ததே. விளை
த் தேவை
ச் சத்துக்களை
ளஞ்சியமாக,
விளங்குகிறது.
ன் சகலவள
ச்சிக்கும்.
மூலக்கருவா
ம் மேல்மண்
ர் அங்குலம்

மேல்மண் உற்பத்தியாவதற்கு ஓராயிரம் ஆண்டுகளாகின்றன என்ருல் இம் மேல்மண்ணின் சிறப்பை என்னவென்று எடுத்தியம்பவிலை மதிக்கவொண்ணு இம்மேல்மண். காற்ருல் வாரப்பட்டும் மழைநீரால் அரித்தும் வீணுகிறது. நாளாவட்டத்தில் இவ்வாறு மேல் மண்ணையிழந்த நிலத்தில் வளரும் பயிரினங்கள், சோடையாக பலனற்று வீழ்ந்து போகும். இவ்வாறு பயிர் வீழ்ந்தால் நாட்டின் சகலவளங்களும் வீழ்ச்சியுறும். வேகமாக வீசும்காற்று, மழையால் சரிவில் ஓடிவழிந்தோடும் நீர். கால்நடைகள் இடம்பெயரும் போது ஏற்படும் புழுதிப்படலம், நிலங்களைத் தரிசாக விடுதல் காடுகளை அழித்தல், சர்குபடி நிலங்களிலிருக்கும் ஏற்றத்தாழ்வுகள், பொருத்தமற்ற விவசாய முறைகளைக் கையாளுதல், ஆகிய இவையே, மண் அரிப்பிற்குச் சாதகமாக இருப்பவை. கண்ணிற்குப் புலனுகாத வகையிலும் மண் அரிப்பு நடைபெற்றுவருகிறது. மழையால் ஏற்பட்ட சிற்றோடை, நிலத்தின் மேல் மண்ணைக் கரைத்து பள்ளம் நோக்கிப் பாய்ந்தோடி 'குறுக்குத்திட்டுகளையும் உடைத்துக்கொண்டு வெளியேறி அருகிலுள்ள ஆறுகளில் கலந்து விடுகிறது.

இவ்வாறு வேளாண்மை செய்யப்படும் நிலங்களில் ஏதாவது ஒருவகை மண்ணரிப்பு நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றது. நாளடைவில் அத்தகைய நிலங்கள், வளங்குன்றி பயிரிடுவதற்குத் தகுதியற்றுப் போய் மண்ணரிப்பு, மலைப்பகுதிகளிலும் சமவெளிப் பகுதிகளிலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு பெரும் தீங்காகும்,

### மண்வளம் காத்தல்

வரப்பிடுவதின் மூலம், மண்ணரிப்பைக் கட்டுப்படுத்துவது நம் நாட்டில் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. 'வரப்புயர... நீர் உயரும்' என்ற முதுமொழியே இதற்குச் சான்ருகும் பன்நெடுங்காலமாக

— கே. எஸ். சுப்பிரமணியன் —

நெல்வயல்களுக்கு வரப்பிடுதல் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. வரப்புப் போடுதலால் ஓடும் மழைநீர், தேவையான அளவிற்குத் தேக்கப்படுகிறது. இதனுல் நிலம் வேண்டிய நீரைத் தன்னுள்ளே உறிஞ்சிக் கொள்கிறது. இவ்வாறு ஈரப்பசையை நிலம்பெறுவதால் அருகிலுள்ள கிணறுகள் குட்டைகள் முதலியவற்றில் நீர்மட்டம் உயருவதற்குரிய சூழ்நிலைகளும் உருவாக்கப்படுகின்றன.

குறுக்குஉழவுமுறை, பயிர் மாற்றுமுறை, கண்டம்கண்டமாகப் பயிரிடுதல், ஆகிய இம்முறைகளும் மண்ணரிப்பைத்தடை செய்...

கும். கால்நடைகளை அளவுக்கு மீறி நிலத்தில் மேயவிடுவதால், அவைகள் இடம் பெயரும்போது, வளமிகு மேல்மண்ணும் இடம்பெயர ஏதுவாகிறது. எனவே, கால்நடைகள் அளவிற்கு மீறி நடமாடுதலைக்கட்டுப்படுத்த வேண்டும். நிலங்களைத் தரிசாக விடுதல் கூடாது. அவற்றில் புல், கொள் போன்று நிலத்தை மூடிக்கவிந்து அடர்த்தியாக வளரும் பயிரினங்களை வளர்த்தல் வேண்டும். இதனுல், காற்ருலும், மழையாலும் மண் அரித்துச் செல்லப்படுவதைத் தடுப்பதோடு, நிலம் ஈரப்பசையுடனிருக்கவும்உதவலாம். காற்றடிக்கும் திசைக்கு நேர்எதிராக நீண்டுவளரும் மரங்களையும், குடைபோலக் கவிழ்ந்து வளரும் மரங்களையும் மாற்றி மாற்றி நடுவதால், காற்றின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டு, மண் வீணுவது காக்கப்பெறுகிறது.

### உழவரின் கடமை

மண்வளப் பாதுகாப்பு முறைகளை விவசாயிகள் நன்கு கையாள வேண்டும். மண்வளப் பாதுகாப்பு செய்யப்பட்ட இடங்களில், மகசூல் அதிகரித்து நல்ல பயனை ஈந்துள்ளது என்பதற்கு, ஆதாரமான புள்ளிவிபரங்கள் உள்ளன. மண்ணின் தரத்தைப் பரிசோதிப்பதற்காக, மண் மாதிரிகளை விவசாய ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி சோதனை செய்து, ஏற்ற உரங்களை இட்டுப்பயிர்செய்தால் பயிர் செழித்து வளர்ந்து நல்ல மகசூலை நல்கும். மண்ணரிப்பைத் தடுக்கப்போடப்பட்ட வரப்புகளின்மீது, அடர்த்தியாகப் புல் வளரும்போது செய்தல்வேண்டும். வரப்புகள், கால்நடைகளால் உடைக்கப்படுவதைத் தடுத்தல் வேண்டும். வரப்புகள் இடப்பட்ட பின்பு, எத்தனை ஆண்டுகளானுலும். அவற்றைச் செவ்வனே பாதுகாத்துப் பேணுதல், உழவரின் தலையாயகடமையாகும்.

### திட்டம் செயல்படுதல்

"மண்வளப் பாதுகாப்புத் திட்டம்" என்னும் விழிப்புணர்ச்சி, தமிழ்நாட்டில் அரசியலாரால், பஞ்சநிவாரணத்திற்காகவும் பரீட்சார்த்தமாகவும், முதன்முதலில் உருவாக்கப்பட்டது. மண்வளப் பாதுகாப்புமுறைகளை அனுசரிப்பதால், மகசூல் கூடி வருவதைக் கண்கூடாகக் கண்டதும் இத்திட்டம் பல்கிப்பெருகியது! இன்று தமிழக வேளாண்துறையின் ஒருபெரும் பிரிவாக இத்திட்டம் இயங்குகிறது. கனடா. ஜெர்மனி முதலியநாடுகளுக்குச்சென்று, நவீனமுறைகளைக்கற்றறிந்தபொறியியல் வல்லுனர்களின் திறமையால் இத்திட்டம், சீரிய முறையில் இயங்கி, நாட்டின் மண்வளத்தைச்செழிப்புறச் செய்துவருகிறது.

விவசாயப் பெருங்குடிமக்கள், பொன்னிலும்மேலான மண்ணின் வளம்காக்க, அருகிலுள்ள விவசாயப் பொறி இயல் வல்லுனர்களை அணுகி வேண்டிய உதவிகளைப் பெறலாம். மண்வளப் பாதுகாப்பிற்காகத் தமிழ்நாடு அரசு தனது ஐந்தாண்டுத்திட்டங்களில், ஏராளமான தொகையை ஒதுக்கியிருக்கிறது. மண்வளப்பாதுகாப்புத்திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்த தமிழக வேளாண்துறை அயராது பாடுபட்டு வருகிறது. வேளாண்குடி மக்கள் இத்திட்டத்தின் பரிபூரண பயனைப்பெற்று, நாட்டின் வளம்காத்திடுவார்கள். வரப்பு உயர்ந்தால், நீரும், நெல்லும், குடியும், அரசும் உயரும்! வரப்புஉயரப்பாடுபடும் மண்வளப் பாதுகாப்புத்திட்டம் நாட்டின் நலனுயரப் பாடுபடும் நல்லதொரு திட்டம்.

பசியும், பிணியும், பகையும் நீங்கி, வசியும், வளனும் சிறக்க "மண்வளம்காத்திடுவோம்!"

(நன்றி: திட்டம் மார்ச்70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்' என்பார்கள். இருதயமும் பிரதானந்தான் என்கிருர் இக்கட்டுரையாளர்.

# மனிதனை இயங்க வைப்பது

— ருஸ்தம் ஜால் வக்கீல் —

மனித இருதயத்தின் கதை ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் எகிப்திலே ஆரம்பிக்கிறது. அங்கே கலைகள் மிக உயர்ந்த நிலையை எட்டியிருந்தன. நாகரிகம் வளர்ச்சியுற்றிருந்தது. இறந்தவர்களின் சவங்களைப் பாதுகாத்து வைப்பது 'மம்மி' எனப்படும். இந்தக் கலை அவர்களுக்குப் பழக்கமாகியிருந்ததால், மனித இருதயத்தின் உள் அமைப்பு அவர்களுக்கு நன்ருய்த் தெரிந்திருக்கவேண்டும். பாதுகாத்த சவத்தில், இருதயத்தை மாத்திரம் அப்படியே வைத்துவிடுவது அந்த நாளில் வழக்கம். மற்ற உள் உறுப்புக்களையெல்லாம் எடுத்துவிடுவார்கள். பழங்கால எகிப்தியர்களுக்கு இருதயத்தைப்பற்றி எவ்வளவு உயர்வான மதிப்பு இருந்தது என்பதையே இது காட்டுகிறது.

## மூடிய கைக்குள் இது அடங்கும் ஆனல் அதன் செயல் அற்புதமானது

பொருள்களைக் குறிப்பிட்ட உருவங்களையே எழுத்துக்களாக வரையும் 'ஹைரோக்ளிஃப்' முறை பழங்கால எகிப்தியரிடம் இருந்தது. இப்படி இருதயத்தைக் குறிப்பிட அவர்கள் மனித இருதய உருவத்தை வரைவதில்லை, எருதின் உருவத்தைத்தான் வரைவார்கள். 'பாப்பிரஸ்' என்ற ஒருவகை நாணல் தட்டை மட்டையைஉரித்து தட்டிதயாரித்த காகிதத்தில் அந்தக்காலத்து எகிப்தியர் எழுதிவந்தார்கள். அப்படி அவர்கள் எழுதிய சில காகிதச்சுருள்களைச் சமீபத்தில் சவக்குழிகளிலிருந்து ஆராய்ச்சிக்காரர்கள் தோண்டி எடுத்திருக்கிருர்கள். பல நூற்ருண்டுகளுக்கு முற்பட்ட இந்தக் காகிதச்சுருள்களில், இருதயம், நாடி இவைகளைப்பற்றிய ரசமான குறிப்புகள் காணப்படுகின்றன.

மூடிய கை அளவுக்கு மேல் இல்லை மனித இருதயம்.

இவ்வளவு சிறிதாயிருக்கும் இருதயம் செய்யும்வேலைகள் அற்புதமானவை. சுமாரான மனித இருதயம் ஒன்று 60 வருஷகாலம் இரத்தத்தை 'பம்ப்' மாதிரி இறைக்கிறது. நிமிஷம்ஒன்றுக்கு75 தடவை இப்படி இறைக்கிறது. ஒரு மனிதனின் உடம்பில் உள்ள அத்தனை இரத்தக் குழாய்களையும் ஒன்றுக்குப்பின் ஒன்ருகநீட்டிவைத்தால்60,000 மைல் நீளமிருக்கும். இத்தனை இரத்தக் குளாய்களுக்கும் இரத்தத்தை இறைத்துப் பாய்ச்சுவது இருதயம்தான். இருதயம் ஒரு வருஷத்தில் 3 கோடியே 70 லட்சம் தடவையும் அறுபது வருஷத்தில் 222 கோடி தடவையும் அடித்துக்கொள்கிறது. இரத்தத்தை ஒரு முறை இறைப்பதும், களைப்பாறுவதும், மறுமுறை இறைப்பதும் களைப்பாறுவதுமாகவே இருதயம் வேலை செய்கிறது. அறுபது வருஷத்தில் இப்படி அது வேலை செய்யும் நேரம் 22 வருஷந்தான். மீதி 38 வருஷமும் களைப்பாறும் நேரமாகும்.

இருதயம் தன் முழுச் சக்தியையும்கொண்டு எந்த நேரமும்வேலைசெய்வதில்லை. இருப்பாக அபாரமான சக்தியை வைத்துக்கொண்டிருக்கிறது. நெருக்கடியோ அவசரத் தேவையோ வரும்போது அந்த இருப்புச் சக்தி உபயோகமாகிறது. தேகத்துக்குக் கடுமையான சிரமம் ஏற்படும்போது இருதயத்தின் சகஜமான உழைப்பு நான்கு மடங்காகக் கூடப் பெருகிவிடும்.

இருதயம் நின்ருல் மரணந்தான் என்றே சில வருஷங்களுக்கு முன்வரைக்கும் நிபுணர்கள்கூட எண்ணியிருந்தார்கள். நின்றுபோன இருதயத்தை மீண்டும் ஓடச்செய்து பிழைப்பூட்டுவது சாத்தியமே என்று இப்போது நிரூபணமாகிவிட்டது. ஐக்கிய அமெரிக்காவில் இருதயம் நின்றுபோன 322 பேரில் 110 பேரை மீண்டும் பிழைப்பூட்டியிருக்கிருர்கள்.

சென்ற சிலவருஷங்களில் நிபுணர்கள் 'யந்திர இருதயம்' அல்லது 'செயற்கை இருதய'த்தைக் கண்டுபிடித்துள்ளார்கள். மனிதனின் இயற்கையான இருதயத்துக்கும் சுவாசப்பைக்கும் சற்றுநேரம் ஓய்வுகொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக வேலைசெய்யக்கூடியது இந்த 'செயற்கைஇருதயம்' அந்த நேரத்தில் இயற்கை இருதயத்திலோ சுவாசப்பையிலோ அவசியமான ரண சிகிச்சையைச் செய்கிருர்கள்.

'இருதய நோய்' (ஹாட் டிஸீஸ்)என்பதை இப்போது மிகவும் விரிவான பொருளில் வழங்குகிருர்கள். நேரே இருதயத்தில் ஏற்படும் கோளாறுகளைத் தவிர, தேகத்தில் உள்ள இரத்தக் குளாயில்ஏற்படும் கோளாறுகளையும் 'இருதயநோய்' என்றே குறிப்பிடுகிருர்கள்.

'இருதயம் நின்றது'-அதாவது மாரடைப்பு என்ருல் திடீர் மரணம் என்றே சாதாரண ஜனங்கள் எண்ணிவிடுகிருர்கள். வைத்திய நிபுணர்கள் இப்படி எண்ணுவதில்லை. உடலுக்கு வேண்டிய போஷணைத் தேவைகளைச் சமாளிக்க முடியாததாலேயேஇருதயம் நின்றுவிடுகிறது என்றுதான் நிபுணர்கள் நினைக்கிருர்கள்.

மனித இருதயம் எவ்வளவு சிறியது. அதன் நிறை எவ்வளவு அற்பமானது. இதைப் பார்க்கும்போது அது எத்தனையோ இடையூறுகளுக்கும் தொல்லைகளுக்கும் ஈடுகொடுத்துக் கொண்டு, ஒரு மனிதனின் ஆயுள் காலம்முழுவதும் செய்யும் வேலை எவ்வளவு பெரிய அற்புதம் என்று நாம் வியக்காமல் இருக்க முடியாது.

—நன்றி யூனிவர்சிட்டி ஜேர்னல், பம்பாய்.




# முந்திரிகைச் செடியை உற்பத்தி செய்வோம்

— கு. வி, மகாலிங்கம் —

முந்திரிகை மரங்கள் தற்செயலாக நாட்டப்பட்டும், தாளுக வளருபவைகளாகவும் காணப்படுகின்றன. ஆனல் கிழக்கு மாகாணத்தில் கடற்கரையோரங்களில், மட்டக்களப்பிற்கு அண்மையில் முறைப்படியாக வளர்க்கப்பட்டுக் காணப்படுகின்றன.

முந்திரிகை ஓர் உறுதியான விருட்சமாகும். இவற்றைச் செய்கைபண்ணுவதற்கு அதிகமான வளமோ அன்றிக் கூடுதலான கவனமோதேவையில்லை. இவை காய்ந்த மணல் தரைகளிலும் வளருகின்றன. முந்திரிகைப் பருப்புகளுக்கு வெளிநாடுகளில் அதிக கிராக்கிஇருப்பதினுல் இவற்றைப் பெருமளவில் அபிவிருத்தி செய்வதன்மூலம் அதனை இலாபகரமான ஏற்றுமதிப் பொருளாக்கலாம். அதன் மூலம் அந்நிய செலாவணியை மீதப்படுத்தலாம். முந்திரிகைப் பருப்புக்கள் பிரதான வியாபாரப் பெறுமதியையுடையனவாகும். இம்முந்திரிகைப் பருப்புக்கள் இன்பகரமான சுவைத்திறன் உள்ளவை. ஊட்டவளம் நிரம்பியதாய் இருக்கின்றன. இவற்றில் புரட்டீன் நிறைய உண்டு விதைகளைக் காயவைத்தோ வறுத்தோ அன்றி நெருப்பில் இட்டுவாட்டுவதன் மூலமோ விதையில்நின்றும் பருப்புக்களைச் சுலபமாகப் பிரித்தெடுக்கலாம். இதன் எண்ணெய் மிகவும் முக்கியமான துணையுற்பத்திப் பொருளாகும். நீர்ஊருது பாதுகாக்கும் நேரடி உபயோகப் பொருளாக எடுக்கக்கூடியதாகவும், சாயம், வாணிஷ் போன்றஉற்பத்திப்பொருள்களைப் பாதுகாத்து வைக்கும் பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது. இதிலிருந்துநேரடியாகப் பெறப்படும் பிரயோசனத்திற்கு மேலதிகமாக சீதோஷ்ணத்தில்நின்றும் பாதுகாக்கக் கூடிய வாணிஷ் பொருட்கள், தட்டெழுத்து இயந்திரத்திற்கு உபயோகப்படுத்தப்படும். பல மூலப் பொருள்களையும் உற்பத்தி செய்யவும் முடியும் பழரசம், ஜாம், 'சிறப்' போன்ற சுவையான உணவுப் பண்டங்களும் இவற்றிலிருந்து தயாரிக்கலாம்

## முந்திரிகை நடுதல்

பொதுவாக விதைகளின் மூலம் உண்டுபண்ணப்படுகின்றன. மிகவும் உலர்ந்த விதைகள் இவற்றிற்காகப் பயன் படுத்தப்படுகின்றன. நடுகை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட இடத்திலேயே விதைகளை நடுதல் வேண்டும். விதை இலை வெளிவரும்பொழுது அணில், எலி ஆகிய பிராணிகள் அவற்றை அழிக்காது பாதுகாக்கவேண்டும். 1 1/2 X 1 1/2 அடிப் பிரமாணமுள்ள குழிகளைத் தோண்டி, இரண்டு மாதங்கள்வரையில் சுவாத்திய நிலைக்கு உள்ளாகும்படி விடுதல்வேண்டும். விதை நடுவதற்குமுன்பு எருக்களையும் கூட்டுப் பசளைகளையும்இட்டு அவற்றை நிரப்பவேண்டும். 2, 3 அங்குலத்திற்கு மண்ணினுல் மூடிவிடவேண்டும். நல்ல இனத்தைத் தெரிவு செய்துகொண்டு பொருத்தமற்ற 'பெதன்' என்ற இனத்தைக் குறைத்துவிட வேண்டும். சந்தைக்குப் பெறுமதியான விதைகளை மட்டக்களப்பு, நீர்கொழும்பு, சிலாபம் ஆகிய இடங்களில் பெறலாம். 6 - 8கிழமைகள் சென்றபின்பு வயல்களில் நடுகை செய்யலாம். இளம்கன்றுகள் நன்ருக வளரும்பொருட்டு பொதுவாக ஈரலிப்பான சுவாத்தியமுள்ள காலங்களில் நடுதல் நன்று. மழை குறைந்த இடங்களில் மணற்தரைகளில் நடப்படும் கன்றுகளுக்கு வரண்ட சுவாத்தியமுள்ள காலங்களில் நீர் ஊற்றுதல் அவசியம்.

அதற்கென வேண்டிய பசளையை இடுதல் நன்மையாகும். பொதுவாக 3, 4வருடங்களின்பின்பு மரங்கள் காய்க்கத் தொடங்குகின்றன. 30 - 40 வருடங்கள் வரையும் நல்ல விளைச்சலைக் கொடுக்கின்றன. அறுவடை செய்யும்போது வளைந்த கத்தியைத் தடியில்கட்டி பயன் படுத்தலாம். இதுவரையில் பூனகரி, மன்னூர்ப் பகுதிகளில் முந்திரிகைச் செய்கைக்கு காணிகள் வழங்கப் பட்டுள்ளன. மேலும் காணி அங்கு வழங்க இருப்பதாகவும் அறியக்கிடக்கிறது. யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் காரியாலயத்தில் மேலதிக அரசாங்கஅதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் இதுவிடயமான உற்பத்திப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

முந்திரிகைச் செய்கையில் நாட்டம்கொண்ட வசதியான ஆட்களுக்கு காணி கொடுக்கப்படும்.

பலவழிகளிலும் பிரயோசனமான முந்திரிகை விருட்சத்தை இந்தநாட்டில் அபிவிருத்தியடையச் செய்ய வேண்டும்.

## நரகத்திற்கு பால்வாங்க யார் போவார்கள்?

'அம்மா நீ இறந்தால் சொர்க்கத்துக்குப் போவாயா?'

'ஆமாம் போவேன்.'

'நான் இறந்தால் சொர்க்கத்துக்குப் போவேனு?'

'ஆமாம் போவாய்'

'நம் நாய்க்குட்டி டாலி செத்துப்போனுல் சொர்க்கத்துக்குப் போகுமா?'

'ஊகூம் போகாது.'

'நம் பசுமாடு இறந்தால் சொர்க்கத்துக்குப் போகுமா?'

'ஊகூம் சொர்க்கத்துக்குப் போகாது.'

'அப்படியானுல் பால் வாங்கிவர யார் நரகத்துக்குப் போவார்கள் அம்மா?'

உதவி (பழைய ஆங்கில நூல்)

## மனிதப்பேய்

-நெடுந்தீவு லக்ஸ்மன்-

கரியநிறம் நெடிதுருவம்
பேயென்பர் இடு
காட்டினிலே பிணத்தி
டையே
உலவு மென்பர்
அறிஞரென எண்ணியவர்
வார்த்தை கேட்டு
அஞ்சிடுவர் பேய்அதனை
நினைத்தே மாந்தர்
காட்டினிலே பிணத்தி
டையே
இல்லை ஆனல்
காணுகிருேம் பேயைநாம்
உண்மை; எங்கே?
நாட்டினிலே உலவிடும்
மனித உளத்தில்
நடமாடிக் களிக்கின்ற
லஞ்சப்பேயை
கேடுகெட்டு மதிநீங்கி
அலையும் மனதில்
வீடுகட்டி வாழ்ந்திருக் கும்
காமப் பேயை
எக்காள மிடுகின்ற
அறியாமைப் பேய்
துயரப்பேய் வாழ்க்கைய
தைச்
சிதைக்கும் கொடிய
வறுமைப்பேய், யுத்தப்பேய்
எல்லாம் கூடிக்
காட்டினையும் பிணங்களையும்
துறந்து வந்து
கட்டியணைத் தெம்முடலில்
வாழுதிங்கே.

# சந்திரனின் தோற்றம்..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

போக்குடன் எரிமலைப்போக்கும் தொடர்புகொண்டவையாகக் காணப்படும். இத்தகைய போக்கு பசுபிக் சமுத்திர தீவுகளில் அதிகமுள்ளது. சந்திரனிலும்எரிமலைகள அதிகமுண்டு என நிரூபிக்கப்பட்டுளளது. ஆகவே எரிமலைத் தொடர்பு அடிப்படையும் இதனையே வலியுறுத்துகின்றது எனலாம்.

■ பூமியின் அடர்த்தி சராசரி 5.5 ஆகவும், சந்திரனின் சராசரி அடர்த்தி 3.46 ஆகவும் காணப்பட்ட போதிலும் பூமியின் வெளியோடு 3 அடர்த்தியையும், சந்திரனின் வெளியோடு 3.46 அடர்த்தியையும் கொண்டுளளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

■ பூமிக்கும் சந்திரனுக்கும்உளள இடைத்தூரம் 100 ஆண்டுகளுக்கு 5 அடி. மூலம் அதிகரித்துக்கொண்டு போகின்றன. இத்தகைய அதிகரிப்பு பூமி — சந்திரள் முன்பு கிட்டஇருந்து பின் விலகிவிறகிச் செல்லுகின்றன என்பதற்கு எடுத்துக் காட்டாகும். சந்திரன் ஏறக்குறைய 500 - 400 [illegible] களுக்குமுன் தோ[illegible] போது பூமியிலிருந்து 8000 மைல்களுக்கு அப்பால் இருந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. அக்காலத்தில் சந்திரப் பிரயாணத்தை மேற்கொண்டால் இலங்கையிலிருந்து இங்கிலாந்து வழியாக அமெரிக்காவுக்குச் செல்லும் தூரமே ஆகும்.

இத்தனைக்கும் பசுபிக் சமுத்திரத்தை மனதில் கொண்டு தேடும்போது அகப்படும் ஆதாரங்களைக் கொண்டு பூமியிலிருந்து தான் சந்திரன் பிரிந்துசென்றது என்ற இறுதி முடிவுக்கு வந்துவிடமுடியாது. பூமியிலிருந்து சந்திரன் தோன்றியது என்ற ஐயப்பாடு இருப்பதால் ஞாயிற்றுத் தொகுதியின் தோற்றத்திற்கூடாக பூமியின் தோற்றத்தைத் தெளிவுபடுத்தும்போது சந்திரனின் தோற்றம் தானுகவே விளக்கப்படும். ஆயினும் சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைத்துவிட்டு அங்குள்ள கற்களுடன் திரும்பி வந்துள்ளமை விஞ்ஞான ஆராய்ச்சிக்கு புதிய அம்சம் கிடைத்துள்ளது. சந்திரக் கற்களின் இனம்பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. [illegible] மேலும் புதிய தகவல்களைத் தரும் என்பதில் ஐயமில்லை.

தற்போது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் அண்டவெளி ஆராய்ச்சியின் வெற்றி கோள்களின் தோற்றம் பற்றிய தெளிவான விளக்கத்தைக் கொடுக்கும்போது சந்திரனின் தோற்றம் பற்றிய புதிர் தானுகவே விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேயன்துறையும் கயாத்துறைப் பிள்ளையாரும்

— க. ஏரம்பமூர்த்தி —

22-3-70-ல் வெளிவந்த 'ஈழநாடு' வாரமலரில் காங்கேசன்துறைப் பிள்ளையார் கோவில் அநாதியானது எனக் காட்டுமுகமாக அப்பிள்ளையார் கோவில் நிருவாக உரிமையாளராகிய நான், காங்கேயன்துறை பற்றியும், அதன் கண்ணுள்ள வீரபத்திரர் கோவி பற்றியும் வீர சைவநெறி பற்றியும் தப்பான வரலாறுகள் புனைவதாக, வீரகுரு அவர்கள் 'வீரசைவநெறி' என்னும் கட்டுரையிற் கூறியுள்ளார். இதே கருத்தை திரு. வ. குமாரசாமி அவர்களும் 15-1-70-ல் வெளிவந்த கட்டுரையிற் கூறியுள்ளார். திரு குமாரசாமி அவர்கள் அப்பிள்ளையார் கோவிலுக்கு, நான் கயாத்துறைப் பிள்ளையார்கோவிலெனப் பெயரிட்டதாகவும் பொருள்பட எழுதியிருந்தார். நான் வரலாறு கூறும் ஆசிரியர்கள் கூருத நவவரலாறுகளைக் கூறவும் இல்லை. புதிய பாடல்களைச் சிருஷ்டித்து அவை தொன்மையானவையெனக் கூறவும் இலலை.

16-11-69-ல் காங்கேயன் துறைத் துறைமுக அபிவிருத்தித்திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அன்று 'ஈழநாடு' ஒரு சிறப்பிதழை வெளியிட்டது. இச்சிறப்பிதழில் எனது முதலாவது கட்டுரை வெளிவந்தது. இக் கட்டுரையில் காங்கேயன்துறைபற்றி வரலாறு கூறும் ஆசிரியர்கள் கூறும் வெவ்வேறு கருத்துக்களைக் கூறினேனேயன்றிப் பிள்ளையார்கோவிலுக்குப் புகழ் வரவேண்டுமெனக் கட்டுரை புனையவில்லை. அக் கட்டுரையின் தலையங்கம் மாவை முருகனுக்குச் சிறப்புக் கொடுத்தே எழுதப்பட்டது. அக் கட்டுரையில் பிள்ளையார் கோவில்பற்றி நூலாசிரியர்கள் கூறியுள்ள குறிப்புகளை மட்டும் கூறினேன். 16-11-69-ல் காங்கேயன் துறையில் உரையாற்றிய தேசியமய சேவைகள் அமைச்சர் திரு. வீ. அ. சுகததாசா அவர்களும் இப்பிள்ளையார் கோவில்பற்றிக் குறிப்பிட்டார்.

வரலாறுகூறும்நூல்கள்பல காங்கேயன்துறையின் புராதன நாமம் கயாத்துறை எனவும் இத்துறைக்கு கயாத்துறை எனப் பெயர் வந்தது புத்த சமயத்தவர்கள் கயா செல்வதற்குத் தோணி ஏறிய காரணத்தால் எனவும், கி. பி. எட்டாம் நூற்றுண்டின் இறுதியில் மாருதப்புரவீக வல்லியால் வரவழைக்கப்பட்ட காங்கேயன் விக்கிரகம் வந்திறங்கிய காரணத்தால் இத்துறை காங்கேயன்துறை எனப் புது நாமம் பெற்றது எனவும் கூறுகின்றன. குரக்கன் துறை காங்கேயன்துறையின் புராதன நாமம் என ஒரு வரலாற்று நூல்களிலும் கூறப்படவில்லை. கயாத்துறை என்னும் நாமம் வழக்கொழிந்து கழிந்துவிட்டது, காங்கேயன்துறையில் கயாத்துறை என ஒருபகுதி இன்று இல்லை. பிள்ளையார் கோவில் மட்டும் கயாத்துறைப் பிள்ளையார் கோவிலென அழைக்கப்படுகின்றது. குரக்கன் துறையென ஓர் மீன் பிடித்துறை இருக்கின்றது.

காங்கேயன்துறை பற்றிக் கூறும் 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' ஆசிரியர் ''கயாத்துறை:- இது காங்கேயன்துறையின் புராதன நாமம் ........... கயாவுக்குப் பிரயாணம் பண்ணுவோர் தோணியேறும் துறையாய் இருந்தமையின் கயாத்துறை என்று பெயர் கூறப்பட்டதாகும். இத்துறையின் கண்ணேயுள்ள கணேசாலயம் ஒன்றுக்கு யாத்திரைப் பிள்ளையார் கோவில் என்னும் பெயர் வழங்குகின்றது. அவ்வாலயம் தொண்டு தோன்றியது என்ப. ஆகலான் அதன் இயற்பெயர் கயாத்துறைப் பிள்ளையார் கோவில் என்று ஊகிக்கப்படும். கயாத்துறை என்னும் இடப்பெயர் வழக்கொழிந்து கழியவே, பிள்ளையார் கோவிற் பெயரும் சிதைந்து விகாரப்பட்டது விந்தை அன்று. நாயன்பதி ராயன் வயல் என்னும் நாமத்தை நாகதம்பிரான் வயல் என நவின்று கொள்ளும் நாவல்லோருக்குக் கயாத்துறை என்பதனை யாத்திரை எனக் கரைந்துகொள்ளுதல் கஷ்டமன்று'' எனக் கயாத்துறைப்பிள்ளையார் கோவிலை யாத்திரைப் பிள்ளையார்கோவிலெனக் கூறுபவர்களையும் கண்டிக்கிருர் (நூல் இரண்டாம் பாகம்-பக்கம்111)இவ்வாசிரியர் காங்கேயன் துறைக்குக் கிட்டிய கிராமத்தில் வசித்தவர் காங்கேயன் துறைபற்றி நன்கு அறிந்தவர். இவர் குரக்கன்துறை பற்றியோ அங்குள்ள வீரபத்திரர் கோவிலைப் பற்றியோ கூருமல்விட்டது ஏனோ? இவரும் பிள்ளையார் கோவில் நிர்வாகியா?

சுன்ஞகம் வரதபண்டிதர் இற்றைக்கு இருநூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன் வசித்தவர். இவர் சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம், பிள்ளையார்கதை, கிள்ளைவிடுதூது, வைத்திய நூலாகிய அமுதசாகரம் முதலிய பல நூல்களை எழுதியவர்.

கிள்ளைவிடுதூது என்னும் நூலில் பிள்ளையாரைப் பாடுகிருர். இதோ பாடல்:

57 ''நந்திப் பூமாலை நர<br>
பதியும் பாண்டவரும்<br>
பந்திப் படை பொருத<br>
பாரதத்தை - முந்தியே

58 சேற்றிருக்குஞ் செங்கம<br>
லச் செங்கையிற்றன்<br>
வெண்கோட்டாற்<br>
பாற்றிருக்குஞ் செம்<br>
பொன் வரைப்பால்<br>
வரைந்தோன் - வீற்றி<br>
ருக்கும்

59 அண்டர் முதன் மூனி<br>
வரம் புவியோரன்<br>
புடனே<br>
கண்டவர்கள் போற்<br>
றுங் கசாத்துறையும்<br>
-துண்டமதி''

காங்கேயன்துறையில் உள்ள பிள்ளையார்கோவில், குருநாதர் சுவாமிகோவில், நாச்சிமார்கோவில் பற்றிக் கிள்ளைவிடு தூதிற் குறிப்பிடும் புலவர் பெருமான் தொன்மையானது எனக் கூறப்படுவதும், பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலுள்ளதுமான வீரபத்திரர் கோவில் பற்றிக் கூருமல் விட்டது ஏனோ? புலவர் பெருமானும் பிள்ளையார் கோவில் நிர்வாகியா?

16-11-69ல் காங்கேயன் துறையில் உரையாற்றிய வீ. அ. சுகததாசா அவர்கள் இப்பிள்ளையார்கோவில் இவ்வூர் கயாத்துறையாக இருந்த காலந்தொட்டே இருந்ததெனவும், கயாவுக்கு யாத்திரை செய்த புத்தர்கள் இப்பிள்ளையாரை வழிபட்டனர் எனவும் கூறினூர். தெக்ஷண கைலாய மான்மியம் கயாவிலிருந்து கதிர்காமம் செல்ல வந்து இத்துறையில் இறங்கிய கயாமுனிவராம் பவானந்த முனிவர் இக்கோவிலில் வழிபட்டாரெனக் கூறுகிறது. ஸ்ரீவீரபத்திர குருசுவாமி கோவில் கும்பாபிஷேகமலர் ஆசிரியர் ''புத்த குருமாருக்கும் முனிவர் என்ற நாமம் இருப்பதனுல் காயாவிலிருந்துவந்த கயாமுனிவர் பௌத்த முனிவரன்றி கதிர்காமம் போகவந்த கயா முனிவரல்ல.'' பவானந்த முனிவர் என்ற நாமங்கள் பௌத்த நூல்களிற் கூறப்படும் நாமமென்பர்'' எனக் கூறிப் பவானந்த முனிவரைப் புத்த முனி என்கின்ருர். கும்பாபிஷேக மலர் ஆசிரியர் இவ்வாறு கூறும் நோக்கம் பிள்ளையார்கோவிலின் தொன்மையையே மறுப்பதேயாகும். புத்த மதத்தினர் பிள்ளையாரைப் பூசிப்பதை அவ்வாசிரியர் அறியார்போலும். டாக்டர் டி. எம். பி, மகாதேவன் எம்.ஏ, பிஎச். டி. தமது 'இந்துசமயத் தத்துவம்' என்னும் நூலில் ''கணபதி கோட்பாடு இந்து மதத்திற்கு மட்டும் உரியதன்று. புத்தமதம் வளர்ந்து வரும்போது இக்கோட்பாட்டினைத் தன்னுள் சேர்த்துக் கொண்டது'' எனக் கூறுகிருர். ஆகையால் பவானந்த முனிவர் புத்தமுனிவராயின் அமைச்சர் கூறிய வரலாறு முற்றிலும் உண்மையாகிறது. அமைச்சர் பிள்ளையார்கோவில் நிர்வாகியா?

தோம்பு என்னும் காணிச் சாசனங்கள் கி. பி. 17ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தோன்றியவை. தோம்பில் பிள்ளையார்கோவில் இருக்கும் காணி 'ஆனந்தப் பிள்ளையார் வளவு' எனக் குறிக்கப்பட்டுள்ளது. வீரபத்திரர் கோவில் இருக்கும் காணி எழுவர் வளவு எனக் குறிக்கப்பட்டுள்ளது. தோம்பு தோன்றிய காலத்தில் தொன்மையானதெனக் கூறப்படும் வீரபத்திரர் கோவில் இருந்திருக்குமாயின் அத்தோம்பை எழுதியவர்கள் அக்காணிக்கு வீரபத்திரர் வளவு எனக் குறிக்காமல்விட்டது ஏனோ? தோம்பை எழுதியவர்கள் பிள்ளையார்கோவில்நிர்வாகிகளா?

எல்லாவற்றிற்கும் மேலாக இக்கோவிலில்உள்ளமூலமூர்த்தி இக்கோவிலின் தொன்மையை எடுத்துக்காட்டுகின்றது. இக்கோவிலில் உள்ள மூலமூர்த்தி தான்தோன்றியாகிய சுயம்புமூர்த்தி. மூர்த்தியின் உயரத்துக்கு அமையப் புதிய கோவிலை அமைப்பித்த காரணத்தினுலேயே இக்கோவிலின் மூலஸ்தானம் மிகவும் பதிவாக இருக்கின்றது. வீரகுரு அவர்களோடோ அல்லது திரு. குமாரசுவாமி அவர்களோடோ வாதிடும்காலம் ஒன்று வரும் என மூலஸ்தானமும், மூலமூர்த்தியும் அமைக்கப்பட்டிருக்கமாட்டாது அல்லவா?

# உதவி இருதயம்

நோயுற்ற இருதயத்தை வெட்டி எடுத்து விட்டு மாற்று இருதயம் பொருத்துவதற்குப் பதிலாக, நோயுற்ற இருதயத்திற்குதவியாக இரண்டாவது இருதயம் ஒன்றைப் பொருத்தக் கூடிய சாத்தியம் பற்றிப் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். இது சம்பந்தமாக நாய்களின் மீது சோதனைகள் நடத்தப்படுகின்றன.

மான்செஸ்டரில் உள்ள பிரிட்டிஷ் ஆய்வுநிலையத்தைச் சேர்ந்த அறுவை மருத்துவர் டாக்டர் கென்னத்புளோர் 'இயற்கை என்னும் மருத்துவ சஞ்சிகையில் இது பற்றி எழுதியிருக்கிருர்.

ஒரு நாய்க்கு இரண்டாவது இருதயம் ஒன்றைத் தலைகீழாகப் பொருத்தி இரண்டு இருதயங்களையும் இணைத்து இரண்டாவது இருதயத்தில் தேவையில்லாத பாகங்களைத் தாம் மூடிவிட்டதாக அவர் தெரிவித்தார்.

ஏழு நாய்களின் மீது அவர் இத்தகைய சோதனைகளை நடத்தியிருக்கிருர்.

பெரும்பாலான நோயாளிகளுக்குத் தேவைப்படுவதெல்லாம் கூடுதலான ஓர் இருதய இரத்தம் செலுத்தும் அறைதானு? என்பதைக் கண்டு பிடிப்பதே தமது நோக்கம் என்ருர் அவர்.

இந்த ஏழு நாய்களில் ஆறுநாய்கள் அறுவைக்குப்பிறகு உயிர் பிழைத்தன. ஒருநாய் 48 நாட்களுக்கும்மேலாக வாழ்ந்து கொண்டிருக்கிறது. புதிய இருதயத்தைநிராகரிக்கும் அறிகுறி இப்போது தோன்றியுள்ளது.

இரண்டு இருதயங்கள் பொருத்தப்படுவதில் உள்ள நன்மை என்னவென்ருல் நோயாளியின் சொந்த இருதயம் அகற்றப்படுவதில்லை. இதனுல் இரண்டாவது இருதயம் நிராகரிக்கப்பட்டால் அதை அகற்றிவிட்டு மற்றென்றைப் பொருத்த முடியும் என்று அவர் விளக்கினுர்.

# லெனினும் காந்தியும்

—பி. ஷாஸ்தித்கோ, எம். எஸ்ஸி.—

கீழை மக்களின் சுதந்திர சுயாதீனப் போராட்டத்தின் நடைமுறைத் தந்திரம் பற்றிய பிரச்னைகளில் லெனினுக்கும் எம். என் ராய்க்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. அக் கருத்து வேறுபாடுகள் காந்தியைப் பற்றிய கருத்துக்களில் இன்னும் மிகக் கூர்மையாகவிருந்தன.

ராய் தனது பழைய நினைவுக் குறிப்புகளில் ''இந்தியாவின் தேசவிடுதலைப் போராட்ட இயக்கத்தின் தலைவர் என காந்தியை லெனின் ஒப்புக்கொண்டார்'' எனக் குறிப்பிடுகிருர். ''காந்தியின் பங்கு என்ன என்பதில்தான் எங்களுக்குள் வேறுபாடுதோன்றிற்று. வெகுஜன இயக்கத்தின் தலைவரும், அதை ஊக்குவித்தவருமான காந்தி ஒரு புரட்சிவாதியென நம்பினுர் லெனின். அரசியல் ரீதியாக காந்தி எவ்வளவுதான் புரட்சிவாதியாகத் தோற்றமளித்தாலும் சமய, கலாசார பழமைக்கு உயிரூட்டுபவர் என்ற முறையில் அவர் சமுதாய ரீதியில்பிற்போக்குவாதியே என்று நான் பிடிவாதமாகக் கூறினேன்'' என்கிருர் எம். என். ராய். (எம். என். ராயின் வாழ்க்கைக் குறிப்புகள், பம்பாய் 1964, பக்கம் 379)

எனினும் இந்திய விடுதலை இயக்கத் தலைவரின் நடவடிக்கைகளை லெனின் தொடர்ந்து கவனித்து வந்தார். 1922 ஜனவரியில், அவர் ''ஒரு பிரசாரகரின் குறிப்புக்கள்'' என்ற கட்டுரைக்கான ஆதாரங்களைச் சேகரித்தார். ஆனுல் துரதிருஷ்டவசமாக அக்கட்டுரை எழுதி முடிக்கப்படவில்லை; அவர் ஒரு திட்டத்தை வகுத்தார்; அதில் உள்ள ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை காந்தியைத்தான் நேரடியாகக் குறிக்கிறது என்பது இக்கட்டுரையாளரின் கருத்து. ''இரு அணிகளும் ஒரு மத்திமப் பாதையும்; இந்து - டால்ஸ்டோயன்'' என்று லெனின் எழுதினூர். ''இந்து-டால்ஸ்டோயன்'' என்று அவர் யாரைக் குறிப்பிடுகிருர்? அவர் காந்தியைத்தான் கூறுகிருர் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் லெனின் காந்தியின் தத்துவங்கள்பற்றியும், டால்ஸ்டாயின் கருத்துக்களில் காந்தி வைத்திருந்த ஆழ்ந்த மதிப்பைப்பற்றியும் நன்கு அறிந்திருந்தார்.

கிரெம்ளினில் லெனினது படிக்கும் அறையிலிருந்த 'கம்யூனிஸ்ட் அகிலம்' சஞ்சிகையில் (மலர் எண்பா 19, 17 டிசம்பர் 1921. 'வி. ஐ. லெனினுக்கு' என்று எழுதியிருந்த குறிப்பு) 'இன்றைய இந்தியாவின் நிலைமை' என்று தலைப்பிடப்பட்ட கட்டுரை ஒன்று உள்ளது. (ஆனுல் இக் கட்டுரையின் ஆசிரியர் யார் என்று நிர்ணயிக்கமுடியவில்லை) இந்தியாவின் தேசவிடுதலை இயக்கத்தில், காந்தி பற்றியும் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்துவதற்கு அஹிம்சை முறையைக் கடைப்பிடித்தது பற்றியும் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் வாசகங்கள் பின்வருமாறு: 'விவசாய, தொழிலாளி, தேசிய இயக்கங்களுக்கும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான அங்கீகரிக்கப்பட்ட தலைமை ஸ்தாபனமான இந்திய தேசிய காங்கிரஸுக்கும் தேசவிடுதலை என்ற ஒரே குறிக்கோள்தானிருந்தது.' 'கம்யூனிஸ்டுஅகிலம்'சஞ்சிகையை முழுவதும் கவனமாகப் படித்தவர் லெனின்; இக்கட்டுரையைப் படித்த பின்னரும் அவரது கருத்துக்களில் எவ்வித மறுப்பும் தோன்றவில்லை என்று நான் கருதுகின்றேன்

1921 பிப்ரவரி 14-ல் இந்தியப் புரட்சிவாதியான அப்துராப்பை லெனின் சந்தித்தர்; பிற்பகல்2-30மணி முதல் 3 மணிவரை நீடித்த அவர்களது உரையாடல்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமத்துறை

— கங்கா புத்திரன் —

## வள்ளுவன்சொல்லுக்குத்தக வாழ்வை அமைப்போம்:—

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

என்று வள்ளுவப் பெருமான்மீது மட்டற்ற மதிப்பு வைத்து அமரகவி சுப்பிரமணியபாரதி இவ்வாறு பாடுகின்ருர்.

பாரதியார் குறிப்பிடுவதுபோல தமிழ் மொழியின் பெருமை வள்ளுவராலேயே உயர்ந்திருக்கின்றது. திருக்குறளின் சிறப்பை உணர்ந்த பலநாட்டினரும் தத்தமது மொழிகளில் அதனைப் பெயர்த்தெடுத்துள்ளனர். வையத்துள் வாழ்வாங்கு வாழக்கூடிய நல்ல சமுதாயத்தை உருவாக்கிவைக்க வள்ளுவர் ஆழ்ந்த ஞானத்தினூடே அனுபவத்தை இசைத்து ஆக்கியது திருக்குறள். அத்தகைய திருக்குறளைக்கொண்டவர்கள் தமிழ்பேசும் மக்கள். திருக்குறள்தான் தமிழ்வேதம். திருக்குறள்தான் தமிழனது வாழ்க்கைநெறி என்பதை ஒத்துக்கொள்கிருேம் ஆனல் நடைமுறை வாழ்க்கையில் அதனைக் கொள்கிருேமா? இந்தக் கேள்விக்குப் பதில் கூறுவோர் எண்ணிக்கையை விரல்விட்டுக்கூட எண்ண முடியாது.

சொல்லுக்கும், செயலுக்கும் ஸ்நாநப் பிராப்தியே இல்லாதவகையில் சமுதாயம் வாழுகின்றது. 2000 ஆண்டுகளாக மேடையில் மேற்கோள் காட்டுவதற்கு மட்டும் வள்ளுவரைப் பிடித்து இழுத்துக்கொண்டு வருகின்ற நாம் அவரது ஒரே ஒரு குறளான 'வையத்துள் வாழ்வாங்கு' வாழுகின்ற செயலைக் கொள்ளவேண்டாமா?

அப்போதுதான் வள்ளுவனை உலகினுக்கே தந்த வான்புகழ் நமக்காகும்.

## இல்லையென்றுரைப்போர்க்கு இல்லையென்று உரையா இதயம்

இன்றைய உலகில் மனிதனைச் சுற்றியிருக்கின்ற பிரச்னைகள் எண்ணிலடங்காதவை. வாழ்க்கையை சதா எதிர்நீச்சலடித்தே செலுத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலை நம்மவர்களுக்கு உண்டென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்; ஆனலும் சோதனைகளை வெற்றிகண்டு இலட்சியங்களையே அடைகின்ற பண்பு நமது முன்னவர்களின் இதயங்களிலே என்றும் நீங்கியதில்லை. நமது நாட்டின் பண்பாடு, கலை கலாசாரப் பெருமைகளைக் கட்டிக்காத்து வந்தவர்கள் முன்னுளைய சான்ருண்மைமிக்க புலவர்கள். அவர்கள் படைத்த இலக்கியங்கள் இலட்சியம் என்ற ஒளித்தம்பமாக இன்றைக்கும் விளங்குகின்றன.

நமது வாழ்க்கையின் இலட்சிய வழிகாட்டிகளாக பண்டையோர் படைத்த பாத்திரங்கள் காலத்தை எதிர்நீச்சலடித்து நிலைத்துவம் பெற்றுள்ளன:

பலவித பண்புகளுக்கும் நம் புராண இலக்கியங்களுள் பாத்திரங்கள் உள்ளன. சத்தியத்துக்கு அரிச்சந்திரன், வீரத்துக்கு விஜயன், மல்லுக்கு வீமன், நேரிய பண்புக்கு இராமன். இப்படியே எத்தனையோ பாத்திரங்களைச் சொல்லலாம் அதிலே ஒருவன் கர்னன். அவனே வள்ளண்மையின் உயிர்த்துவம். உயிர்போகின்ற காலத்தில் கண்ணன் அவனிடம் யாசிக்க தருமத்தையே தானமாக வழங்கிய கர்ணன் பிரதியாகக்கேட்டது: ''இல்லையென்றுரைப்போர்க்கு இல்லை என்று உரையா இதயம்....''

## கண்ணென்று மனம் ஒன்று:—

மனிதனுடைய கண்ணுக்கும் மனத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கண்ணுல் காணுகின்ற காட்சியினை கண் பார்ப்பதுடன் நிறுத்திவிடுகின்றது. அதிலே தோய்கின்றது மனந்தான்:

நீண்டுயர்ந்த மலையை ஒரு கவிஞன் பார்ப்பானுனல் மலையின் அழகும் மலையிலிருந்து விழுகின்ற அருவியின் ஓட்டமும் அதனை மருவியசோலைகளும் தெரியும். இந்த அழகினுக்கூடாக அவன் பெரிய தத்துவங்களைக் காண்கின்ருன்.

நிலத்தின் தன்மையை அறியக்கூடிய அறிஞன் கண்ணில் மலையும் அதன் சூழலும் அப்படியே தெரிந்தாலும் அவனது சிந்தனை அந்தப்பிராந்தியத்தில் வளரக்கூடிய பயிரினங்களைப்பற்றியே ஆராயும். ஒவ்வொரு மனிதனது இயல்புக்கும்தக அந்த மலைபற்றிய தோற்றம் ஒன்ருக அமையினும், மனம் அதுபற்றிச் சிந்திக்கின்ற வகையில் வேறுபடுகின்றது. எனவே கண்ணுக்குரிய இடத்திலும் மனமே பெரிய இடத்தை வகிக்கின்றது. திருஞானசம்பந்தப்பெருமான் கடற்ருேணிபுரத்தை கண்களாலே பார்த்தார். அங்குள்ள கிளி ஒன்றின் அழகில் ஈடுபட்டு ........

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனெடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத்
தொடுதரளம்
துறையாரும் கடற்ருேணி......''

இவ்வாறு அழகை வர்ணித்துப்போய் ஈற்றில் கிளியை பார்த்து

''புரத்தீசன் துலங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே!''

என்று அவரது சிந்தையிலே எழுந்த சிவத்தின் பற்று இவ்வாறு முடிவுசெய்கின்றது.

எனவே நமக்குள்ள கண்ணை ஆதாரமாக வைத்து நோக்குவதைவிட, மனதை ஆதாரமாக வைத்து நோக்கும்போது ஒவ்வொன்றிலும் உண்மை தோன்றும்.

# தேன்சிந்தும்மொழி....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நூலையடுத்து இவர்களது தெய்வங்கள் எவை எங்கிருந்து தோன்றியன என்பனவற்றையும் அவற்றின் நிலை எவ்வாறு வெளியிடப்பட்டன. செய்யுளிலுள்ள இவற்றைக்குறிக்கும் பெயர்கள் என்ன, அவற்றின் கடமைகள் யாவை என்பவற்றை ஆராய்ந்து அறிந்து மலபார் 'தெய்வங்களின் மரபுமுறை(Genealogy of Malabar Gods) என்னும் நூலை எழுதிவெளியிட்டார், இந்நூலைப்பற்றி மிகச் சுருக்கமாக நாம் கூறப்புகின் இந்துமதத்தின் பூரண புராண வரலாறு என்றே கூறிவிடலாம்.

இறுதியாக1715-ம்ஆண்டு இவர் வெளியிட்ட தமிழ் இலக்கண நூலும் ஜேர்மனியில் தமிழ் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையானது. இந்த இலக்கண நூல் ஹலே (Halle)யில் இலத்தீன் பெயருடன் வெளியிடப்பட்டது

சீகன்பாகுவின் மேற்குறிப்பிட்ட நூலாக்கங்கள் இந்தியா பற்றிபூரண அறிவைப் பெறவும் தமிழ்மொழிபற்றியறியவும் சிறந்த சாதனங்களாகும். இவற்றிற்கு அவரது காலத்திலேயே முக்கியத்துவம் கொடுத்து மதித்தால் ஜேர்மனியில் இந்தியா பற்றிய கலாச்சாரக் கல்வி இன்று 150 வருட வளர்ச்சியை அடைந்திருக்கும். அத்துடன் 'ஐரோப்பாவில்தமிழ் மொழி கீழைத்தேச மொழிகளோடு சிறப்பாகக் கற்கவும் கற்பிக்கப்படவும் தக்கது என்றஅவரது வேணவாவும்நிறைவேறியிருக்கும்.

அநேகமான ஐரோப்பிய அறிஞர்கள் பழகு தமிழிலே எழிய நடையில் மத நூல்களையும் மொழிபெயர்ப்புகளையும் செய்தார்களெனினும் அவர்கள் மத்தியில் செந்தமிழில் எழுதும் ஆற்றல் மிக்கவர்களும்இருக்கத்தான் செய்தார்கள். சீகன்பாகு காலத்திலேயே இந்தியா சென்று தரங்கம்பாடி மிஷனில் சேர்ந்து தம் கிறிஸ்து மதத்துக்காக உழைத்த ஜோனன் பிலிப் பபிரீசியஸ் (Johanan Philipp Fabrizius) என்ற ஜேர்மனிய அறிஞர் 1740-ம் ஆண்டு கூடலூரையடைந்து தம் வேலைகள் மத்தியில் தமிழைமிகநுணுக்கமாகக்கற்றுச் செந்தமிழ் நடையில் எழுதத்தக்க ஆற்றல்பெற்ருர் கவிதைநடையைச் சிறப்பாகக் கற்ற இவர் தம் மதத் துதிப் பாடல்கள் பலவற்றைத் தமிழில் யாத்ததோடு விவிலிய நூலையும்தமிழில்மொழி பெயர்த்தார். இப்பாடல்கள் இன்றும் புகழ்பெற்றனவாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர் தமிழ் அகராதியொன்றையுருவாக்கியது மட்டுமன்றி 1779-ம் ஆண்டு தமிழ்-ஆங்கில அகராதியின் முதல்பதிப்பையும் வெளியிட்டார்.

## செந்தமிழ்நடைவல்ல ஜோனன்

தரங்கம்பாடி மிஷனைச் சேர்ந்த சீகன்பாகு, ஜோனன்பிலிப்பபிரீசியஸ் (Johann Fhilipp Fabrizius) ஆகிய இரு அறிஞர்களும் மற்றும் இம்மிஷனைச் சேர்ந்த சில அறிஞர்களும்ஆரம்பித்து வைத்த தமிழ் கல்வி பின்னர் வந்து சேர்ந்த லீப்சிக்மிஷனரிமார்களால் (Leipizig Mission) மேலும் வளர்ச்சியடைந்தது. சீகன்பாகு ஆரம்பித்துவைத்த மொழிபெயர்ப்பு வேலைகளைத்தொடர்ந்து இந்த மிஷனைச்சேர்ந்த மிஷனரிமார்கள் செய்தனர். தரங்கம்பாடி மிஷனைச்சேர்ந்த மேற்குறிப்பிட்ட அறிஞர்கள் தமிழ்க்கல்வி கற்பதற்காகத் தமிழுக்காற்றிய சேவையே பிற்காலத்தில் ஜேர்மனியில் தமிழ்க்கல்வி சிறப்புற வழிவகுத்தன. இவர்களே இந்தியாவில் முதன்முதல் மகளிர் பாடசாலையொன்றை நிறுவியவர்களாவர். நூல்களைப் பெருந்தொகையாக வெளியிட அச்சுயந்திரத்தை இந்தியாவுக்குக் கொண்டு வந்து சேர்த்த பெருமையும் இந்த அறிஞர்களுக்கே உரியதாகும். 1713-ம் ஆண்டில் தரங்கம்பாடியில் ஒரு அச்சுக்கூடத்தை நிறுவினுர்கள். இதன்பின்னர் தமிழ் அச்சுக்கூடமும் அவர்களால் நிறுவப்பட்டது. ஜேர்மனியிலுள்ள ஹலே என்னும் நகரில் தமிழ் எழுத்துக்கள் வெட்டப்பட்டு இத்தமிழ் அச்சுக்கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஐரோப்பியமொழிகளில் தமிழ்இலக்கியங்களை உருவாக்க 1712ம் ஆண்டில் லத்தீன் அச்சுயந்திரங்களும் இங்கிலாந்தில் இருந்து தருவிக்கப்பட்டன.

தரங்கம்பாடி மிஷனரிமார்கள் செய்துவைத்த இந்த வசதிகள் யாவும் பின்னர் ஜெர்மனியில் இருந்து வந்த லீப்சிக் மிஷனரிமார்கள் (Leipzig Mission) அவர்களது சேவையைத் தொடர்ந்து அதாவது தமிழ்க்கல்வியைச் சிறப்பாக விரைவாகக் கற்றுக் கொள்ளவும் மொழிபெயர்ப்புகள் செய்யவும் வாய்ப்பாகவிருந்தன.

## 19-ம் நூற்ருண்டின் ஜேர்மானிய தமிழறிஞர்

லீப்சிக் மிஷனின் (Leipzig Mission) அதிபரான காள்க் ரோல் (Karl Grul) 19-ம் நூற்ருண்டின்தலைசிறந்தஜேர்மானிய தமிழறிஞராவார். பல மொழிவல்லுனரான இவர் தமிழையும் ஆர்வத்தோடு கற்ருர். தமிழ்மொழி மற்றைய மொழிகளிலும் பார்க்கக் கற்பதற்குக் கஷ்டமானதும் தனக்கென ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததுமாகுமெனக் குறிப்பிட்ட இவர் அதன் இனிமையை நன்குணர்ந்து 'தேன்சொட்டும் மொழி' எனவும் குறிப்பிட்டுள்ளார். 1850-ம் ஆண்டில் தரங்கம்பாடிக்கு வந்த இவர் அதிகாலையிலேயே எழுந்திருந்து தமிழைக் கற்பார். கற்றபின்னர் தமிழ் அறிவை விஸ்தரித்துக் கொண்டார். இலகுவில் திருப்தியடையும் தன்மையற்ற இந்த அறிஞர் செந்தமிழைப் படிக்க விரும்பி இலக்கணவமைதியோடு செந்தமிழையும் கற்ருர். இதனுற்ருன் பின்னர் இவர் மற்ற ஜேர்மானிய அறிஞர்களிலும் பார்க்க முதன்முதலாக தமிழ்நூல்கள் பலவற்றை ஜேர்மன் லத்தீன், ஆங்கிலமொழிகளில் பெயர்க்க வாய்ப்பாக விருந்தது. இவரின் தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பு வேலைகள் பைபிலியோதிகா தமுளிக்கா (BibiliothecaTamulica) என்ற பெயரில் நான்கு தொகுதிகளையுள்ளடக்கியுள்ளது. முதலாவது தொகுதியில் ஜேர்மன் மொழியில் பெயர்க்கப்பட்ட இலக்கியங்கள் இடம்பெறுகின்றன. ஆத்மபோதபிரகாசிகை, கைவல் ஞானவனிதா, பஞ்சதசபிரகரணம் ஆகியன மொழிபெயர்க்கப்பட்டு அதற்கு விளக்கங்களும் எழுதப்பட்டன.

இரண்டாவது தொகுதியில் கைவல்யானவனிதா (Kaivaljanavanita) ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இத்துடன் சொற்ருெகுதியொன்றும், சமஸ்கிருத வேதாந்த விளக்கங்களும் இதில் இடம்பெறுகின்றன.

## குறளை மொழிபெயர்த்த முதல் ஐரோப்பியர்

அடுத்த 3-வது 4-வது தொகுதிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்பு அடங்கியுள்ளது. குறளைப் பூரணமாக மொழிபெயர்த்து வெளியிட்ட முதல் ஐரோப்பியர் என்ற பெருமை இவரையே சாரும். இவரது மொழிபெயர்ப்பு வேலைகள் யாவற்றிலும் முதலில் வைத்தெண்ணப்படுவது. இந்தக் குறளை ஜேர்மன் மொழியில் பெயர்த்ததேயாகும். குறளில் மிகுந்த விருப்புடைய இவர் குறள்பற்றி முன்னுரையொன்றையும் எழுதியதோடு விளக்கங்களையும் சொற்றொகுதியையும் சேர்த்து வெளியிட்டுள்ளார். இந்தியாவினது குறிப்பாகத் தமிழர்களது அறவாழ்க்கையைப் பிரதிபலிப்பதை குறளின் 3 அதிகாரங்களிலும் கண்ட காள்க்ரோல் ஐரோப்பாவுக்கு இதை எடுத்து விளக்கச்செய்த அரியசேவை தமிழுக்கே செய்த அரும்பெரும்பணியாகும். குறளின் சிறப்பை நன்குணர்ந்த இந்த அறிஞர் 'தமிழர்களது பழைய இலக்கியச் செல்வத்தின் தலையாய முத்து குறள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றைவிட நம்பியாண்டார் நம்பியின் அகப்பொருள் விளக்கம், அருள்நந்தி சிவாச்சாரியாரின் சிவஞானசித்தியாரில் ஒருபகுதி, தாயுமானவர் பாடலிற் சில ஆகியவற்றையும் மொழிபெயர்த்தார்.

இவர் தனது தமிழ் அறிவை வளர்ப்பதற்கும் மற்றும் தமிழ் கற்கவிழையும் தன் நாட்டவர்க்குதவவும் லீப்சிக் நகரில் ஒரு நூல் நிலயத்தை நிறுவவேண்டுமென விரும்பிஅதற்காக 150 நூல்களைச் சேகரித்தார். இன்று இது சிறிய தொகையாக நமக்குத் தென்பட்டாலும் பல வசதியீனங்களையுடைய அவரது காலத்தில் இது ஒரு பெரிய தொகையாகவே கருதப்பட்டது. இந்த சிறிய நூல் நிலையம் இன்றும் ஜேர்மனியில் உளது.

இதையடுத்து ஜேர்மனியில் தமிழ் கல்வி வளர்ச்சி பெறவுதவிய மற்றுமொரு சாதனம் லீப்சிக்கில் நிறுவப்பட்ட தமிழ் அச்சுயந்திரசாலையாகும். காளின் இலக்கண நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், தமிழ் நூல்கள் ஆகிய யாவும்இங்கு அச்சிடப்பட்டவையாகும். மொழிபெயர்ப்புமட்டுமன்றி பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

## கல்வெட்டுகளிலும் கவனம் செலுத்தினர்

தமிழ்மொழிக் கல்வியில் மட்டுமன்றி ஜேர்மானிய அறிஞர்கள் தென்னிந்தியாவிலுள்ள கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்து அவற்றினைப் பற்றிய ஆராய்ச்சியிலும் ஈடுபடலாயினர். சமஸ்கிருத மொழியில் நல்ல பாண்டித்தியமுடைய(EugenHultzsch) இயூஜீன் ஹல்ற் என்ற ஜேர்மானிய பேராசிரியர் 1896-ம் ஆண்டில் உதகமண்டலத்தில் இருந்து தென்னிந்திய கல்வெட்டுகள் பற்றி ஆராய்ந்து ஒரு நூலை வெளியிட்டார். தமிழ்நாட்டில் இத்துறையில் செய்த ஆய்வுகள் குறித்துப் பல கட்டுரைகளையெழுதினுர்.

## ஜேர்மன்மொழியில் நாயன்மார் பாடல்கள்

மேலும் தென்னிந்தியாவில் லீப்சிக் மிஷனில் 1879-1945வரை கடமையாற்றிய (Hilko Wiando Schomerus) ஹில்கோ வியன்டோஸ்கோமறஸ் என்பவரும் ஜேர்மனியில் தமிழ் கல்வி இந்நூற்ருண்டில் வளர்ச்சிபெற வழிவகுத்தவராவார். கீல் (Kiel) ஹலே (Halle) பல்கலைக்கழகங்க

(15-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

திருக்கேதீச்சர ஆலய திருப்பணி நிலையத்திற்கு ஐம்பது வயதிற்கு மேற்பட்ட சைவசமயத்தைச் சார்ந்த நல்லொழுக்கமுடைய ஓர் அன்பர் தேவை. தங்குவதற்கு இடவசதியும் மாதம் ரூபாய் ஒரு நூற்றைம்பது வேதனமும் கொடுக்கப்படும். அரசபணியிலிருந்து ஓய்வு பெற்றவர் விரும்பத்தக்கது. விரும்புவோர் வைகாசிமாதம் (15) பதினைந்தாம்திகதிக்குள் விண்ணப்பிக்கவும். கௌரவ செயலாளர், தி.ஆ.தி.சபை, திருக்கேதீச்சரம்,25.4-70
2077

### விற்பனைக்கு

யாழ்ப்பாண இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கையில் பரமேஸ்வராக் கல்லூரிக்கண்மையில் நிலப்பரப்பு ஒன்று விசாலங்கொண்ட காணியில் சகல வசதிகளுமமைந்த புதுக் கல்வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளும் விலாசம்: பொ. நா. நடராசா, நொத்தாரிசு, 10, இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர்மடம். 2045

கார்

நல்ல நிலையில் CN தொடர்பு இலக்கமுள்ள A 40 கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ஐ. ராசநாயகம், 336, பருத்தித்துறை ரோட், நல்லூர். 2098

காணி

உடும்பராய் சந்திக்கு அண்மையில் குடியிருப்பதற்கு வசதியான 3 1/2 பரப்புக்காணியும் வீட்டுடன் கூடிய 20 பரப்பு தோட்டக் காணியும் விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும், த. சுப்பிரமணியம், உடும்பராய் வடக்கு, உரும்பராய். 2099

கடைச்சல் பட்டடைகள் 6அடி, 8அடி, 10அடி நீளம் கொண்டவை. பழையதும், புதியதும் விற்பனைக்குண்டு. வேலைநாட்களில் எப்பொழுதும் வந்து பார்வையிடலாம். நெல்லியடி இன்டஸ்றியல் வேர்க்ஸ், நெல்லியடி, கரவெட்டி. 2070

### வாடகைக்கு

பகுதி வீடு

சமயலறை, குளியலறை, மலசலகூடம், கராஜ் ஆகியவற்றோடுகூடிய 3 அறைகளைக்கொண்ட இளம் தம்பதிகளுக்கு வசதியான ஒரு பகுதிவீடு யாழ்ப்பாணத்தில் நியாயமான வாடகைக்கு விடப்படும். டாக்டர்கள் அல்லது ஆசிரியர்கள் விரும்பத்தக்கவர்கள். பெரிய பாடசாலை, வைத்தியசாலை, கடைகள் ஆகியவற்றிற்கும் யாழ்.கச்சேரிக்கும் அண்மையில் உள்ளது. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல.2094, C/o ஈழநாடு,யாழ்ப்பாணம்.
2094

### கல்வி

ஜீ. சீ. ஈ. கலை/விஞ்ஞான/வர்த்தக/சிங்கள (காலை/மாலை) வகுப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். யாழ்ப்பாண டியூடோறியல்கல்லூரி, 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
2089


## நாகரிகத்தின்

(4ம்- பக்கத் தொடர்ச்சி)

ந்து நன்மதிபுகட்டி நல்லொழுக்கம்பூண்டு. குடும்ப நிர்வாகங்களை உயிருள்ளவகை செவ்வனே நடாத்தி அருந்ததியைப்போல் திகழ்ந்தால், இம்மையிலும் மறுமையிலும் கற்புடைய தெய்வங்களாகக் கருதப்பட்டுப் பேரும் புகழும் அடைவீர்கள் என்பது திண்ணம்.

# உங்கள் இராசி பலன்

ஜோதிஷமணி மேல்கரவை
காவ. சிவப்பிரகாசன்

(5—5—70— —12—5—70)

**மேடம்**

சகபாடிகள் தொல்லை அதிகரிக்கின்றது. உறவினரை நம்பி ஏமாறவேண்டாம், புத்திரரிடையே பாரபட்சம் காட்டாதே. காணித் தகராறில் பணவிரயம், கன்னிப் பெண்களுடன் காதல் விவகாரம், வேலைத்தலஊழியரின் உதவி, செய்தொழில் சிறப்பு இவைநிகழலாம்.

**இடபம்**

கற்றோருடன் சினேகம் காணுவீர், பெண்களால் உதவி, செய்தொழில் பணமுடக்கம், உலக இன்பநாட்டம், உற்றாரிடம் பகைமை, கலைவிஷயங்களில் ஈடுபாடு, இரத்தாசயம் சம்பந்தமாய வியாதி, திடீர்விபத்து காண இடமுண்டு.

**மிதுனம்**

உள்ளபணம் வாரமுற்கட்டத்திலேயே விரயமாகும், அன்புக்குரியவளால் ஏமாற்றப்படுவீர், கடவுள் பக்தி காணலாம். தொழில் ஸ்தலத்தில் அன்னியர் உதவி கிட்டும். புதிய தொழில் துறை லாபகரமாகும்.

**கடகம்**

உமது திட்டம் சதிகாரரால் உருக்குலைக்கப்படும். தன்னிறைவு காண இடமில்லை. வரவிற்கு மிஞ்சிய செலவு. வகையாக எதிரிகளிடம் மாட்டிக்கொள்வீர். கட்டிடவேலைகள் ஆரம்பமாகும்.

**சிங்கம்**

அதிஷ்டலாபம்உண்டென எதிர்பார்ப்பீர். எதிர்மாறுகச் செலவினம் பன்மடங்கு அதிகரிக்கும். பிள்ளைகளாலேயே ஏமாற்றப்படுவீர். பெண்வழி நாட்டம் தீமை பயக்கும். மன அமைதி குறைவுபடுகின்றது.

**கன்னி**

வாழ்வில் சிக்கல்கள் குறைவுபடும்நிலை தென்படுகின்றது. மாதா வழியாரிடைநாட்டம் உண்டாகும். உமது உடல்நிலையையே சீர்படுத்தப் பணம்அதிகமாய்த் தேவைப்படும். காதல்வகை ஈடுபாடு தீவிரமடையும். தொழிலில் பலிதம் காண்பீர்.

**துலாம்**

போகுமிடமெல்வாம் எதிர்ப்பு தொல்லை உண்டு பெண்ணொருத்தி சினேகம் உண்டாகிச் சிறு சாந்தி கொடுக்கும். தனிவழிப்பிரயாணம் தீது இல்லத்தில் மங்கல நிகழ்ச்சி இடம் பெறும் குடும்பத்தாருடன் யாத்திரை போக அமைவுண்டு

**விருச்சிகம்**

சகல கலைகளிலும் நாட்டம் அதிகரிக்கும். அரசியல் வகைஈடுபாடு கஷ்டநிலையை உருவாக்கும். அவ்வழி செலவும் அதிகரிக்கும். புத்திரப்

(14 ம் பக்கம் பார்க்க)

## லெனினின்

[11ம் பக்கத் தொடர்ச்சி]

பதிவுசெய்யப்படவில்லை. ஆகவே அவர்களின் பேச்சைப் பற்றிய விபரங்கள் நமக்குத்தெரியவில்லை. ஆனல் லெனின் இந்தியாவின் நிலைமை பற்றி அறிந்து கொள்ள ஆவலாக இருந்தார் என்றுயூகிக்கஇடமிருக்கிறது. உதாரணமாக, அவர் இந்திய மக்களின் தேச விடுதலை இயக்கம் பற்றிய புத்தகப்பட்டியல் ஒன்றைத் தயாரித்துக் கொடுக்குமாறுவந்திருந்தவரைக்கேட்டுக்கொண்டிருக்கிறார். பிப்ரவரி 16-ம் தேதி அப்துராபிடமிருந்து புத்தகப்பட்டியலைப் பெற்றிருக்கிறார் லெனின்; அதை அவர் மறுநாளே தம்செயலாளரிடம்கொடுத்து எல்.பி. கிராசினுக்குஅனுப்பி புத்தகங்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளார். அக்குறிப்பில் "அப்துராபிடமிருந்து 1921 பிப்ரவரி16ல் வாங்கி, 1921 பிப்ரவரி 17ல் கிராஸினிடம் கொடுக்கப்பட்டது" என்றுஎழுதியிருக்கிறார். லெனின் ஆர்வம் காட்டிய 35 புத்தகங்களில் "காந்தியின் வாழ்க்கையும் அவரது சொற்பொழிவுகளும்" என்ற புத்தகமும், மற்றும் அவரது இந்திய சுயஆட்சி, ஒத்துழையாமை இயக்கம் பற்றிய புத்தகங்களும் இருந்தன. லெனின் இப்புத்தகங்களைத் தேர்ந்தெடுத்தது, அவருக்கு இந்தியப் பிரச்னைகளில் இருந்த ஈடுபாட்டையும், காந்தியின் தத்துவங்கள், நடவடிக்கைகளிலிருந்த ஈடுபாட்டையும் காட்டுகிறது.

## தேன்சிந்தும் மொழி தமிழ்

(12ம் பக்கத் தொடர்ச்சி)

ளில் பேராசிரியராகவிருந்த இவர் சைவசித்தாந்த நூல்களை ஜேர்மன் மொழியில் பெயர்த்து வெளியிட்டார். கலாநிதிப்பட்டப் படிப்புப் படிக்கும் இந்திய மாணவர்கள் இந்நூலை இன்றும்பயன் படுத்துகிறார்கள். மற்றும் திருவாதவூரர் புராணம், மாணிக்க வாசகர் பாடல்கள், பெரியபுராணம், காரைக்காலம்மையார் பாடல்கள், ஆழ்வார்பாடல்கள் ஆகியவற்றையும் இவர் ஜேர்மன் மொழியில் பெயர்த்து இந்திய தத்துவங்களையும் புராண வரலாறுகளையும் ஜேர்மனியர் அறியும் படிசெய்தார். இந்தியா பற்றி 5க்கு மேற்பட்ட நூல்களையெழுதி வெளியிட்ட இவர் சிவஞானசித்தியார், விநாயகபுராணம், சிதம்பர மான்மியம் ஆகிய நூல்களின் மொழி பெயர்ப்பைப்புத்தகவுருவாக்க முன்னரே மரணமானர்.

### ஜேர்மன்தமிழ் பேராசிரியர்

இவரையடுத்து ஹலே பல்கலைக்கழகத் தமிழ் பேராசிரியராகக் கடமையாற்றிய பேராசிரியர் ஆர்னேலேயன் (Arno Lehmann) 1926—1934 வரை இந்தியாவில் தங்கியிருந்து லீப்சிக் மிஷனல் நடாத்தப்பட்ட இரு பரீட்சைகளில் சித்தியடையத்தக்கவகையில் தமிழைக் கற்றவர். பேராசிரியர் ஸோமெரஸ் (Schomerus) ஆலோசனைப்படி தாயுமானவர் பாடல்களைச்சீர்காழியில் இருந்து நன்கு கற்று ஒரு வரிகூடத் தவறவிடாது தம் மொழியில் பெயர்த்தார். திருஞானசம்பந்தர், சுந்தரர், அப்பர் ஆகியோரது பாடல்கள் சிலவற்றையும் மொழிபெயர்த்தார். முதலாவது முறையாக இந்தப் பாடல்கள் ஜேர்மன் மொழியில் இவராலேயே பெயர்க்கப்பட்டன.

### தமிழ் இடம்பெறும் பல்கலைக்கழகங்கள்

இன்று ஜேர்மனியில் தமிழும் மற்றைய திராவிட மொழிகளும் ஹலே (Hal'e) ஹம்பேர்க் (Hamburg) கோலோன்(Cologne) ஹெய்டல்பேர்க் (Heidelberg) மாபேர்க் (Marbung) ஆகிய நகரங்களிலுள்ள பல்கலைக் கழகங்களில் போதிக்கப்படுகிறது. இப் பல்கலைக்கழகங்களில் இந்திய கலாச்சாரக் கல்வி கற்பவர்களுக்கும் தத்துவக்கல்வி கற்பவர்களுக்கும் தமிழ் கற்பிக்கப்படுகிறது. இவற்றைக் கற்கும் பல மாணவர்கள் கலாநிதிப் பட்டப்படிப்பிற்கும் தங்கள் இறுதிப் பரீட்சைக்கும் இவற்றைப் பாடங்களாகக் கொள்கின்றனர். மற்றும் நகரங்களில் இருந்தும் தமிழ்க்கல்விபெற இப் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் செல்கிறார்கள்.

[தொடரும்]


REGAL JAFFNA
Daily
4-45, 7 & 9-45 p.m.
Pre poya, Poya 10-30 A.M
George Peppard
&
Gayle Hunnicut
in
P. J.
(Adults only)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Prepoya, Poya 4 shows
Clint East wood
&
Susan Clark
in
COOGAN'S BLUFF
(Adults only)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
ஜெமினி கணேசன்
நடித்த
எல்லோரும்
இந்நாட்டு மன்னர்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
ஜெமினி கணேசன்,
கே. ஆர். விஜயா
நடித்த
ராமு

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
ஹரிச்சந்திரா

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி, கே ஆர் விஜயா
நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி
நடித்த
திருடன்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த
தங்கச் சுரங்கம்
(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

மகத்தான 83-வது தினம்
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்





சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
மற்றும் பலர் நடித்த
தில்லானா மோகனம்பாள்


இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ்
இன்னும் பலர் நடித்த
பி. நாகிரெட்டி அளிக்கும்
நம் நாடு
(ஈஸ்ட்மென் கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிமொழி

சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள்; அதுவே சக்தியின் உற்பத்தி ஸ்தானம். விளையாடக் காலத்தைச் செலவிடு; அதுவே நிரந்தர இளமையுடன்வாழும் இரகசியம். படிக்க நேரத்தை எடுத்துக் கொள்; அதுவேவிவேகத்தின் மூலம். அன்பு செய்து அன்பைப் பெறக் காலத்தைச் செலவிடு; அதுவே கடவுள் அளித்த சலுகை. நட்புக்காக நேரத்தைச்செலவிடு; அதுவே ஆனந்தத்துக்கு வழி. சிரிக்க நேரத்தைச்செலவிடு; அதுவே ஆத்மாவின் இசை. கொடுக்கக் காலத்தைச் செலவிடு; அதுவே ஒரு நாளின் தன்னலமற்ற செயலுக்குக் கொடுத்த அவகாசம். உழைக்கக் காலத்தைச் செலவிடு; அதுவே வெற்றியின் விலை.

— ஒரு ஞானி




# மாவட்டசபை தவறியபோதிலும் ஏன் தொடர்ந்து ஆதரித்தோம்?

(2ம் பகக தொடர்ச்சி)

ந்த பல அங்கத்தவர்களுக்கு இச்சட்டத்தை எதிர்க்கும் தைரியத்தை தமிழ் காங்கிரசின் நிலை கொடுத்தது நாட்டிலும் அரசாங்கக் கட்சிக்குள்ளும்எழுந்த எதிர்ப்பைக் கண்ட பிரதமர் திரு. டட்லி சேனநாயகா மாவட்டசபை மசோதாவை கைவிட்டார்

### தொடர்ந்து ஆதரவளித்த காரணம்

எமது முக்கிய கோரிக்கையான மாவட்ட சபைகள் நாம் பெறத்தவறிவிட்ட போதிலும் பிரதமர் ஒப்புக்கொண்ட வேறு சில உரிமைகளைப் பெறும்பொருட்டு நாம் தொடர்ந்து அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்தோம். திருகோணமலையில் பூரணத்துவம்பெற்ற ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவுவதாகவும், தமிழ் மொழிச் சட்ட விதிகளை அமுல்நடத்துவதாகவும், பல காலம் புறக்கணிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தியில் விசேடகவனம் செலுத்திக் காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி, யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் பேட்டை, பூநகரித் தாம்போதி, கிழக்கு மாகாணத்தில் போக்குவரத்து வசதி அபிவிருத்திஆகியவை நிறைவேற்றப்படும் என்ற உறுதியின் பேரில் நாம் தொடர்ந்து ஆளும் கட்சியிலிருந்து வந்தோம்.

### எதிர்க்கட்சியில் நாம்

அரசாங்கத்தை நாம் ஆதரித்துவந்த பொழுதிலும் எமக்கு உறுதி கூறப்பட்ட பிரகாரம் திருகோணமலையில் பல்கலைக்கழகம் நிறுவவோ, தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்திசெய்யவோ அரசாங்கம் எவ்வித நடவடிக்கைக்கையும் எடுக்கத் தவறியது. அதே நேரத்தில் தமிழ் இனத்திற்கு பாதகமான பல காரியங்களில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டது.

இந்தச் சூழ்நிலையில் எமது கட்சியின் 11-வது மகாநாடு இந்த அரசாங்கத்தைத் தொடர்ந்து ஆதரிப்பதில் எவ்வித பயனுமில்லை என்று தீர்மானித்தது. நாம் எதிர்க்கட்சியில் தனித்தியங்கும் ஓர் கட்சியாக அமைந்தோம்.

கடந்த 5 ஆண்டுகளாக நாம் அடைந்த அரசியலனுபவம் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகள்கட்டுப்பாடான ஒரு கட்சியின் உறுப்பினர்களாக இருக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் காட்டுகின்றது. தமிழ்பேசும் மக்கள் தமது அன்ருட அலுவல்களை ஓரளவிற்கு நிர்வகிக்கக்கூடிய மாவட்டசபை அமைப்பை நாம் பெறத் தவறியதற்கும் எமக்கு ஓர் பூரணத்துவம் பெற்ற பல்கலைக்கழகத்தைப் பெறத் தவறியதற்கும் பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகளிடையே நிலவிய ஒற்றுமையின்மை பெருங்காரணமாகும். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஒரேகுரலோடுபாராளுமன்றத்தில் பேசவேண்டுமென்பதை எமக்கு மாறுபட்ட அரசியல் கருத்துக்கொண்டவர்களும் ஏற்றுக்கொள்வர். அப்படி சாதி மதபேதமின்றி வடக்கு கிழக்கு மலைநாடு என்ற வித்தியாசமின்றி தமிழ் பேசும் மக்களை கடந்த 20 ஆண்டுகளாக இணைத்த அரசியல் இயக்கம் இலங்கைத் தமிழரசுக்கட்சி ஒன்றே.

இலங்கைத் தமிழரசுக் கட்சி நடத்திய [illegible]ளின் பலனாக

(1) தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமையை உருவாக்கியிருக்கிறோம்.

சாதியினால், பிரதேசத்தினால், சமயத்தினால் எம்மைப் பிளவுபடுத்த மீண்டும் முயற்சிகள் தலைதூக்கி நிற்கின்றன. இந்துப்பல்கலைக்கழகமென்றும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமென்றும், மட்டக்களப்பு பல்கலைக் கழகம் என்றும் இடத்திற்கேற்ற விதமாக சந்தர்ப்பவாதிகள் குரல் எழுப்புகின்றனர். இப்பிரிவினை சக்திகளுக்கு இடம்கொடுக்காது இனத்தின் ஒற்றுமையைக் கட்டிக் காக்கதமிழரசுக்கட்சி என்ன தியாகமும் செய்யத் தயாராய் இருக்கின்றது.

(2) தமிழ் மக்கள் மத்தியில் தாம் ஒரு தேசிய இனம் என்ற உணர்ச்சியையும் நமது தனிப் பிரதேசத்தை பாதுகாக்கவேண்டுமென்ற உணர்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கின்ரேம்.

3) தமிழ்மொழியும் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பூமியையும் பாதுகாக்க நாம் நடத்தியபோராட்டங்களும்;கிளர்ச்சிகளும் குறிப்பிடத்தக்கபலனை அளித்தே இருக்கின்றன.

இந்நாட்டு மககளெல்லோருக்கும் சுதந்திரம், நீதி பூரணவேலைவாய்ப்பு, சிறந்த வாழ்க்கைத்தரம் இவற்றை அடைவதற்கு இலங்கைத் தமிழ்பேசும் மக்களாகிய நாம் எமது சிங்களசகோதரர்களுக்கு பரிபூரண ஒத்துழைப்பை நல்க என்றும் ஆயத்தமாக இருக்கின்ரேம். தன்மான உணர்ச்சியுள்ள சகோதரர்களாக நாம் அவர்களுக்கு நேசக்கரப் நீட்டுகிரேம்.

## உங்கள் இராசி ...

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருக்கம் உண்டெனினும், புத்திரர் நோய்வாய்ப்படுவர். தொழில் ஸ்தலத்தில் சுமுகநிலை காண்பீர்.

**தனு**

தீயார் சினேகம் பொல்லாதது. எதிரிகள் திடீர் தாக்குதல் செய்வர். இறை வழிபாடு, யாத்திரை ஏற்பட்டுத் தொல்லைகளைக் குறைவுபடுத்தும். உடலில் விஷநீர்பீடை தோன்றும். அன்புக்குரியவரால் சிறிது ஏமாற்றப்படுவீர்.

**மகரம்**

சமத்தொழில் விருத்தி காண்பீர். தொழிலுயர்ச்சி உண்டாகும். நெடுந்தூரப் பிரயாணம் நிகழலாம். பாலியல் குற்றம்புரிவதற்குமிடமுண்டு. காதல் ஈடுபாடு காண்பீர், வியாபாரிகட்கு உகந்தகாலம். பெருந்தொழிலில் துணிவுடன் முதலீடு செய்யலாம்:

**கும்பம்**

திடீர்விபத்து உண்டெனக் கோள்கள் வலியுறுத்துகின்றன. பிரயாணத்தில் கஷ்டநிலை தோன்றலாம். ஓரளவு வருவாயுண்டு. ஆயினும் பணம் பற்ருக்குறைதான். வயது முதிர்ந்த சிலர்க்கு இது கண்ட காலமாகவே அமைவதாயுள்ளது.

**மீனம்**

கற்ருரால் கௌரவிக்கப்படுவீர். காதல் வாழ்வில் வெற்றியுண்டு. நிம்மதி காண்பீர். திடீர் அதிஷ்டமே உம்மை நாடிவரலாம். தாய்மாமன் வகையால் சிறு கண்டநிலை காண்பினும் கெடுதல் செய்வதற்கில்லை. குடும்பத்துடன் யாத்திரை போகவும் அமைவுஉண்டு.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 3-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சுவீப்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

| | |
|---|---|
| 12 L 0695 | 09 L 0268 |
| 22 L 0800 | |
| 30 M 0034 | 09 O 0298 |
| 10 M 0145 | 08 O 0639 |
| 14 M 0371 | 22 O 0979 |
| 16 M 0149 | 22 O 0795 |
| 24 M 0160 | 29 O 0941 |
| 20 M 0803 | 22 O 0486 |
| 22 N 0476 | 04 P 0007 |
| 07 N 0598 | 04 P 0069 |
| 26 N 0448 | 14 P 0064 |
| 24 O 0479 | 11 P 0595 |
| 16 O 0742 | 21 P 0290 |
| 28 Q 0057 | 03 Q 0355 |
| 11 Q 0176 | 18 Q 0259 |
| 14 R 0703 | 02 R 0643 |
| 07 R 0120 | 03 R 0336 |
| 17 S 0184 | 10 S 0692 |
| 04 S 0579 | 05 S 0128 |
| 12 S 0251 | 01 S 0557 |
| 01 S 0024 | |
| 18 T 0827 | 24 T 0341 |
| 21 T 0031 | 05 T 0014 |
| 19 U 0663 | 21 U 0959 |
| 06 U 0834 | 03 U 0974 |
| 09 U 0052 | 24 U 0199 |
| 15 V 0252 | 12 V 0147 |
| 17 W 0932 | 24 X 0407 |
| 08 X 0074 | 06 X 0480 |
| 01 X 0490 | 15 Y 0821 |
| 04 Y 0905 | 23 Z 0448 |
| 16 Z 0114 | 19 Z 0853 |
| 09 Z 0375 | 15 Z 0943 |

(இவை யாவும் உறுதிப் படுத்தப் படவேண்டியவை)

# உடுப்பிட்டித் தொகுதிக்கு சிறிமாவோ செல்வாரா?

யாழ்ப்பாணம், திகதி

வடபகுதிக்கு முதல் தடவையாக வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா உடுப்பிட்டித்தொகுதியில்தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் கலந்துகொள்வதுபற்றி இன்னும் முடிவு செய்யவில்லையெனசுதந்திரக்கட்சிவடபகுதி கிளை உறுப்பினர் ஒருவர் நேற்று நமது நிருபரிடம்தெரிவித்தார்.

உடுப்பிட்டித் தொகுதியில் கூட்டாட்சி கட்சிகளான கம்யூனிஸ்ட்கட்சியும், சமசமாஜ கட்சியும் போட்டியிடுகின்றன. கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் போட்டியிடும் திரு. பொன். குமாரசாமியையா அல்லது சமசமாஜக் கட்சி சார்பில் போட்டியிடும் திரு. ஆர். ஆர். தர்மரத்தினத்தை அதரித்தா பிரசாரம் செய்வார் என்பது இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இரு கட்சியினரும் தங்கள் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி தனித்தனியாக, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் கோரியிருப்பதாகத் தெரியவருகிறது

உடுப்பிட்டி தொகுதியில் கூட்டாட்சி கட்சிகளான கம்யூனிஸ்ட கடசியும், சமசமாஜ கடசியும் போட்டியிடுவதால், சில சமயம், வடபகுதிக்குவரும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உடுப்பிடடித் தொகுதிக்குச் செல்லாமல் விடடுவிடுவார் என்றும் கூறப்படுகிறது.

வடபகுதியில் கோப்பாய், காங்கேசன்துறை தொகுதிகளில் நடக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் திருமதி சிறிமாவோ கலந்து கொள்வார்

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வடபகுதி விஜயத்தின் நிகழ்ச்சிநிரலைத் தயாரிப்பதற்காக நேற்று சுதந்திரக்கட்சி வடபகுதிக் கிளை உறுப்பினர்கள் கொழும்பு சென்றுள்ளார்கள். திருமதி சிறிமாவின் வடபகுதி விஜயம் பற்றிய நிகழ்ச்சி நிரல். இம்மாதம் 6 ம் தேதிக்கு முன்னர் தயாரிக்கப்படடுவிடுமென்றும் கிளை உறுப்பினர் தெரிவித்தார்.

இம்மாதம் 10-ம் தேதிக்கும் 20-ம் தேதிக்குமிடையில் திருமதி சிறிமா பண்டாரநாயகா வடபகுதிக்கு விஜயம்செய்வார் என்றும் அவர் தெரிவித்தார்.

### தேவை

கடைச்சல் வேலை கம்மாலை வேலை வெல்டிங் வேலை (Cas & Etectric) தெரிந்தவர்களும் மோள்டர் (Moulder) (F) விற்றர் (Fitter) வேலை தெரிந்தவர்களும் உடனே தேவை. நற்சாட்சிபத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 2202 C/o 'ஈழநாடு' யாழ்ப்பாணம், 2202

### விற்பனைக்கு

உன்னதநிலையில் E L. போட் சொன்சல். மானிப்பாய் சுகாதாரக்கந்தோருக்கு அருகில் பார்வையிடலாம். 2117



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த லாசறஸ் தம்பு தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் குணநாயகத்திற்கும், யாழ்ப்பாணம் ச. அ. இராசேந்திரத்தின் புத்திரி பபியோலாவிற்கும் சென்ற 11-4-70ல் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org